208583

ஆனந்த விகடன்
28.11.43.

C

JL
m, N26AV
N43.
208583.

ஆனந்த விகடன்

28.11.43

349

# ஆனந்த விகடன்

9

28, NOVEMBER 1943

விலை அணா நான்கு


THE REGISTRAR OF BOOKS
2 DEC 1943
MADRAS

349





ANANDA VIKATAN MADRAS

...ீபத்தில் சென்னை சர்க்கார் வெளியிட்ட அறிக்கைக்கும், இவர்கள் 'புட்டி'களைத்
...க்கிக்கொண்டு போவதற்கும், சிறிதும் சம்பந்தம் இருப்பதாக நமக்குத் தோன்ற
...கிள. [illegible]



## சருமத்தை மென்மையாகச் செய்யுங்கள்

பியர்ஸ் சோப்பினுல் அழகுண்டாக்கும் முறை மிக சாதாரண மானதே. அந்த முறையால் சருமத்திற்கு சுத்தமும், மென்மையும், ஆரோக்கியமும் புத்துயிரும் உண்டாகிறது. கைதேர்ந்த முறையால் தயாரிக்கப்படுவதால் அது மிகவும் சுத்தமாகவும், சருமத்திற்குள் வெகுதூரம் சென்று சுத்தப்படுத்தக் கூடியதாகவும் இருக்கிறது. பியர்ஸின் அதிக நுரை அழுக்கையும், சருமத்தின் அழகைக் கெடுக்கக்கூடிய அசுத்தங்களையும் அடியோடு நீக்குகிறது. சருமத்தை மிருதுவாக்கக்கூடிய கிளிஸரின் பியர்ஸ் சோப்பில் கலந்துள்ளது. பியர்ஸ் சருமத்திற்கு புத்துயிரளிக்கக்கூடியது. பியர்ஸ் உபயோகித்தவுடன் சருமத்தில் ஒருவித உணர்ச்சி ஏற்படுவதுடன், அழுக்கு அசுத்தம் முதலியவை சேராததால் அதிக அழகும் உண்டாகிறது. இது தவிர சருமத்தைவிட்டு அகலாத ஒரு நறுமணமும் ஏற்படுகிறது. தினந்தோறும் தவறாது பியர்ஸ் சோப் உபயோகியுங்கள்.




Pears Soap

TG. 19—30—85 TM

A. & F. PEARS LIMITED, ISLEWORTH, ENGLAND.



## ஸ்ரீமதி என். ஸி. வஸந்தகோகிலம் இசைத்த புதிய ரிகார்டு



குழலோசை
ஆசைகொண்டேன் வண்டே } N. 18217

எல்லா "எச்.எம்.வி." வியாபாரிகளிடமும் கிடைக்கும்

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

சிறந்த சங்கீதம் — சிறிய ஒலிப்பதிவு

நீண்டகாலம் உபயோகிக்கக் கூடிய "எச். எம். வி."
— ஹைபிடெலிடி ஊசிகள் —

ஒரு ஊசியினுல் பல ரிகார்டுகளைப் பாட வைக்கலாம்

10 ஊசிகளடங்கிய பாக்கெட் 1-க்கு விலை ரு. 2-4.

1—2811


இவர்கள் எங்கே?
ஸீதா
ஸாவித்திரி
ஊர்மிளா
சகுந்தலா
புருஷர்களுக்கு சாப்பாட்டு விஷயத்திலுள்ள
கவலை கொஞ்சமுமில்லை யென்பது அவர்களுக்
குத்தெரிந்த விஷயந்தானே! அதனால்தான்,
அவர்களெல்லோரும் சமையலறைக்குப் புதிய
உத்ஸாகத்துடன் சென்றுவிட்டார்கள். இந்த
உத்ஸாகத்துக்குக் காரணமென்ன? காமதேனு
வனஸ்பதி கிடைத்ததுதான். ஏனெனில்
காமதேனு சிறந்த சமையலுக்குத் தேவை
யான சகல குணங்களையும் கொண்ட
பொரியல் சாதனம். காமதேனு மணமற்
றிருப்பதால் சமைக்கும் பதார்த்தங்
களின் சுயமணம் மாறுவதில்லை; அத
னால் சமையல் திறமையை நன்றாக
எடுத்துக் காட்டமுடிகிறது. அதை
உபயோகிப்பதால் சிக்கனமும்
உண்டு; நெய், வெண்ணெயைப்
போன்ற குணமுள்ளதாயினும்
விலையில் மட்டும் மலிவு.
சிறந்த சமையற்காரர்கள் வேண்டுவது
காமதேனு
வனஸ்பதி
தயாரிப்பவர்கள்
மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்
மேட்டூர்டாம்
தென்னிந்தியா
KVK 4 7


"மெகானிக்"
களை கேளுங்கள்
ஒரு சாமானின் சிறிய பாகங்களின்
வேலைப்பாடு எவ்வளவுக் கெவ்வளவு
நேர்த்தியாக இருக்கிறதோ அவ்வளவுக்
கவ்வளவு அது அதிக நாள் உழைக்கும்.
அதனால் தான், நன்கு வன்மை யூட்டப்
பெற்று, நேர்த்தியாக சாணை பிடிக்கப்
பட்டிருக்கும் கில்லெட் பிளேடின் முனை
குறைந்த செலவில் சிறந்த க்ஷவர சுகத்தை
அளிக்கிறது. இப்பொழுது முக்கியம்...
Gillette
கில்லெட் எக்கை மீத்துகிறது

# முதுகு வலி

## 3 மணி நேரத்தில் மறைந்தது

---

உங்கள் முதுகிலும், அள்ளைகளிலும் கொஞ்சமாக ஓயாமல் வலியிருந்து கொண்டேயிருக்கிறதா? அல்லது வலி ஈட்டியால் குத்துவதுபோல் பொறுக்க முடியாமல் இருக்கிறதா? சாதாரண மருந்துகளால் இந்த வலியைப் போக்க முடியாது. ஏனெனில் இதற்கு மூத்திரக் காய்களிலுள்ள கிருமிகள் கொல்லப்படவேண்டும். மூத்திரக்காய், மூத்திரப்பை கோளாறுகளினால் விளையும் இதர உபாதைகள்: அடிக்கடி எரிச்சல் மிகுந்த சிறுநீர்ப் போக்கு, இரவில் தூக்கம் கலைந்து விழித்தெழுதல், கால்களில் வலி, இடுப்பு வலி, தைரியமின்மை, தலைவலி, மயக்கம், கீல்வாதம், பசியின்மை, பலஹீனம், கணுக்கால் வீக்கம் முதலியன. ஸிஸ்டெக்ஸ் (Cystex) இவைகளின் மூல காரணத்தைப் போக்கி இவ்வுபாதைகளை அடியோடு ஒழிக்கிறது. சாப்பிட்ட 24 மணி நேரத்திற்குள் வேலை செய்ய ஆரம்பித்து 8 தினங்களுக்குள் பூரண குணமளிக்கிறது. குணமில்லையேல் பணம் வாபஸ் என்னும் உத்தரவாதத்தின் கீழ் ஸிஸ்டெக்ஸ் (Cystex) விற்கப்படுகிறது. இன்றே வாங்குங்கள்! 24 மணி நேரத்தில் உபாதை நீங்கி 1 வாரத்திற்குள் பூரண குணம் பெறுவீர்கள். எங்கள் உத்தரவாதம் உங்களுக்கு ஆதாரம்.

**ஸிஸ்டெக்ஸ்**

மூத்திரக்காய் உபாதைகளுக்கும் கீல்வாதத்திற்கும.

இப்பொழுது 3 சைஸ்களில் விற்கப் படுகிறது. ரூ. 1/- ரூ. 2/4. ரூ. 4/8.

BD 16/5


---

## இப்போது நான் கண்ணாடி அணிய வேண்டுவதில்லை...



"என் நண்பர் ஸ்ரீ பி. பிர்ஜ்மோஹன் அகர்வால் கண்ணாடி யணிவதை அடியோடு விட்டு விடும்படியான நன்மையைச் செய்த ஆக்குலின் கண்களுக்கு ஒரு மாய மருந்தாகும்."

ஷியாம் பிகாரிலால்,
ஜாலந்தர்.




ஸகல கண்கோளாறுகளுக்கும் உலகிலேயே மிகவும் சிறந்த பரிகாரமான ஆக்குலினை உபயோகித்துத் திருப்தி யடைந்ததற்கு மேலேயுள்ள அத்தாட்சிப் பத்திரமே சிறந்த சான்றாகும். அதன் தொடர்ந்த உபயோகம் கண்களைச் சுத்தமாகவும் ஒளி பொருந்தியனவாகவும் செய்கின்றது. பல கொடிய போலிகளை வீழ்த்தி, ஆராய்ச்சியாளர்களால் நன்கு மதிக்கப்பட்டு 50 வருஷ காலமாகப் பிரசித்தி யடைந்துள்ளது. சோர்ந்து, நோயுற்ற கண்களுக்குச் சிறந்ததான டாக்டர் ஜெ. கட்லர்ஸ் ஆக்குலினை உபயோகிக்கத் தவறாதீர்கள்.

## டாக்டர் ஜெ. கட்லர்ஸ் ஆக்குலின்

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

ஸோல் டிஸ்டிரிபியூட்டர்கள்:
ஜே. எல். மாரிஸன் ஸன் & ஜோன்ஸ் (இந்தியா) லிட்.
தபால் பெட்டி 258, பம்பாய்.

---

## உத்ஸாகமாயிருக்கிறது - ஆனால் களைப்பு ஏற்படுகிறது!



நவீன வாழ்க்கைச் சக்கிரம அதி வேகமாய்ச் சுழலுகின்றது. அதன் கதியால் தூண்டப்பெற்று நீங்கள் தேக சிரமத்தையும் லட்சியம் செய்யாமல் ஓய்வின்றி உழைத்து முடிவில் அடியோடு தளர்ந்து பலமும், வீரியமும் குன்றி உத்சாகமற்றுப் போய்விடுகிறீர்கள். மேலும் இக்காலத்தில் எல்லா டாக்டர்களும் சர்வ சாதாரணமாக அறிந்துள்ள பசியில் ருசியின்மை, மூலம், வீரியசக்திக் குறைவு முதலிய கோளாறுகளோடு சில சமயங்களில் பாயும் படுக்கையுமாகக்கூட ஆகிவிடுகிறீர்கள்.

REGISTRAR OF BOOKS
2 DEC 1943
MADRAS

**காலமறிந்து காப்பாற்றிக் கொள்ளுங்கள்**

அளவுகடந்த உழைப்பினால் சோர்வுற்றுக் காரியம் மிஞ்சிப் போகும் வரை காத்திராதீர்கள். நாளையே அலெம்பிக்ஸ் நெர்விடோன் சிகிச்சை ஆரம்பியுங்கள். இந்த அற்புதமான டானிக் உங்கள் நரம்புத் தொகுதிகளுக்குள் புதிய சக்தியைப் பாய்ச்சித் திரும்பவும் உத்ஸாகத்துடன் முனைந்து வேலை செய்வதற்குரிய தேக வலிமையைக் கட்டாயம் அளிக்கும். நெர்விடோனின் அரிய பலமூட்டத்தக்க தன்மையின் முழுப் பிரயோஜனத்தையும் அடைய மருந்து சாப்பிட்டு வரும்பொழுது உங்கள் வேலைகளையெல்லாம் நிறுத்தி வைக்க வேண்டும்.

Alembic

## நெர்விடோன்




சோர்வைக் குறைக்கின்றது—வீரியத்தை அதிகரிக்கின்றது

அலெம்பிக் டிஸ்ட்ரிபியூடிங் ஏஜன்ஸி (மதராஸ்) 52,
அலன்சாலை ரோடு, மேலமெய்யூர், செங்கல்பட்டு.

**அலெம்பிக் கெமிகல் ஒர்க்ஸ் கோ., லிட்., பரோடா.**

நேர்த்தியான தோற்றம் கம்பீரத் தோற்றம் அணிவதற் கேற்ற யோக்கியதை நீடித்த உழைப்பு.

அரவிந்த்ஷர்ட்டிங்குகளும், டுவில்களும் நேர்த்தியான வேலைப்பாடுகளுக்கு பிரபலமானவை.

# அரவிந்த்

## ஷர்ட்டிங் & டுவில்

நேர்த்தியான துணிகள் வாங்க இக்குறியை உமது வழிகாட்டியாகக் கொள்ளவும்

அரவிந்த் மில்ஸ்

---

## மாமிச கோசத்திற்கு ஜீவனளித்து 24 மணி நேரத்தில் மீண்டும் யௌவனமளிக்கும் புதிய சிகிச்சை

பலஹீனம், நரம்புத் தளர்ச்சி, ரத்தம் கெடுதல், மறதி, இவைகளால் துயரப்பட்டு, இளமையிலேயே தேகம் சோர்ந்து விருத்தாப்பிய நிலைமையை அடைந்துள்ளவர்களுக்கு பிரபல அமெரிக்க டாக்டர் கண்டு பிடித்த இப் புதிய சிகிச்சை ஒரு வரப்ரஸாதமாகும். இந்த சிகிச்சையின் பலனாக மாமிச கோசத்திற்கு சக்தியையும், தேக, மனோ வன்மையையும் பெற்று, 8 நாட்களில் உங்கள் தேகத்தில் நல்ல ரத்தம் ஓடத் தலைப்பட்டு நீங்கள் ஒரு புது மனிதராவது நிச்சயம். இந்த வீட்டு சிகிச்சை, சுலபமாக உட்கொள்ளக்கூடிய மாத்திரைகள். ஆபரேஷன் இல்லாமலே புதியதொரு சக்தியையும், ஜீவனையும் 24 மணி நேரத்தில் அளிக்க வல்ல நிர்ப்பயமான சிகிச்சை.

**வை - டாப்ஸ் (Vi - Tabs)**

என்று வழங்கும் மாத்திரைகள். இது அமெரிக்காவெங்கும் அடைந்துள்ள பிராபல்யத்தின் காரணமாக இப்பொழுது பூரண குணமளிக்க உத்தரவாதத்துடன் விற்கப்படுகிறது. நீங்கள் பூரண குணமடைந்து உங்கள் தேகத்தில் புதியதொரு இளமையுந் தோன்றாவிடில் காலிப் பெட்டிகளை அனுப்பினால் பணம் வாபஸ்.

48 மாத்திரைகள் கொண்ட ஸ்பெஷல் பெரிய சைஸ் பாட்டில் விலை சொல்பம்தான். இத்துடன் பூர்ண

**வை-டாபஸ்** குண மளிக்க உத்தரவாதம்.

யௌவனத்தையும், வீர்யத்தையுமளிக்கிறது.

Ad. No. 25/1


---

REGISTRAR OF BOOKS
1943
MADRAS



# அழகின் தோற்றம்

எவ்வளவு எழிற்செல்வம் உங்கள் சருமத்தில் மறைந்திருக்கிறதென அறிவீர்களா? எளிதும் உறுதியுமான முறையில் மேனி முழுவதும் அப்பழுக்கற்ற அழகிய தோற்றமடைய ந. 2 வாசனை ஸோப்பினால் சருமத்தைக் கிரமமாய் பாதுகாருங்கள். அழகை வளர்க்கும் சிறந்த இயற்கைப் பொருட்களும், சரும போஷணைக் குகந்ததுமான தாவர எண்ணைகளும் ஆராய்ந்து சேர்த்துத் தயாரிக்கப்படும், எள்ளளவும் காரமற்ற கோத்ரெஜ் ந.2 ஸோப்பானது, விகாரமான குற்றங் குறைகளைத் தடுக்க இன்றியமையாத தூய்மையையும் ஆரோக்கியத்தையும் உங்கள் சருமத்திற்களிக்கும்.




**Godrej No. 2**

கோத்ரெஜ் ந. 1: கட்டியான ஸோப்புகளுக்குள் தலைசிறந்தது — உள்ளங் கவருமாறு மணம் சேர்க்கப்பட்டது — கிருமிகளைக் கொல்வது, அழகை வளர்ப்பது.

**கோத்ரெஜ்** சாவி மார்க் **ந. 2**

**ஸ்நான ஸோப்**

கோத்ரெஜ் ஸோப்ஸ், லிமிடெட்
மதராஸ் (164, பிராட்வே)
கோயமுத்தூர். (3, தாமஸ் வீதி)



இவ்விரு குழந்தைகளுக்கும்
அதன் சிறந்த குணம் தெரியும்

வுட்வர்ட்ஸ்
கிரைப் வாடர்
குழந்தைகளைப்
பாதுகாக்கிறது




**WOODWARD'S**
**GRIPE WATER**
*keeps baby well*

WWJ09-III TAM  W. WOODWARD LTD. LONDON, ENGLAN

LOCAL AGENTS:
T. T. KRISHNAMACHARI,
12/A, LINGHA CHETTY ST. :: G. T. MADR.





சிக்கனச்
செலவில்
நீங்கள் இன்ன
மும் வாங்கக்
கூடிய சிறந்த
குழந்தை
ஆகாரம்

Sunshine
Glaxo

உஷ்ணப பிரதே
சங்களுககு ஏறற
சிறநத குழநதை
ஆகாரம. எநத
சீதோஷண ஸதி
தியிலும புதுமை
யாகவும, கெடா
மலும இருககும.
தனிபபாலோ சர்
ககரையோ அவ
சியமிலலை வெந
நீரில சொடியில
தயாரிககலாம:
உஙகள குழநதை
கிளாக்ஸோவில
நனகு வளரும

G 2.

ஸன்ஷைன் கிளாக்ஸோ
எல்லா சிறந்த
கடைகளிலும் கிடைக்கும்






மாலை 18 ] [ மணி 48

Ananda Vikatan

நவம்பர் 28



எல்லோரும் இன்புற்றிருக்க
நினைப்பதுவே யல்லாமல்
வேறொன் றறியேன்
பராபரமே.

•


| | |
|---|---|
| அவனுக்குக் கிடைத்த பங்கு (படம்) | 10 |
| பஞ்சத்திற்குக்காரணம் | 11 |
| மண்டை வீக்கத்துக்கு மருந்து! (படம்) | 15 |
| யுத்த டயரி ... | 16 |
| துக்கடா ... | 18 |
| லோக சஞ்சாரம் ... | 19 |
| ஆடல் பாடல் ... | 21 |
| சௌந்தரம்மாள் ... | 26 |
| ஐம்பது வருஷங்களுக்கு முன் | 29 |
| மக்கள் குற்றம்......! (படம்) | 33 |
| தாசி நாகமணி ... | 35 |
| யோக சிகிச்சை ... | 42 |
| சர்க்கஸ் வேலை (பாலர் மலர்) ... | 44 |
| விகடன் பேச்சு ... | 46 |
| தியாகம் ... | 48 |
| மர்மம் என்ன? ... | 54 |
| சகுந்தலையின் காதலன் | 59 |
| "பகுத்தறிவு" 366 | — |
| "பகுத்தறிவு" 360 | முடிவு |


•

குறிப்பு:—"ஆனந்த விகட"னில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் காணப்படும் பெயர்களெல்லாம் கற்பனைப் பெயர்கள். அவை யாரையும் குறிப்பிடுவன வல்ல.




அவளுக்குக் கிடைக்கும் பங்கு

# பஞ்சத்திற்குக் காரணம்

"என்ன அக்ரமம்! என்ன அநியாயம்!" என்று சொல்லிக் கொண்டே ஸ்ரீமான் பொதுஜனம் உள்ளே நுழைந்தார். எழுத்து மும்முரத்திலிருந்த விகடர் நிமிர்ந்து பார்த்து, "அடாடா! நீங்களா? வரணும் வரணும்! என்ன விசேஷம்? யார் அக்கிரமம் செய்து விட்டார்கள்?" என்று கேட்டார்.

"ஆமாம். அக்ரமமாகத்தான் இருக்கிறது! அநியாயமாகவும் இருக்கிறது!" என்று பொதுஜனம் மறுபடியும் கூறினர்.

"ஸ்வாமி! கொஞ்சம் பதட்டத்தை அடக்கிக் கொண்டு, என்ன நேர்ந்ததென்பதைச் சொல்லுங்கள். யாராவது உங்களை பயமுறுத்தினர்களா? அல்லது, உங்களோடு சண்டை பிடிக்க ஆரம்பித்தார்களா? சமாசாரம் என்ன?" என்று விகடர் நயமாகக் கேட்டார்.

"வேறு ஒன்றுமில்லை. சென்ற இதழில் நீங்கள் எழுதிய தலையங்கத்தைப் பார்த்து......"

"என்ன? என்ன? அப்படி அக்கிரமமாக் நான் ஒன்றும் எழுத வில்லையே!"

"அட! உம்மைச் சொல்லலேங்காணும்! அந்த பிரிட்டிஷ் மந்திரிகளைத்தான் சொன்னேன். இந்தியாவின் ஜனத் தொகையை ஒன்றுக்கு 2½ பங்காகப் பெருக்கிச் சொல்லி, பஞ்சத்தையும் அதன் தலையில் தூக்கிப் போட்டார்களே, அந்த அக்ரமத்தைத் தான் சொல்லிக் கொண்டே வந்தேன்!" என்று பொதுஜனம் கூறினர்.

"ஸ்வாமி! பஞ்சத்துக்கு ஜனத் தொகை காரணமல்லவென்பதற்கு அவ்வளவு தூரம் கூடப் போக வேண்டியதில்லையே! ஒரு சிறு விஷயத்திலிருந்தே தாங்கள் தெரிந்து கொண்டிருக்கலாமே...!" என்றார் விகடர்.

"எப்படி?" என்று கேட்டார் பொதுஜனம்.

"1939-ம் வருஷத்திலே பஞ்சம் இருந்ததோ?"

"இல்லை."

"ஆனால் இப்பொழுதிருக்கும் ஜனத் தொகை தானே அப்பொழுதும் இருந்திருக்கிறது? அப்பொழுது மாத்திரம் ஏன் பஞ்சம் வரவில்லை?"

208583

பொதுஜனம் ஆச்சர்யப்பட்டு, "ஆமாங்காணும், இவ்வளவு தெளிவாயிருக்கிற ஒரு விஷயத்தில் அவ்வளவு அபாண்டமாகப் புளுகி யிருக்கிறீர்களே!" என்று சொல்லி விட்டு, "இந்தப் பஞ்சத்துக்கு ஜனத் தொகை காரணமில்லை யென்று தீர்ந்து விட்டது. பின்னே வேறு என்னதான் காரணம்?" என்று கேட்டார்.

"அதுதான் சென்ற வாரமே சொல்லியிருந்தேனே, அந்நிய ஆதிக்கம்தான் காரணமென்று!"

"ஊரிலேயானால் ஏதோ 'இன்பிளேஷன்' — பணம் பெருகிப் போயிடுத்து, அதனால் தான் பஞ்சம் என்கிறார்களே?"

"அந்தப் பணப் பெருக்கம் இருக்கிறதே, அது அந்நிய ஆதிக்கத்தினால்தான் ஏற்பட்டது!"

"அப்படியா! கொஞ்சம் விவரமாய்த் தான் சொல்லுங்களேன்!" என்று கேட்டுக் கொண்டே ஸ்ரீமான் பொது ஜனம் ஆசனத்தில் அமர்ந்தார்.

"பணப் பெருக்கத்தினால் எப்படிப் பஞ்சம் ஏற்பட்டது என்பதை விவரிப்பதற்கு முன்னால் பணப் பெருக்கம் என்றால் என்ன என்பதைச் சொல்லி விடுகிறேன். மனிதனுக்கு வீக்கம் என்ற வியாதி வருவதுபோல் 'கரன்ஸி' நோட்டுகளுக்கும் இந்த வீக்கம் என்ற வியாதி ஏற்படுகிறது! இந்த தேசத்தில் 1939-ம் வருஷம் புழக்கத்தில் இருந்த ரூபாய் நோட்டுகள் மொத்தம் 180 கோடி. ஆனால் இந்த 1943-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் புழக்கத்தில் இருக்கும் ரூபாய் நோட்டுக்களோ 780 கோடி!" என்று விகடர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே ஸ்ரீமான் பொதுஜனம் குறுக்கிட்டு, "இப்படி நோட்டுகள் பெருகி எல்லோரிடமும் நிறையப் பணம் இருப்பது நல்லதுதானே?" என்று கேட்டார்.

"நல்லதுதான்.....ஆனால், எப்போது நல்லது? பணம் பெருகிய அளவுக்கு நாட்டில் உள்ள பொருள்களும் பெருகி யிருந்தால் நல்லதுதான். பொருள் உற்பத்தி மட்டும் ஒரே நிலைமையில் இருந்து பண உற்பத்தி மட்டும் அதிகரித்து வந்தால் பொருள்களின் விலை ஏறிக் கொண்டே வரும். இந்த நிலைமையைத்தான் பணப் பெருக்கம் என்று சொல்லுவார்கள்."

"பணப் புழக்கம் ஜாஸ்தியானால் பொருள்களின் விலை ஏறத்தான் வேண்டுமென்பது என்ன அவசியம்?"

"நாட்டில் பணப் புழக்கம் அதிகமாகவும் பொருள்கள் குறைவாகவும் இருக்கும் சந்தர்ப்பத்தில் திடீரென்று வெளியிலிருந்து பொருள்களுக்கு கிராக்கியும் ஏற்பட்டு விடுமேயானால் வியாபாரிகள் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு விலையை ஏற்றி, பொருள்களை வாங்க முன் வருவார்களல்லவா? அப்படி நடந்ததால்தான் நம் நாட்டின் பொருள் விலைகள் இப்பொழுது ஒன்றுக்கு மூன்றாகவும் அதற்கு மேலும் உயர்ந்து விட்டன.

"இப்படி விலை அதிகரிக்க அதிகரிக்க குறைந்த அளவில் வருமான முள்ளவர்களும் ஏழைகளும் வாழ்க்கைக்குத் தேவை



யான பொருள்களை வாங்க முடியாதபடி தவிக்க வேண்டியதாயிற்று.

"உதாரணமாக, ஒரு குமாஸ்தாவுக்கு மாதம் ஒன்றுக்கு 30 ரூ. சம்பளம். சாமான்களின் விலையோ 3 மடங்காக உயர்ந்துவிட்டது. அதே 30 ரூபாயைக் கொண்டு முன்பு வாங்கிய சாமானில் மூன்றிலொரு பங்குதான் இப்பொழுது அவனால் வாங்க முடிகிறது. அதாவது, முன்பு மூன்று வேளை சாப்பிட்ட ஒருவர், இப்போது ஒரே ஒரு வேளை சாப்பிட்டு வயிற்றைக் கழுவ வேண்டிய நிலைமைக்கு வந்து விட்டார். 30 ரூபாய் சம்பளம் வாங்கும் அவருக்கே இந்த கதி யென்றால், 10 ரூ. வாங்கும் கூலியாளின் கதி என்ன? முழு வயிற்றுக்குச் சாப்பிட்டவர்கள், இப்போது அரை வயிற்றுக்குச் சாப்பிடுவதும், அரை வயிற்றுக்குச் சாப்பிட்டவர்கள் அதுவும் கிடைக்காமல் பட்டினி கிடப்பதும் சகஜமாகி விட்டது.

"நமது தேசத்தில், மொத்த ஜனத் தொகையில் கூலிக்கு உழைக்கும் விவசாயிகளும், தொழிலாளர்களும், குமாஸ்தாக்களுமே, நூற்றுக்கு 70 பேராக இருந்து வருகின்றனர். இவர்களுக்கெல்லாம் நிரந்தர வருமானமோ மிகவும் சொற்பம். விலைகள் அதிகமாக ஏறியவுடனே இவர்கள்பாடு திண்டாட்டமாகிவிட்டது."

ஸ்ரீமான் பொது ஜனம் திகைத்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டே, "முன்பு இந்த ஏழைகள் வாங்கி வந்த பொருளில் இப்போது மூன்றில் ஒரு பங்குதானே அவர்களால் வாங்க முடிகிறது? அவர்களால் வாங்க முடியாத பாக்கி மூன்றில் இரண்டு பங்குப் பொருள் எங்கே போய் விட்டது?" என்று கேட்டார்.

"எங்கே போயிருக்கும்? நீங்கள்தான் சொல்லுங்களேன்? கையில் எவன் நிறைய நோட்டு வைத்துக் கொண்டிருக்கிறானோ அவன் தானே வாங்கிச் சென்றிருக்க வேண்டும்?"

"இவ்வளவையும் வாங்கி வைத்துக் கொண்டு அவன் என்ன செய்கிறான்?"

"கொஞ்சத்தைப் பதுக்கி வைத்துக் கொள்ளுகிறான்; கொஞ்சத்தை—திடீரென வெளியே யிருந்து ஒரு கிராக்கி ஏற்பட்டதென்று முன்பு சொன்னேனல்லவா? அந்தக் கிராக்கிக்கு—விற்று விடுகிறான்!"

"அப்பேர்பட்ட கிராக்கி எங்கேயிருந்து வந்தது?"

"இப்போது யுத்தம் என்று ஒன்று நடக்கிறதே, இதுதான் அந்த கிராக்கி. இந்த யுத்தத்தின் ஆரம்பத்தில் போரிலிறங்கிய நாடுகளில் பொருள் தேவை திடீரென்று அதிகரித்தது. எது இருந்தாலும் இல்லாமற்போனாலும், உணவுப்பொருள் இல்லாமல் யுத்தத்தை நடத்துவதென்பது இயலாத காரியம்! ஆகவே, யுத்தம் ஆரம்பமான மறு விநாடியே, பிரிட்டன் அவசர அவசரமாக உணவுப் பொருளையும் இன்னும் மற்ற யுத்த தளவாடங்களையும் சேகரிப்பதில் மும்முரமாக ஈடுபட்டது. தன்னுடைய விசுவாசமுள்ள சேவகனை இந்திய சர்க்காரை உடனேயே அழைத்து, 'தம்பி! உன் பேருக்குப் பல கோடி பவுன்கள் பெறுமான ஸ்டர்லிங் பத்திரம் எழுதி வைத்திருக்கிறேன். இந்த ஸ்டர்லிங் பத்திரங்களைச்

மாவரியமாக நினைத்து விடாதே! இந்தப் பத்திரங்களை வைத்துக் காண்டு, நான் ஏற்கெனவே கொடுத்துள்ள ஜாபிதா பிரகாரம் ந்திய மார்க்கெட்டில் பொருள்களை வாங்கிக் கப்பலில் ஏற்றி டு!' என்று கூறுகிறது. இந்திய சர்க்காரும் அதைக் கேட்டு, டனே குதித்துக் கொண்டு, தனது சேவகனான 'ரிஸர்வ் பாங்கை' அழைத்து, 'அடே! நம் எஜமானருக்குச் சரக்கு வேண்டுமாம். இதோ அவர் ஸ்டர்லிங் பத்திரத்தில் கையெழுத்துப் போட்டு அனுப்பியிருக்கிறார். இதை வைத்துக்கொண்டு, மள மளவென்று ரூபாய் நோட்டுகளை அடித்துப் போடு!' என்று உத்தரவு போடுகிறது. இந்திய சர்க்காரின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யப் போகும் தன்னுடைய பாக்யத்தை நினைத்து மகிழ்ந்து, ரிஸர்வ் பாங்கும் நோட்டு அச்சடிக்கும் யந்திரத்தை முடுக்கி விடுகிறது. அந்தமாதிரி முடுக்கி விட்டதன் பயன்தான் முன்பு 180 கோடி ரூபாய் நோட்டுகளா யிருந்தது, இப்பொழுது 780 கோடி ரூபாய் நோட்டு களாக மாறி விட்டது.


"இப்படிப் பணம் பெருகியும், இது ஜனங்கள் எல்லோரிடமும் சமமாகப்போய்ச் சேராமல், ஒரு சிலரிடமே போய்க் குவியத்தொடங்கிற்று. அதாவது, சரக்குகளை வாங்கி ஏற்றுமதி செய்யும் 'கன்டிராக்டர்'கள், பெரிய வர்த்தகர்கள், மில் முதலாளிகள் இவர்கள் கையிலேயே இந்த நோட்டுக்கள் நடமாடிக் கொண்டு வருகின்றன!"

இதுவரை கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த பொது ஜனம் குறுக்கிட்டு, "இந்த அநியாயம் எங்கேயாவது உண்டா? ஒன்று, இந்தப் பணப் பெருக்கத்தையே அடியோடு தடுக்க வேண்டும். அல்லது, பெருகிய பணம் ஒரு சாராரிடமே சுற்றிக்கொண்டிராமல் ஜனங்கள் எல்லோரிடமும் நடமாடும்படி செய்ய வேண்டும். இம்மாதிரி செய்வதற்கு ஏதாவது வழி உண்டா?" என்று கேட்டார்.


"வழி உண்டு. நாட்டின் க்ஷேமத்துக்கு ஏற்றபடி போதிய அளவுக்கு மட்டும் பணத்தைப் பெருக்கியோ அல்லது சுருக்கியோ பொருளாதாரத்தைக் காப்பது தேசிய சர்க்கார் ஒன்றினால் தான் முடியும். அயல்நாட்டு வர்த்தகம், பொருளாதாரம், பாதுகாப்பு, பொக்கிஷம் முதலிய ஜீவநாடி போன்ற இலாகாக்கள் அந்நியரால் நிர்வகிக்கப் படும்போது, இவ்விதப் பஞ்சத்துக்கும் பணப் பெருக்கத்துக்கும் பரிகாரம் ஏற்படும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

"தேசத்தின் நிர்வாகத்துக்கு உயிர் போன்ற இந்த இலாக்களின் முக்கியத்தை உணர்ந்துதான் நமது தலைவர்கள் இவற்றில் அதிகாரம் வேண்டுமென்று கேட்டனர். அதற்கு பதில் அவர்களுக்கு சிறைவாசம்தான் கிடைத்தது!" என்று விகடர் கூறவே, ஸ்ரீமான் பொதுஜனம் எழுந்திருந்து, "கிரிப்ஸ் திட்டத்தை நமது தலைவர்கள் நிராகரித்தது எவ்வளவு சரியான காரியம் என்பது இப்போதுதான் நன்றாகத் தெரிகிறது!" என்று சொல்லிக் கொண்டே விடை பெற்றுக் கொண்டார்!





பண வீக்கத்துக்கு மருந்து!




[நமது யுத்த நிருபர்]

**லெபனுன் அமளி ஓய்கிறது!**

லெபனுனில் குழப்பம் எல்லை மீறிப் போகும் நிலைமை அடைந்தது. ஆனால் அது எல்லையை மீறி விடாமல் பார்த்துக் கொண்ட பெருமையைப் பல நாடுகள் பகிர்ந்து கொள்கின்றன. ஜெனரல் காட்ரூ பிரூட்டுக்கு வந்தார்; பிரிட்டிஷ் மத்திய கிழக்கு மந்திரி காஸி பிரயத்தனங்கள் செய்தார்; பிரெஞ்சு கமிட்டிக்கு பிரிட்டிஷ் சர்க்கார் கார சாரமான கடிதம் ஒன்றும் எழுதியதாம். இவைகளின் விளைவாகவோ என்னவோ, சிறை செய்யப்பட்ட பிரஸிடெண்ட், பிரதமர், இதர மந்திரிகள் எல்லாரும் விடுதலை அடைந்து அவரவர்கள் காரியங்களைக் கவனிக்கின்றனர். நிலைமையும் ஓரளவு சமாதானத்துக்கு வந்திருக்கிறதாம்.

**ருஷ்ய அரங்கம்**


சமீப காலத்தில் முதல் தடவையாக ரஷ்யர்கள் பின்வாங்கி, ஷிடோமிரைக் காலி செய்தார்கள். நாஜிகள் அதைத் திரும்பப் பிடித்துக் கொண்டு, அதே வேகத்தில் கீவுக்கு வரவும் பார்க்கிறார்கள்.

நீப்பர் நதி வளைவில் ரஷ்ய பலம் பிரமாதமாகத்தான் இருக்கிறது. பிரிப்பெட் சதுப்பு நிலங்களின் பக்கத்தில் 150 மைல் போர் அரங்கத்தில் நாஜி சைன்யங்கள் பலியாகின்றன. பிரிப்பெட் - கீவ் - கோமெல் முக்கோணமே ரணகளமாகி யிருக்கிறது. நிகோபோலுக்கு முப்பது மைல் வட மேற்கிலும், கீவுக்கு மேற்கிலும், செர்க்காஸியிலும் பெரும் போர்கள் நடக்கின்றன. கெர்ச்சில் மீண்டும் ரஷ்யப் படைகள் இறங்கி யிருக்கின்றன.

**இதாலியில் நடப்பது**

பிரிட்டிஷ் - அமெரிக்கப் படைகளின் முன்னேற்ற வேகம் போதாது என்று ஸோவியத் பத்திரிகை ஒன்று சமீபத்தில் எழுதியது. உண்மையில், மழையின் காரணமாக ஐந்தாவது சைன்யத்தின் வேகம் மிகவும் தடைபட்டுத்தான் போயிருக்கிறது. பிரிட்டிஷ் எட்டாவது சைன்யம்தான் மத்திய இதாலியில் முன் சென்று கொண்டிருக்கிறது. கேந்திர ஸ்தானங்களான அல்படீனு, ஸான் ஆன்ஜிலோ இரண்டையும் அது கைப்பற்றி யிருக்கிறது. இஸெர்னியா - வாஸ்டோ சாலையில் அக்னேன் என்னும் இடத்தையும் பிடித்தது. ஸாங்ரோ நதிப் பக்கத்திலும் முன் சென்று வருகிறது.

ஜெர்மானியர் தங்கள் அணி வகுப்புக்களைப் பலப்படுத்திக் கொண்டு வருகிறார்கள் என்றும் தெரிகிறது. இப்போது இதாலியில் புதிதாகக் கனடாவிலிருந்து துருப்புகள் வந்திறங்கி யிருக்கின்றனவாம்.




**பஸிபிக் விவகாரங்கள்**

மத்திய பஸிபிக்கில் அமெரிக்க பலம் ஓங்கி வருவதைக் கண்டு ஜப்பானுக்கு பீதி பிறந்திருக்கிறது. அதுவும் சமீபத்தில் அமெரிக்கத் துருப்புகள் ஸாலமன் தீவுகளுக்கு ஆயிரம் மைல் வட கிழக்கில் இருக்கும் ஜில்பர்ட் தீவுக் கூட்டத்தில் மேகின் தீவைக் கைப்பற்றியதும், ஜப்பானுக்கு உதறலை எடுத்திருக்கிறதாம்.

நியூ கினியில் ஸாடெல்பர்க்கில் ஆஸ்திரேலியப் படைகள் தென்னந் தோப்புகளில் டாங்கிகளுடன் புகுந்து ஹதாஹதம் செய்கின்றனவாம். ரபாலிலும், காஸ்மாடாவிலும் அமெரிக்க விமானப் படை சக்கை போடு போட்டிருக்கிறது.

ஸாலமன் கூட்டத்திலே போகன்வில்லியில் ஜப்பான் பாடு கொஞ்சம் திண்டாட்டம் தானும்.

**சீனப் போர்**

மத்திய சீனவில் எண்பதினயிரம் துருப்புக்களைக் கொண்டு ஜப்பான் தாக்கிச் சிறிது முன்னேற்றமும் செய்து வருகிறது. ஜப்பானிய விமானங்கள் ஹ்யூபே மாகாணத்தில் தலைகாட்டின. சுக்கிங்கில் கூட விமான அபாய அறிவிப்பு இருந்தது.

**இதர செய்திகள்**

பெர்லின் நகரை பிரிட்டிஷ் விமானங்கள் மூன்று முறை சக்கையாய்த் தாக்கி யிருக்கின்றன. இன்னும் தொடர்ந்து தாக்கு மென்றும் தெரிகிறது. கோலோன், காஸெல் ஆகிய நகரங்களைப் போல் இதுவும் தரை மட்டமாக நேரிடலாம். மேற்கு ஜெர்மனி, வட பிரான்ஸ் பிரதேசங்களையும் நேச விமானங்கள் தாக்கின.

டோடிகானிஸ் தீவுக் கூட்டத்தில் பிரிட்டன் கைப்பற்றி யிருந்த தீவுகளில் காஸ், லீராஸ் இரண்டும் முன்பு போயின அல்லவா? இப்போது ஸாமாஸ் என்ற தீவையும் ஜெர்மானியர் ஆக்ரமித்துக் கொண்டார்கள். இதற்குக் காரணம் ஜெர்மன் விமான பலம் இங்கு சற்று அதிகமாகி யிருப்பதுதானும்.



# துக்கடா

● "இந்தக் காலத்தில் பஸ்களை நம்புவதில் பிரயோசனமே இல்லை."

—சென்னையில் ஒரு பிரயாணி.

கிடக்கிறது, தள்ளுங்கள், ஸார்!

● "சென்னையில் சுத்தமான பால் கிடைப்பது துர்லபமாகி வருகிறது என்று பல குடித்தனக்காரர்கள் குறை கூறுகிறார்கள்."

பால் காரர்களும் எவ்வளவோ சுத்த ஜலத்துடன் கலந்து தான் பாலைக் கொண்டு வந்து கொடுக்கிறார்கள்!

● "புதிதாகப் பிரசுரமாகும் ஒரு ஆங்கிலப் புஸ்தகத்துக்கு 'வெறும் குப்பை' என்று தலைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது."

எங்கே எல்லா ஆசிரியர்களும் இவரைப் போல் உண்மையை வெளியிடப் போகிறார்கள்!

● "வாங்கின பொருள்களுக்கு நாம் மட்டும் ஒழுங்காகப் பணத்தைக் கொடுத்து விட்டால் வியாபாரிகள் தாங்களாகவே நம்மைத் தேடி வருவார்கள்."

— வியாபாரக் கட்டுரை

பணத்தைக் கொடுக்கா விட்டாலுந்தான் தேடி வருவார்கள்!

● "ஒரே வாரத்திற்குள் இங்கிலீஷ் பாஷையைக் கற்றுக் கொண்ட வியாபாரி ஒருவர் சீமைக்குப் போயிருந்தபோது அங்குள்ளவர்களோடு பேசிப் பழகுவதில் ஒரு கஷ்டமும் படவில்லையாம்!"


— கட்டுரை

கஷ்டத்தை யெல்லாம் சீமையிலுள்ளவர்கள் பட்டிருப்பார்கள்!

● "பம்பாயைச் சேர்ந்த வைர வியாபாரியொருவர் வருங்காலத்தைப் பற்றி ரேகை சாஸ்திரியோடு பேசிக் கொண்டிருந்த போது அவர் சட்டையிலிருந்த வைரங்கள் களவாடப் பட்டனவாம்."

தினசரி.

சரிதான், அவருடைய கையை ரேகை சாஸ்திரி பார்த்துக்கொண்டிருந்த போது, பையை வேறொருவன் பார்த்து விட்டிருக்கிறான்!



"வர வர இந்த 'காந்தி-பாலிடிக்'ஸே எனக்குப் பிடிக்கிறதில்லை!"

"யாருக்குத்தான் பிடிக்கிறது! தேசத்திலே பஞ்சம் வரப் போறதுன்னு தெரிஞ்சுண்டுதான் அந்த மனுஷன் முன்னாலேயே போய் ஜெயிலிலே உட்கார்ந்துண்டுட்டாரே!"

# ஆடல் பாடல்

## மகாராஜபுரம் கச்சேரி

சில வருஷங்களுக்கு முன் சங்கீத உலகை ஒரு கலக்குக் கலக்கியவர் மகாராஜபுரம் விஸ்வநாதய்யர். அந்தக் காலத்தில் அதாவது, கோனேரி ராஜபுரம் வைத்தியநாதய்யர், புஷ்பவனம் போன்றவர்கள் சங்கீத சக்ரவர்த்திகளாக ஆட்சி புரிந்து கொண்டிருந்த காலத்தில், திடீரென்று முன்னணியில் தோன்றி அவர்கள் எல்லோரையுமே பிரமிக்கும்படியாகச் செய்துவிட்டார் என்றால், இவருடைய சங்கீதம் எப்படிப் பட்டதாயிருக்கவேண்டும்! கேட்டால் மகாராஜபுரம் பாட்டு கேட்கவேண்டும், இல்லாவிட்டால் சங்கீதமே கேட்கக் கூடாது என்று சொல்லுபவர்கள் இன்றைக்கும் நாளைக்கும் இருந்து வருகிறார்கள். சமீப காலமாக அவருடைய சாரீரம் சற்று இடைஞ்சல் செய்த போதிலும் அவருடைய அபார வித்வத்தும் மனோ தர்மமும் எங்கே போய் விடும்? அந்த அம்சங்களை எதிர் பார்த்தே அநேகர் அவருடைய கச்சேரிகளுக்குத் தவறாமல் போகிறார்கள். சாரீரம் சரியாக அமைந்து கொண்டாலோ, சொல்ல வேண்டியதே யில்லை!

சென்ற வாரம் ஜகன்னாத பக்த சபையில் அத்தகைய சங்கீதத்தைக் கேட்கும் அதிர்ஷ்டம் கிடைத்தது. பொறுக்கி எடுத்த ரஸிகர்கள், நாலு ஆவர்த்தம் சுரம் பாடக் கூடிய யோக்யதை உடையவர்களே சபையில் நிறைந்திருந்தார்கள்.




மகாராஜபுரம் விஸ்வநாதய்யர்

ஸ்திரீகள் பகுதியிலும் அப்படியே. எல்லாம் சங்கீத ரத்னங்கள், ரேடியோ நட்சத்திரங்கள். இப்படிப்பட்ட சதஸில் ஏன் கச்சேரி பிரமாதமாயிருக்காது? ஒரே சங்கீத வர்ஷமாகத்தான் இருந்தது.

அவருக்குக் 'காபிரைட்' ராகங்கள் என்று சொல்லப்படும் தர்பார் மோஹனம், கல்யாணி இவைகள் வரும்பொழுது அவைகளில் ஒருஅலாதி சோபை இருக்கத்தான் செய்கிறது. யோசனுகமலா என்ற தர்பார் ராகக் கீர்த்தனம் எடுத்தபொழுதே பாடகருடைய தர்பார் ஆரம்பமாய் விட்டது. கமாஸ் ராகத்தில் காகலி நிஷாதத்தைப் பிரயோகித்துப் பாடிய உடனே சபையில் ஒரு பரபரப்பு உண்டாயிற்று. ஆனல் 'புரோசேவாரெவருரா' என்று அந்த நிஷாதமுள்ள கீர்த்தனையையே பாடியதும் ரஸிகர்கள் திருப்தி அடைந்தார்கள். அடுத்தபடியாக சுத்த சாவேரி ராகத்தில் 'தாரிணி தெலிஸி கொண்டி' என்ற அபூர்வ கீர்த்தனையைப் பாடினர். இதனுடைய பல்லவியைப் பல விதமாக விஸ்தரித்து நிரவல் செய்து ஜமாய்க்கப் போகிருர் என்று எதிர் பார்த்தவர்களுக்கு ஐந்தாறு சங்கதிகளை மட்டும் பாடி விட்டு மீதியை மிருதங்கக்காரருக்கும் பிடில்காரருக்கும் ரஸிகர்களுக்குமே விட்டு விட்டார்.

கச்சேரியின் மத்தியில் பழம் புலி டைகர் வரதாச்சாரியார் வந்து சேர்ந்தார். அவரைக் கண்டதுமே பாடகர் 'பாரெங்கும் பார்த்தாலும் உம்மைப்போல் பரிமள புருஷன் கிடைக்குமோ' என்று பாட ஆரம்பித்து ஒரு கும்பிடு போட்டதும் சபையில் கொல்லென்று சிரிப்பும் குதூகலமும் உண்டாயின.

அன்றைய தினம் பக்க வாத்தியம் வி. ஆர். மணி பிடில்; கோதண்டராமய்யர் மிருதங்கம். மணி என்று பெயர் வைத்துக் கொண்டிருப்பவர்கள் மணியாய் வாசிக்கிருர்களா, அல்லது மணியாக வாசிக்கிறவர்கள்தான் மணியென்று பெயரை வைத்துக் கொள்கிருர்களா என்பது நமக்குத் தெரியாது. ஆனல் அன்று பிடில் வாசித்த வி. ஆர். மணி பிரமாதமாய் வாசித்ததோடு பக்க வாத்தியமென்ருல் எப்படி வாசிக்க வேண்டும் என்பதற்கு இனிமேல் அவரையே உதாரணமாகக் குறிப்பிடும்படியும் செய்து விட்டார்.

மிருதங்கம் வாசித்த கோதண்டராமய்யரோ பழைய புலி. அந்தத் தலைமுறையைச் சேர்ந்த பாடகர் பாடும்பொழுது அவருக்கு விசேஷ குஷி ஏற்படாமலிருக்குமா! அதனல் அவரும் ஜமாய்த்துத் தள்ளி விட்டார்.

ஒற்றுமையான பக்க வாத்தியங்களும் உற்சாகமான சங்கீதமும் நிறைந்திருந்த இந்தக் கச்சேரியைக் கேட்ட ரஸிகர்களில் சிலர் வெளியே போகும்போது 'மஹாராஜபுரத்திற்கு பாலியம் திரும்பி விட்டது' என்று சொன்னதில் ஆச்சரியமில்லை.

## பட்டம்மாளுக்குப் பட்டம்

இன்றைய தினம் கர்னடக சங்கீத உலகில் பாடகிகளுள் சாரீரம் சங்கீதம் இரண்டையும் சேர்த்துப் பார்க்கும் போது ஸ்ரீமதி பட்டம்மாள் முதன்மை ஸ்தானம் வகித்து வருகிருர். "பெண்கள் பாட்டு என்ன பாட்டு!" என்று துச்சமாகக் கூறும் சங்கீத வித்வான்கள் கூட அவருடைய வித்வத் திறமையை ஒப்புக்கொண்டிருக்கிருர்கள்.





கான ஸரஸ்வதி பட்டம்மாள்

சென்ற வாரம் பைன் ஆர்ட்ஸ் அக்காடமிக் காரர்கள் அவருக்கு "கான சரஸ்வதி" என்ற பட்டம் வழங்கியது சங்கீத ரஸிகர்களெல்லோர் சார்பாகவும் அளித்ததாகும். பட்டத்தைப் பட்டம்மாளுக்கு வழங்கிய டைகர் வரதாச்சாரியார், "ஸ்ரீமதி பட்டம்மாள், சங்கீதத்தை முறையோடு பயின்று முறையோடு கச்சேரி செய்கிருர். அவர் பாட்டிலுள்ள அழுத்தமும் இனிமையும், தானே அனுபவித்துப் பாடும் தன்மையும் நம்மை வசீகரித்துக் கொள்ளுகின்றன. சங்கீதத்தில் அவருக்கு இருக்கும் ஆற்றலுக்கு இந்தப் பட்டம் மிகவும் பொருத்தமானது" என்று சொன்னது சங்கீத ரஸிகர்கள் மனதையே பிரதிபலிப்பதாயிருந்தது. ஸ்திரீகள் சார்பாக இதை ஆமோதிப்பது போல் லேடி வெங்கட சுப்பராவ் ஒரு வெள்ளிப் பட்டயத்தை ஸ்ரீமதி பட்டம்மாளுக்கு அளித்து விட்டுப் பிரசங்கம் செய்யாமலேயே கரகோஷம் பெற்ருர். ஏற்கெனவே அரியக்குடி ராமானுஜய்யங்கார் பட்டம்மாளை "பாட்டம்மாள், பாடுபட்ட அம்மாள்" என்றெல்லாம் சிலேடையாக வர்ணித்திருக்கிருர். இனிமேல் பட்டம்மாளைப் பட்டம் பெற்ற அம்மாள் என்றும் சிலேடையாகச் சொல்லலாம்.

அன்று கச்சேரி 5-20க்கு ஆரம்பமாகுமென்று விளம்பரம் செய்யப்பட்டிருக்க, 5மணிக்கே ஸெயிண்டு மேரீஸ் ஹாலில் இடத்துக்கு நெருக்கடி ஏற்பட்டு விட்டது. ஆனல் மணி $5\frac{1}{2}$ ஆகியும் கச்சேரி ஆரம்பமாகவில்லை. அதற்குப் பதிலாக கரகோஷம் ஆரம்பமாகி விட்டது. ஆறு மணி சுமாருக்குப் பாடகியும் மிருதங்கக்காரரும் மேடையில் வந்து உட்கார்ந்தார்கள். இவ்வளவு தாமதத்திற்குக் காரணமாயிருந்த பிடில்காரரும் ஓடோடியும் வந்து அவசர அவசரமாக உட்கார்ந்து ஏக சத்தத்தினிடையில் கச்சேரியை ஆரம்பிக்க உதவினர். அதனல் முதல் இரண்டு பாட்டுக்கள் எல்லோருக்கும் சரியாகக் கேட்கவில்லை. கல்யாணி ராக ஆலாபனம் ஆரம்பித்த பிறகுதான் சபையில் சற்று நிம்மதி ஏற்பட்டது. "உன்னை எனக்குக் காட்டய்யா" என்ற பாட்டை வெகு நன்ருகவே பாடினர்.

[ இந்தப் பாட்டின் சாஹித்யம், முக்கியமாக பல்லவியில் அமைந்துள்ள சொற்கள், உயர்தரமானதாய் இல்லை என்று குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. ]

அன்று பல்லவி சங்கராபரணம். மிச்ர ஜம்பை தாளத்தில் பிரமாதமாக எடுத்தும் எதிர் பார்த்த அளவு விஸ்தாரமாகப் பாடவில்லை.

கான சரஸ்வதியின் கச்சேரியில் கரகரப்ரியாவைத்தான் முக்கியமாகக் குறிப்பிட வேண்டும்.

ராகத்தை வெகு அற்புதமாக ஆலாபனை செய்து 'பராமுக மேனையா' என்ற பாபநாசம் சிவன் கீர்த்தனையைப் பாடியது சபையோர் மனதைக் கவரும்படி யாக இருந்தது.

பட்டம்மாளின் துக்கடாக்கள் என்றாலே ரஸிகர்களுக்கு அலாதி பிரேமை. ஏனெனில், சாஹித்யச் சுவையை உணர்ந்து பாடுவதுடன் சாஹித்ய வியக்தமாகவும் பாடுவதில் பட்டம்மாள் பெயர் பெற்றவர். பாரதியாரின் "தொன்று நிகழ்ந்த தனைத்தும்" என்ற பாட்டை ரொம்பவும் ரஸித்தார்கள். 30 கோடி முகமுடையாள் என்று பாடியபோது இப்போது 40 கோடி ஆகி விட்டோம் என்று சபையோர்கள் தங்களுக்குள்ளேயே சொல்லிக் கொண்டதும் காதில் விழுந்தது. 'வில்லை முறிப்பவர்' என்ற ராமாயண பதத்தில் 'கோதண்டபாணியாம். தோளில் தூணியாம். நாவில் வாணியாம்' என்ற பிராசங்கள் வரும்பொழுது அவர் பாடிய விதமே ஒரு தனி பாணியாக இருந்தது. எந்தக் கச்சேரியிலாவது பட்டம்மாள் 'வள்ளிக் கணவன் பேரை'ச் சொல்லாமல் தப்பித்துக் கொண்டு விட முடியுமா? ஆகையினால் இவ்வளவு நாள் கழித்து பட்டம்மாளின் கச்சேரியைக் கேட்க வந்தவர்கள் வெகு நேரமாகவே அதைப் பாடும்படி வற்புறுத்திக் கொண்டேயிருந்தார்கள். கடைசியில் அவரைப் பாடவும் செய்து விட்டார்கள்.


அன்று கச்சேரி தாமதித்து ஆரம்பமானதால் உண்டான ஏமாற்றமோ என்னமோ சபையில் கடைசி வரையில் சற்று அமைதி குறைவாகவே இருந்தது. அடிக்கடி ஏதாவது இடையூறுகள் இருந்து கொண்டேயிருந்ததால் கச்சேரியை நிம்மதியாக ரஸிக்க முடியவில்லை. இந்த சந்தர்ப்பத்தில் பைன் ஆர்ட்ஸ் அக்காடமி நிர்வாகிகளுக்கும் ஒன்றிரண்டு வார்த்தைகள்: மேடையில் அடிக்கடி யாராவது குறுக்கும் நெடுக்குமாகப் போவதும், கச்சேரி மும்முரமாக வாய்க்கும் தருணத்தில் பேச்சுக் கச்சேரி நடத்துவதும், பிரமுகர்கள் உள்ளே வந்த பிறகு அவர்களுக்கு இடம் தேடிக் கொடுக்க அங்கும் இங்கும் உலாவுவதும், சங்கீத கச்சேரியில் ரஸிகர்கள் ஈடுபட்டு ரஸிப்பதற்குக் குந்தகமாயிருக்கின்றன. பிரசங்கங்களை கச்சேரி முடிவதற்குச் சற்று முன் வைத்துக் கொள்ளலாம். அல்லது, ஆரம்பத்தில் வைத்துக் கொள்ளலாம். பெரிய 'கான்ஸர்ட்' புரோக்கிராமுக்கு நடுவில் 10 நிமிஷம் 15 நிமிஷம் பேச்சுக்களை வைத்து ஜனங்கள் பொறுமையை சோதிக்கும் முறை ரேடியோவுக்கே பிரத்தியேகமாயிருக்கட்டும்!

## இளம் வித்வான் சடகோபன்

இப்பொழுதெல்லாம் சினிமா நடிகர்கள் சங்கீத மேடையில் 3½ மணி நேரம் பிடில் மிருதங்கத்துடன் கச்சேரி செய்வது வழக்கமாகி விட்டது. டாக்கி ஆரம்பத்தில் சங்கீத வித்வான்களெல்லாம் சினிமா மேடைக்குள் படையெடுத்தார்களல்லவா? அதற்காக இது பதில் போலிருக்கிறது.

திரையில் கிடைத்திருக்கும் பெயரினால் இவர்களின் கச்சேரிக்கு ஏராளமான கூட்டம் கூடி விடுகிறது. படத்தில் தெய்வங்களாகவும், அரசர்களாகவும், முனிவர்களாகவும் வருகிறார்களே, நேரில் எப்படியிருப்பார்கள், எப்படிப் பேசுகிறார்கள் என்று பார்க்க சினிமா விசிறிகள் ஆவலுடன் வருகிறார்கள்.

ஆனால் ஸ்ரீ சடகோபனை இந்த ரகத்தில் சேர்க்க முடியாது. உண்மையிலேயே அவர் சங்கீத வித்வான் கோஷ்டியில் சேர்ந்தவரே. சென்ற மாதம் ரஸிக ரஞ்சனி சபையிலும், சென்ற வாரம் கோகலே ஹாலிலும் அவர் கச்சேரியைக் கேட்டவர்கள் இந்த அபிப்பிராயத்தையே கொண்டிருக்க வேண்டும். "இவர் எதற்காக சினிமாவுக்குப் போயிருக்க வேண்டும்—சங்கீதத்திலேயே நல்ல 'சான்ஸ்' இருக்கிற பொழுது?" என்று ஒருவர் கேட்டார். "அதனால் தான் திரும்பி வந்து விட்டார்" என்று இன்னொருவர் பதில் சொன்னார்.




வி. வி. சடகோபன்

சாரீர மொன்றுக்காகவே ஸ்ரீ சடகோபன் கச்சேரியைக் கேட்கச் சொல்லலாம். அதோடு அவருடைய சிறந்த சங்கீத ஞானத்தையும் பார்க்கும் பொழுது, இப்பொழுது முன்னணியில் நிற்கும் இளம் வித்வான்களில் இவருக்கும் ஒரு முக்கிய இடம் 'ரிசர்வ்' பண்ணியாக வேண்டியிருக்கிறது.

அன்று கோகலே ஹாலில் அவருடைய கச்சேரி அவருக்கு ஒரு பெரிய வெற்றி. பியாகடை ராக ஆலாபனம் உயர்தரமாயிருந்தது. தியாகராஜாய நமஸ்தே என்ற தீக்ஷிதர் கீர்த்தனமும் அவருடைய வித்வத் திறமையை வெளிப்படுத்தியது. "ராம பஜனை செய்தால்" என்ற ராகமாலிகை திவ்யமாய் அமைந்தது.

இன்னும் சில நாட்களில் அனுபவம் பெற்று சங்கீதத்தில் சற்று மெருகும் ஏறிவிட்டால் ஸ்ரீ சடகோபனைக் கட்டிப்பிடிக்க முடியாதென்று இப்பொழுதே எச்சரித்து விடுகிறேன்.



# சௌந்தரம்மாள்

## 21

எஸ்.வி.வி.

**நா**ன் என்ன என்ன வெல்லாம் நினைத்துக் கொண்டிருந்தேன், எப்படி எப்படி எல்லாம் ஆச்சுது!

ஆத்துக்காரர் நல்ல வேலையில் இருக்கிறார். நூற்றிருபது ரூபாய் சம்பளம் வருகிறது; மூன்று கட்டு வீடு; ஒரு பிய்த்தலில்லை, பிடுங்கலில்லை; நான், எங்காத்துக்காரர் — இரண்டு பேர்கள்தான்; இரண்டு பேர்களுக்கும் இள வயசு; எப்படி எப்படியோ குஷியாகவும் ஆனந்தமாகவும் இருக்கப் போகிறோம் என்று மனக் கோட்டை கட்டிக் கொண்டிருந்தேன்.

முதல் தேதி, யானால் சம்பளத்தைக் கொண்டு வந்து நம்ம கையில் கொடுப்பார்; அதை வாங்கிப் பெருமையாய்ப் பெட்டியில் வைக்கிறதும் எடுக்கிறதுமாக இருக்கப் போகிறோம்; அவருக்கு வேண்டுமானால் அவர் திறந்து எடுத்துக் கொள்ளுவார். குங்குமம், சீப்பு, ரிப்பன், பூ என்று தெருவில் எது வந்து விற்றாலும் ஒருத்தரைக் கேட்காமல் நாம் போய்ப் பெட்டியைத் திறந்து எடுத்துக் கொண்டு வாங்குவோம். "ஒரு 'மப்ளர்' வாங்கலாமா என்று இருக்கிறேன், சௌந்தரம்! மூன்று ரூபாய் பணம் இந்த மாதம் இருக்குமா?" என்று அவர் கேட்பார். "எல்லாம் இருக்கும்; மூன்று ரூபாய் என்பது ஐந்து ரூபாயானாலும் வாங்கும்போது நல்லதாகவே பார்த்து வாங்கி விடுங்கள்" என்று மூன்று கேட்டதற்கு ஐந்தாய்க் கொண்டு போய்க் கொடுப்போம். "டிபனுக்குப் பணம் வைத்துக் கொண்டிருக்கிறீர்களா, நான் கொடுக்கட்டுமா?" என்று கேட்போம். "பார்த்தாயா; மறந்தே விட்டேனே! அவ்வளவுதான் என் ஞாபகம்; நீ இல்லாமற் போனால் என் தலையையே மறந்து போய் ஆத்தில் வைத்து விட்டுப் போய் விடுவேன், சௌந்தரம். நல்ல பெண் ஜாதி என்று ஒருத்தனுக்கு அகப்பட்டு விட்டால் அவன் இப்படித்தான் உதவாக் கரையாய்ப் போய்விடுவான்" என்று முகஸ்துதியாய்ச் சொல்லுவார். நமக்கு உச்சி குளிர்ந்துபோய், "முகஸ்துதி கிடக்கட்டும்; இந்தாங்கோ, இந்த ஒரு ரூபாயை எடுத்துக் கொண்டு போங்கள். நல்ல டிபனாய் வாங்கிச் சாப்பிடுங்கள்" என்று சொல்லிப் பெருமையாய்க் கொடுப்போம்; என்று இம்மாதிரி எல்லாம் திருவல்லிக்கேணிக்கு வருவதற்கு முன் எங்காத்தில் நானிருக்கும்போது ஆனந்தமாய் மனப்பால் குடித்துக் கொண்டிருந்தேன். இம்மாதிரி எண்ணங்களில் ஆழ்ந்திருக்கும் போது, நானே சிரித்துக் கொள்வேன். அவர் எதிரிலிருக்கிற மாதிரி என் முகத்தில் ஸல்லாபக் குறி ஏற்பட்டு ஒய்யாரப் பார்வையும் ஏற்பட்டு விடும். "என்னடி பயித்தியம் மாதிரி நீயே சிரித்துக் கொள்ளுகிறாய்?" என்று எங்கம்மா கூட எத்தனையோ தரம் கேட்டிருக்கிறாள். எப்படி எப்படியோ இருக்கப் போகிறோம் என்று எவ்வளவோ பெருமையா யிருந்தேன்.

என் மனதிற்குள் தனிக்குடித்தனமே பண்ண ஆரம்பித்துவிட்டேன்.



காலையில் ஆறு மணிக் குள்ளாகவே எழுந்து விடவேண்டும். எழுந்து காப்பியைப் போட்டு அவரைப் போய் எழுப்புவேன். "எழுந்திருங்கள்; எத்தனை நாழி தூங்குகிறது? உம். எழுந்திருங்கள்!" என்று அதட்டுவேன். "கொஞ்சம் இருடி. இன்னும் கால் மணியில் எழுந்து விடுகிறேன்" என்று கெஞ்சுவார். "கால் மணியாவது, அரை மணியாவது? காப்பி ஆறிப்போய் விடுகிறது. எழுந்திருங்கள்" என்று மேல் போர்வையைத் தூக்கித் தள்ளுவேன். எழுந்து காப்பி சாப்பிட்டாச்சுதானால் நான் சமையல் பண்ணும்போது பின்னாடியே சுற்றுக் காவிட்டுக் கொண்டிருப்பார். விளையாடிக் கொண்டே சமையல் பண்ணுவேன். நடுவில் குழந்தை அழுததானால் "கொஞ்சம் போய்த் தொட்டிலை ஆட்டுங்கள்" என்பேன். எல்லாம் அதிகார தோரணையிலேயே பேசுவேன். புருஷனை அதிகாரம் பண்ணும்படியான நிலைமை ஏற்படுவதைவிட பெண்மக்களுக்குப் பெருமை வேறெது இருக்கிறது! "என்னடியம்மா என்னையேவேலை வாங்குகிறாயே!" என்று சொல்லிக் கொண்டே தொட்டிலாட்டப் போவார்: நடுவில் "வெந்நீர் அடுப்பு எரிகிறதா அணைந்து விட்டதா போய்ப் பாருங்கள்" என்பேன். முணுமுணுக்கிற மாதிரி நடித்துக் கொண்டே வெந்நீரடுப்பைப் போய்ப் பார்த்து விட்டு வருவார். இதுகளை எல்லாம் நினைக்கிறபொழுது அவர் போகிற மாதிரியும் வருகிற மாதிரியுமாகவே என் கண்முன் இருக்கும்.

அவருக்கு சாப்பாடு போட்டு சொக்காய், துணி எல்லாவற்றையும் எடுத்துக் கொடுத்து, வெற்றிலை பாக்கு மடித்துக் கொடுத்து விட்டு அவரை ஆபீஸுக்கு அனுப்புவேன். "சாயந்திரம் எத்தனை மணிக்கு வருவீர்கள்?" என்று கேட்பேன். "ஆறு மணிக்கு" என்றாரானால், "அங்கே போனேன், இங்கே போனேன் என்று சாக்குப் போக்கு சொல்லக் கூடாது. ஆறு மணி என்றால் ஆறு மணிக்கு வந்து சேர வேண்டும்" என்று காய்தா பண்ணி அனுப்புவேன். சாயந்திரம் ஐந்து மணிக்குள்ளேயே சமையலை செய்து வைத்து விடுவேன். அவர் வந்ததும் 'டீ' கொடுத்து விட்டு ஒரு ரிக்ஷாவை வைத்துக் கொண்டு குழந்தையை எடுத்துக் கொண்டு நானும் அவரும் சமுத்திரக்




... "பயித்தியம் மாதிரி நீயே சிரித்துக் கொள்கிறாய்? ..."

கரைக்குப் போய் ஒரு மணி இரண்டு மணி நேரம் இருந்து விட்டு வரலாம். வீடு திரும்பிவந்து சாப்பிட்டுவிட்டு படுக்கப்போகிற வரைக்கும் வேடிக்கையாய்ப் பேசிக் கொண்டும் ஸரோஜாவை வைத்துக் கொண்டு விளையாடிக் கொண்டும் இருப்போம்.

மாதம் இருபது இருபத்தைந்தாவது பண்டு கட்டிக்கொண்டு வர வேண்டும் என்று யோசனை செய்வோம். ஆபீஸில் அவருக்குச் சம்பள உயர்வு எப்பொழுது கிடைக்கக் கூடும் என்பதைப் பற்றிப் பேசுவோம். சம்பளம் உயர்ந்தால் என்ன என்ன செய்யலாம் என்பதை எல்லாம் ரொம்ப மும்மரமாகத் தீமானிப்போம்-என்று இம்மாதிரி எல்லாம் பகற் கனவு கண்டு கொண்டிருந்தேன்! எங்காத்தில் இருக்கும் போது எனக்கு வேறு யோசனை? திருப்பித் திருப்பி இந்தக் கோட்டை கட்டிக் கொண்டிருக்கிறது தான். பொழுது போகிறது தெரியாது. இந்த யோசனையிலேயே எனக்குப் பெரிய முக மலர்ச்சி.

"அதிர்ஷ்டசாலி என்றால் சௌந்தரம் நல்ல அதிர்ஷ்டசாலி தான்" என்று எங்கப்பா அம்மா எல்லோரும் சொல்லிக் கொண்டிருப்பார்கள். எனக்கும் எவ்வளவோ உற்சாகமாக இருந்தது. "எப்போ திருவல்லிக்குப் போய் இந்த மாதிரி எல்லாம் இருக்கப் போகிறோம்" என்று என் மனம் பதைத்துக் கொண்டிருந்தது.

நான் திருவல்லிக்கேணிக்கு வந்து இவைகளெல்லாம் வெறும் கனவாகப் போய் விடவே எனக்கு துக்கம் தாங்க முடியவில்லை. நமக்கு சத்துருவாய் இந்த விட்டல் ராவ் ஒருத்தன் வந்து சேர்ந்தான்! எங்காத்துக்காரருக்கும் சிகரெட்டு குடிக்கிறதும் தலையை மொட்டையடித்துக் கொள்ளுகிறதுமாகிய இந்த மாதிரி புத்திக் கோணல்கள் ஏற்படும் என்று நான் கனவில் கூட நினைக்கவில்லை. இப்படி வந்து சேர்ந்தது.

காலையிலெழுந்தால் மறு நாள் காலை வரையில் பேச்சுத் துணைக்கு ஒரு ஈ காக்காய் கிடையாது. எத்தனை நாழி ஒரு பெண் "மொட்டு, மொட்டு" என்று உட்கார்ந்து கொண்டிருக்க முடியும்! ஆத்துக்காரர் சாயந்திரமானால் வீடு வந்து சேரப் போகிறார், உல்லாசமாயிருக்கப் போகிறோம் என்கிற ஒரு குஷியாவது இருந்தால் அந்த சந்தோஷத்தை நினைத்துக் கொண்டு பொழுது ஆனந்தமாய்க் கழிந்து கொண்டிருக்கும்! அவர் வீடு வந்து சேர்ந்தால்தான் என்ன! விட்டல் ராவ் வந்து சேரப் போகிறான், சிகரெட்டு குடித்துக் கொண்டு இருவருமாய் ஊர் வம்பளந்து கொண்டிருக்கப் போகிறார்கள்.

"உங்களுக்கு விட்டல் ராவ் என்று சனியனுட்டமாய் ஒருவன் வந்து சேர்ந்தானே!" என்று எங்காத்துக்காரர் கிட்ட அவனை எவ்வளவோ சபித்துக் கொட்டினேன். "என்னடி பண்ணுகிறது? அவன் வந்து சேருகிறான். வராதே என்று சொல்லிவிட முடியுமா? எனக்குந்தான் தொந்தரவாயிருக்கிறது" என்று பரிவாய்ப் பேசுகிற மாதிரி சொல்லுவார். எனக்கு ஆத்திரம் பத்திக கொள்ளும்.

"அவர் வராவிட்டால் சிகரெட்டு குடிக்கிறதற்கு ஒரு சிநேகிதர் வேண்டாமா!" என்று வெறுப்பாய்ப் பதில் சொல்வேன்.

இந்த நிலைமை என்றால் தாங்க முடியாமல் போய் விட்டது. "சரி, இதற்கெல்லாம் ஒரு வழி பண்ண வேண்டியதுதான். அவர் போகிற வழியே விட்டு விட்டால் அப்புறம் என் பேர் சௌந்தரம் என்ன? அவருக்காச்சு நமக்காச்சு, பார்க்கலாம். சண்டை வரப் போகிறது. வரட்டும். இந்தமாதிரி சண்டை ஒன்று ஏற்பட்டுதான் பின்னாடி சமாதானம் ஏற்படும். என்ன தலை போய் விடுகிறதோ, அதையும்தான் பார்க்கலாமே?" என்று ஒரு மாதிரியாகத் தீர்மானம் செய்து கொண்டேன்.

(தொடரும்)

# ஐம்பது வருஷங்களுக்கு முன்

வ. ரா.

## 6

*நாம் இருக்கும் நாடு*
*நமது என்பதறிந்தோம்*
*அது நமக்கே உரிமையாம்*
*என்பதறிந்தோம்*

என்று நீங்கள் இப்பொழுது ரொம்பவும் ஆர்ப்பாட்டமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறீர்களே, அந்த மாதிரி நினைப்பையோ, கோஷத்தையோ, ஐம்பது வருஷங்களுக்கு முன், யாரும் கற்பனை செய்துகூடப் பார்த்ததில்லை, பார்க்கவும் முடியாது. அப்படியானால், தேசபக்தி என்பதே அப்பொழுது இருந்ததில்லையா என்று ஆத்திரத்தோடு நீங்கள் கேட்கலாம்.

நாட்டுப் பற்று, தேசபக்தி என்பன இப்பொழுதுதான் நமது நாட்டில் முழக்கமாகத் தொனிக்கும் சொற்கள். பற்றுதல் என்பது வாழ்க்கையில் இருக்கக் கூடாது என்றே அப்பொழுது நம்மவர்கள் எண்ணிக் கொண்டிருந்தார்கள். பற்று அற்று இருப்பதே ஒப்பற்ற வாழ்க்கை என்று இலக்கணத் தமிழில் பண்டிதர்கள் விளம்புவார்கள். லோகத்தில் எத்தகைய பந்தமும் கூடாது என்று அக்கிரகாரத்தில் அட்டகாசம் செய்து கொண்டிருப்பார்கள். மண் ஆசை, பெண் ஆசை, பொன்னாசை மூன்றும் ஒழிய வேண்டும் என்று பண்டாரங்கள் பாடிக் கொண்டே பிச்சை கேட்பார்கள்.

பொன்னாசை கூடாது என்று ஆர்ப்பரிப்பவர்கள், இரண்டு காலணாக்களை இடுப்புத் துணியின் தலைப்பில் கெட்டியாக முடிந்து கொண்டு, அதை அடிக்கடி தொட்டுப் பார்த்துக் கொண்டேயிருப்பார்கள்.

அந்தரங்கத்தில் ஒவ்வொருவருக்கும் பணத்திடம் தான் அன்பு; பணக்காரனிடம் தான் மதிப்பு.

ரொம்பப் படிப்பாளி ஒருவர் பேசுகிறார் என்றால், அவர் பேச்சுக்கு மரியாதை தராமல் இந்த ஆட்கள் அந்தப் பேச்சை அலட்சியமாகக் கேட்பார்கள். அதே மனிதருக்கு சர்க்காரில் உத்தியோகம் உண்டு என்றால் உடனே அவரது பேச்சுக்களை மிக்க விநயத்தோடும் சிரத்தையுடனும் கேட்பார்கள். "அவருக்குப் பத்து லக்ஷ ரூபாய் பணம் தேரும்" என்று யாராவது சொல்லி விட்டாலோ, மகா உற்சாகத்துடன், 'என்ன சொன்னீர்கள்? பத்து லக்ஷம் என்றா சொன்னீர்கள்? பாக்கியசாலி! இதற்கு ஜன்மாந்திரத்தில் புண்ணியம் பண்ணியிருக்க வேண்டும்' என்று பெருமூச்சு விட்டுக் கொண்டே, பத்து லக்ஷ ரூபாய் பணத்தை, நாக்கால் சொல்லிச் சொல்லிச் சுவைத்து ரஸித்துக் கொண்டிருப்பார்கள்.



...பாடிக் கொண்டே பிச்சை...

பொன்னுலை ஒழிய வேண்டும் என்று கூச்சலிடும் பக்தர்களின் மனப் போக்கு இது!

" இந்தக் கேலிக் கூத்தெல்லாம் இருக்கட்டும்; அக் காலத்திலிருந்தவர்களுக்கு தேச பக்தியே கிடையாதா?" என்று கோபத்தோடு என்னை நீங்கள் கேட்கிறுப் போல தோன்றுகிறது.

பள்ளிக்கூடங்களில் வாத்திமார்கள் அப்பொழுது என்ன போதித்து வந்தார்கள் என்பது உங்களுக்குத் தெரிந்தால், நீங்கள் ஆத்திரப்பட மாட்டீர்கள்; தேச பக்தியே இல்லையா என்று கேட்கவும் மாட்டீர்கள்.

**வாத்தி** :—ஏய்! குள்ளக்கத்திரிக்காய்! ருஷியா யாருக்கு சொந்தம்?

குள்ளக் கத்திரிக்காய் என்ற **ராமலிங்கம்**:—ஸார்! சொல்றேன், ஸார்! ருஷியர்களுக்கு சொந்தம்.

**வாத்தி** :— வாத்து முட்டை! ஜெர்மனி யாருக்கு சொந்தம்?

வாத்து முட்டை என்ற **ஆறுமுகம்** :— ஜெர்மானியர்களுக்கு.

**வாத்தி**:— சரி! உட்காரு! முந்திரிக் கொட்டை! இங்கிலாந்து யாருடையது?

முந்திரிக் கொட்டை யென்ற **விசுவநாதன்** :— இங்கிலீஷ்காரர்களுடையது.

**வாத்தி** :— இந்தியா யாருக்கு சொந்தம்? ராசு! நீ சொல்லு.

**ராசு** :— தெரியாது, ஸார்.

**வாத்தி** :— அடுத்த பையன் —?

**அவன்** :— நம்ம பெரியவாளுக்கு.

[இந்த பதிலைச் சொன்னவனுக்கு, 'சுடச் சுட' நாலு பிரப்பம் பழம் கிடைக்கும்.]

**வாத்தி** ;— ஓங்க பெரியவாளுக்கு (பெரிய — வாள் நன்ருய் வெட்டும் என்று நடுவே வாத்தியின் விகடம்!) தேசம்னு ஒண்ணு வச்சு வாழறதோ! ஏய்! ரங்கராஜன்! நீ சொல்லு!

**ரங்கராஜன்** :— ஸார்! நான் சொல்லிடறேன் ஸார்! நெஞ்சிலே



..." இந்தியா யாருக்கு சொந்தம்?"...

இருக்கு, வாயிலே வரமாட்டேன் என்கிறது ஸார்.

**வாத்தி** :— நெஞ்சிலியே, கஜ கர்ப்பம் மாதிரி பன்னிரண்டு வருஷம் அடச்சுண்டு கிடக்கட்டும். ...அடே! நட்டுவாக்களி, நீ சொல்லு. இந்தியா யாருடையது?

**நட்டுவாக்களி (ஆறுவமுதன்)**:- இந்தியா, இங்கிலீஷ்காரர்களுக்கு சொந்தம், ஸார்.

**வாத்தி** :— நட்டுவாக்களி! சொல்லாத மட்டிகளுக்கெல்லாம், நறுக்கு நறுக்குனு நாலு குட்டு தலையிலே வை. ஒவ்வொரு குட்டும் 'ஏன்'னு கேக்கணும்.

எனவே, வாத்திமார்களின் போதனைப் படிக்கு, இந்தியா, இங்கிலீஷ் காரர்களுக்கு சொந்தம். நம்மவர்களுக்கு சொந்தமாக தேசம் கிடையாது. தேசமே இல்லாத நம்மவர்களுக்கு எவ்வாறு தேசபக்தி இருக்க முடியும்?

அந்நியர்களின் ஆளுகை என்றால் உங்களுக்கு இப்பொழுது பிடிக்கிறதில்லை. ஆனல், அப்பொழுது அப்படி இல்லை. பிறர் வீட்டில் 'பஞ்ச பக்ஷ பரமான்ன'த் தோடு விருந்து சாப்பிட்டால், எவ்வளவு பிரம்மானந்தமாயிருக்கும்! நம் கைக் காசு செலவழிகிறதா? விருந்துக்கு சாமான்கள் சேர்க்கிற பொறுப்பும் அவைகளைப் பக்குவமாகச் சமைக்கிற சிரமமும் நமக்கு கிடையாதல்லவா?

இதே மாதிரி நமக்கு எந்த வித சிரமத்தையும் வைக்காமல் 'பஞ்ச பக்ஷ பரமான்ன'த்திற்கு ஒப்பான ஆட்சியை இங்கிலீஷ்காரர்கள் நடத்தி வருவதாகவே அப்பொழுது எண்ணி வந்தார்கள். அந்நிய ஆட்சியால் நேரும் விபரீதங்களை ஒரு சிலர் அறிந்திருந்தும் கூட 'நம்ம ஜனங்களோ நெல்லிக்காய் மூட்டைகள்; ஒன்றுக்கும் உதவாத சாம்பிராணிகள்! இவர்களோடு, யார் பிராணனை விட்டுக் கொண்டு இருக்கிறது? இங்கிலீஷ்காரனை வெறுமனே சொல்லி என்ன பண்றது! தேன் எடுக்கிறவன் புறங்கையை நக்காமல் இருப்பானு? ஏதோ, இந்தியாவிலிருந்து சீமைக்குப் பணம் கொண்டு போருன். போகட்டுமே' என்று தங்கள் மனதை சமாதானப் படுத்திக் கொண்டார்கள்.


மேலும், நம்மவர்கள், சொர்க்கம், நரகம், தேவலோகம், பாதாளம், காமதேனு, முக்தி, ஸாயுஜ்யம், ஸாமீப்யம் போன்ற பெரிய சொற்களைத் தான் பேசிக்கொண்டிருந்தார்கள். பஞ்சம், நாடு காப்பு, கல்வி, சுயராஜ்யம் என்ற சின்ன சங்கதிகளில் அவர்களுடைய 'பாரிபுத்தி' சென்றதேயில்லை! இகலோக சங்கதிகளில் புத்தி செல்லுவது பாசம் அல்லவா?

இந்த உலகத்தின் தேவைகளைக் கூடுமான வரையில், சரியாகத் தங்கள் புத்திக்குத் தக்கபடி உணர்ந்தவர்கள் அக்காலத்துப் பாட்டிமார்கள் தான். 'ஏண்டா! ராமு! அமரா நிர்ஜ்ஜரா தேவா — அம்பட்டா கத்தி கொண்டுவா, கற்கக் கற்க்க் கசடறும் — குத்தக் குத்த பதர் போகும் என்று படித்துக் கொண்டிருந்தால், நாலு காசு கைக்கு எப்படி வரும்? கோணை எழுத்தை (இங்கிலீஷை) படித்துத் தொலைக்கிறது தானே' என்று பாட்டிமார்கள் தலையில் போட்டுக் கொள்ளுவார்கள்.

மேலும் அக்காலத்து பாட்டிமார்கள் இங்கிலீஷ்காரர்களின் பரம பக்தைகள். 'ராமு!' என்று கூப்பிடுவாள் பாட்டி.

"கேளுடா! அசடே! இந்த தேசத்திலே, முன்னெல்லாம் என்ன அக்கிரமங்கள் நடந்தது தெரியுமா? எங்க பாட்டி எங்

## வாத்தியார் விளையாட்டு




"வாந்தியார் ஸார்! நீங்க கொடுத்த கணக்கு எனக்குப் போட வரல்லே, ஸார்! நீங்களே போட்டுக் காண்பியுங்க ஸார்!"

"டேய்! நான் தான் வாத்யாராச்சேடா! எனக்கு எப்படிடா தெரியும்?"



"கேளுடா, அசடே! இந்த தேசத்திலே......"

களுக்குக் கதை கதையாய்ச் சொல்லியிருக்கா. பொம்மனாட்டியை அப்படியே குண்டுக்கட்டா தூக்கிண்டு போய்டுவாளாம்! எங்க மதத்திலே சேரரயா அல்லது கொன்னுப்பிடட்டுமா இன்னு கேப்பாளாம். இந்த அநியாயமெல்லாம் மகாராஜன் இங்கிலீஷ்காரன் காலத்திலே இல்லவே இல்லை! இங்கிலீஷ்காரன் புத்தியும் குணமும் யாருக்கு வரும்?" என்று பாட்டி உபதேசம் செய்வாள்.

இந்த தேசத்துக்கு, கிரேக்க காலம், மொகலாயர் காலம், இங்கிலீஷ்காரன் காலம் என்றெல்லாம் இருக்கலாமே யொழிய, சொந்தக் காலம் அதாவது சுயமே ஆண்டு வரக்கூடிய காலம் என்னமாய் இருக்கலாம் என்பது பாட்டியின் அசைக்க முடியாத நம்பிக்கை. இந்த நம்பிக்கையை, பாட்டி பேரனுக்கு சாதம் ஊட்டுகிற பொழுது, சேர்த்து ஊட்டிக் கொண்டே வந்திருக்கிறாள். எனவே, அந்தக் கரலத்துப் பேரன் (அவர் இப்பொழுது பாட்டனாக இருக்கிறார்) இங்கிலீஷ்காரன் ஒரு தேவதை என்று சத்தியம் செய்து கொண்டிருந்தான்.

ஆகையினாலே, அவன் தேவதையோடு சண்டைபோட முடியுமா? சண்டை போடலாமா? அப்படிச் செய்வது, புராண, இதிகாச விதிகளுக்கு விரோதமல்லவா? புராணத்திலே என்ன சொல்லியிருக்கு? தேவதையின் கிருபைக்குக் காத்துக் கொண்டிருக்க வேண்டுமென்றும், தேவதையினிடம் வரப் பிரசாதத்துக்குப் பிரார்த்தனை செய்து கொள்ளலாம் என்றும் புராணம் துளிக்கூட சந்தேகம் இல்லாமல் சொல்லுகிறது!


இந்த மாதிரி மனோ பாவத்தோடு இருப்பவர்கள், பெரிய காரியங்களைச் செய்ய முடியுமா? 'நம்மைக் காப்பாத்த வந்தவாள் இங்கிலீஷ்காராள்' என்று பாட்டி ருசு மூலமாக, கண்டிப்பாய்ச் சொல்லும் பொழுது, பேரன் மனது வேறு எந்த வகையில் செல்லும்?

இந்த மனப்பான்மையோடு தான், ஹ்யூம், பானர்ஜி (Bannerjee அல்ல; Bonnerjee) போன்ற பிரமுகர்கள் காங்கிரசை ஆரம்பித்தார்கள். 'இந்தியா க்ஷேமமாக இருக்க வேண்டுமானால், இங்கிலீஷ்காரர்கள் மனது வைத்தால் தான் அது முடியும்; ஆகவே, அவர்களுடைய கருணைக்கு தகுதி பெற்ற பக்தர்களாக இருப்பது தான் இந்தியர்களின் கடமை; அதாவது இந்தியர்கள் எல்லோரும் ராஜ பக்தர்களாகத்தான் இருக்க வேண்டும்' என்ற மனப்பான்மை பாட்டி முதல் பானர்ஜி வரையில் எல்லாருடைய உள்ளங்களிலும் பரவிக் கிடந்தால், மருந்துக்குக்கூட தேசபக்தியைப் பார்க்க முடியுமா? ராஜ பக்தனாயில்லாதவன் ராஜத் துரோகி; எனவே, அவன் தேசத் துரோகி! இவ்வாறு தான், அக்காலத்தில், தர்க்க சாஸ்திர வலையை வீசி வந்தார்கள். இந்த தர்க்க சாஸ்திர வலையில், ராஜத் துரோகியாக முதன் முதலில் அகப்பட்டுக் கொண்டவர், லோகமான்ய திலகர்.

மித வாதத்திலும் பிழிந்தெடுத்த மித வாதத்தோடு ஆரம்பிக்கப்பட்ட காங்கிரஸின் பெயரைச் சொல்லக்கூட, அக்காலத்தில் ரொம்பவும் பயப்பட்டார்கள். இந்தியாவில் இவ்வளவு பயபக்தியுடன் தான் தேச பக்தி உதிக்க ஆரம்பித்தது.



## மக்கள் குற்றம் பெற்றோர் தலைமேல்!




3—2811

பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி
லிமிடெட்

(இந்தியாவில் 1933ல் ஸ்தாபிக்கப்பட்டது)

தலைமை ஆபீஸ்: மதுரை

தீ விபத்து சம்பந்தமான சகலவித
இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்

| | |
|---|---|
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ. 15,00,000 |
| இன்ஷ்யூரன்ஸ் நிதிகள் | ரூ. 20,84,422 |
| | ரூ. 35,84,422 |

கிளை ஆபீஸ்கள்

பம்பாய்: லாயிட்ஸ் பாங்க் பில்டிங் ஹார்ன்பி ரோடு, பம்பாய்.

அகமதாபாத்: 1761, காந்தி ரோடு அகமதாபாத்.

பிரதம ஏஜண்டுகள்

ஏ. & எப். ஹார்வி

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்

K. M. S. லெக்ஷ்மணய்யர் & சன்ஸ்

மதுரை, திண்டிவனம், மதராஸ், நகரி, பெஜவாடா, காகினடா, விஜயநகரம்

விபரங்களுக்கு மேலே கண்ட எந்த ஆபீசுக்கும் எழுதலாம்.



# தாசி நாகமணி

து. ரா.

பெருமாள் மலை என்ற ஊரின் பெயரைக் கேட்டிருப்பீர்கள். பன்னிரண்டு வருஷங்களுக்கு முன் அந்த ஊரில் 'கோவாபரேடிவ்' ஸ்டோரில் நான் வேலை பார்த்து வந்தேன். சொல்ப சம்பளம்; குடும்பமோ பெரிது. வேறு வழிகளில் ஏதாவது மேல் வரும்படி வந்தால் தான் சமாளிக்க முடியும் என்ற நிலைமை ஏற்பட்டிருந்தது. அந்த இக்கட்டான நிலைமையில் தான், எனக்குத் தெரிந்திருந்த பரத நாட்டியம் பெரும் உதவியாக இருந்தது. அந்த ஊர் தாசிப் பெண் ஒருத்திக்கு நாட்டியம் கற்றுக் கொடுத்து அதன் மூலம் இன்னும் சிறிது வருமானம் பெற்று வந்தேன்.

எனக்கு பரத நாட்டியம் எப்படித் தெரிந்தது என்று கேட்பீர்கள். அது வேறு கதை. அப்புறம் சாவகாசமாய்ச் சொல்ல வேண்டியது. என் பாட்டனார் புதுக்கோட்டை சமஸ்தானத்தில் பிரபல வித்வானாக இருந்தவர் என்பதையும், அவர் மூலம் குழந்தைப் பருவத்தில் எனக்கு இந்த வித்தையின் பரிச்சயம் ஏற்பட்டது என்பதையும் மட்டும் இங்கே சொல்லி நிறுத்திக் கொள்கிறேன்.

பெருமாள் மலை என்ற ஊரின் பெயரைக் கேட்டிருப்பீர்கள் என்று ஆரம்பித்தேன்? அதற்குக் காரணம் உண்டு. சமீப காலத்தில் பரத நாட்டியக் கலைக்குப் புத்துயிர் அளித்த பெண்மணிகளுள் ஒருத்தியான நாகமணியின் பிறப்பிடம் அது தான். அவள் மூலமாக அந்த ஊரும்தான் இப்பொழுது பிரசித்தமடைந்திருக்கிறதே!

நான் நாட்டியம் கற்றுக் கொடுத்ததாகக் கூறியது உண்மையில் இந்த நாகமணிக்கு அல்ல. நான் நாட்டியம் கற்றுக் கொடுத்த தாசிப்பெண் வீட்டில் அவள் வேலை செய்து கொண்டிருந்தாள். அப்போது வயது பன்னிரண்டு அல்லது பதிமூன்று இருக்கும். தினம் சாயந்திரம் இரண்டு மணி நேரம் நான் தாசிப் பெண்ணுக்கு நாட்டியம் சொல்லித் தருவேன். இந்த நாகமணி அப்பொழுதெல்லாம் தூரத்தில் நின்றபடியே கண் கொட்டாமல் கவனிப்பாள். நான் போன பிறகு, தன் எஜமானியுடன் சேர்ந்து ஆடக் கற்றுக்கொண்டாளோ, அல்லது தனிமையில் எங்கேயாவது சென்று, தான் பார்த்ததைப் பார்த்தபடியே அப்பியசித்தாளோ, எனக்குத் தெரியாது. எப்படி இருந்தால் என்ன? நாகமணிக்கும் நாட்டியம் வந்து விட்டது. அதுவும் சாதாரண நாட்டியமா! நாட்டியக் கலையின் அவதாரம் என்று அவளுக்குப் பெயர் வாங்கிக் கொடுத்த நாட்டியம் அல்லவா?

நான் தாசி மகளுக்குச் சிக்ஷை தொடங்கி ஒரு மாத காலம் ஆகியிருக்கும். ஒரு நாள் வழக்கப்படி பயிற்சி ஆரம்பிக்கையில் இந்தப் பெண்ணும் தினம் போல் தூரத்தில் கதவின் மறைவில் நின்றபடி கவனித்தாள்.

"ஏண்டி அம்மா! தினம் இப்படிப் பழியாய் இங்கு நிற்கிறாயே, உனக்கு என்ன புரிகிறது?" என்று பேச்சுவாக்கில் சிரித்துக் கொண்டே அவளைப் பார்த்துக் கேட்டேன்.

அப்பொழுது சிவகாமியும் சிரித்தாள்.

"அடியே, இங்கே வாடி நாகமணி! ஐயருக்கு நாட்டியம் ஆடிக் காண்பி, பார்ப்போம்" என்றாள்.

அந்தப் பெண் வெட்கமடைந்து, குனிந்த தலையுடன் அங்கிருந்து செல்ல முயற்சித்தாள்.

"அவள் கூட நாட்டியம் ஆடுகிறாளா என்ன ?" என்று நான் கேட்டேன்.

"பாருங்களேன் வேடிக்கையை!" என்று சொல்லிச் சிவகாமி அவளிடம் ஓடி, அவளைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்து என் எதிரில் நிறுத்தி, "ஆடிக் காண்பியேண்டி, பார்க்கட்டும்" என்றாள் அதட்டுகிற குரலில்.

நாகமணி சற்றுத் தயங்கி நின்று, பிறகு, "ஆடும் சிதம்பரேசா" என்று பாடிக்கொண்டு அபிநயமும் பிடித்தாள்.

சிவகாமி வாயைக் கையினால் பொத்திக் கொண்டாள். நானும் முதலில் சிரித்தேன். அடுத்த நிமிஷம் குரலின் இனிமையை உணர்ந்து, சிரிப்பதை விட்டுக் கவனித்தேன். அவ்வளவுதான்! என்னையே மறந்து விட்டேன் என்று தான் சொல்ல வேண்டும். நடராஜாவைப் போல் ஒரு காலைத் தூக்கி நிறுத்தி அந்தச் சிறுமி அபிநயம் பிடித்த காட்சி என்னை அயர்ந்து உட்காரச் செய்தது.

அவள் தோற்றம் எப்படியிருந்தது என்கிறீர்கள் ? ஒடிந்து விழுவது போல் துவளும் சரீரம். தாமரை மொட்டு போல் குவிந்த இதழ்கள். விசாலமான நீண்ட கண்கள். குழியும் கன்னம். இன்னும் என்ன வேண்டும்? நாட்டியத்திற்கு எடுத்த அங்க லக்ஷணங்கள் அனைத்தும் அவளிடம் பூரணமாய் அமைந்திருந்தன. எழு மாதமாய்த் தலையில் அடித்துக் கொண்டு சொல்லிக் கொடுத்தும் சிவகாமிக்கு எட்டாத பிடிகளையும் முத்திரைகளையும் அந்தச் சிறுமி அனுயாசமாய் வரப்படுத்தி விட்டாள். அபூர்வமான பாவங்களையும் அவள் முகம் வெகு இயற்கையாய்ப் பிரதிபலித்தது.

"அம்மா! இந்தக் குழந்தை நாட்டியத்திற் கென்றே பிறந்தவள் மாதிரி இருக்கிறது. இந்த வயசில் இவ்வளவு அழகாக அபிநயம் பிடிக்கும் பெண்ணை நான் பார்த்ததில்லை. நாளையிலிருந்து இவளும் கற்றுக் கொள்ளட்டும்" என்று சொன்னேன் சிவகாமியின் தாய் பங்கஜத்தினிடம்.

ஆனால், அதன் பின் அதிக நாள் நான் அந்த ஊரில் இருக்கவில்லை. இரண்டு மாசத்திற்குள் இந்த நீளக் குப்பத்திற்கு! என்னை மாற்றித் தொலைத்தார்கள். இங்கு வந்த பிறகு சில எதிர் பாராத செய்திகள் காதில் விழுந்தன. சிவகாமி தாசித் தொழிலை மனப் பூர்வமாய்வெறுத்து, ஒரு பணக்காரப் பையனைச்



......அப்பொழுதெல்லாம் இந்த நாகமணி......

சாஸ்திரீகமாய் மணந்து கொண்டதாகவும், அவள் தாய் அதனால் மனமுடைந்து நாகமணியைத் 'தத்து' எடுத்துக் கொண்டதாகவும் சொன்னார்கள். அந்தப் பெண்ணுக்கும் அவளை விட்டால் வேறு நாதி கிடையாது. நாகமணிக்குப் பொட்டுக் கட்டின பொழுது அந்த விழாவை நேரில் பார்த்த நண்பர் ஒருவரே இந்த விஷயங்களைத் தெரிவித்தார். அன்று கோவிலில் எள்ளுப் போட்டால் எள்ளு விழாதாம். அவ்வளவு கூட்டமாம்! "நாகமணியின் நாட்டியத்தைப் புகழாதவர்கள் கிடையாது. நான்கு மணி நேரம் சதிர்க் கச்சேரி நடந்தது. பொழுது போனதே தெரியவில்லை" என்று வர்ணித்தார் நண்பர்.

நான் கேட்டுக் கொண்டிருந்தேன். மனசில் சந்தோஷம், துக்கம் இரண்டும் ஒருங்கே உண்டாயின. நாகமணி இவ்வளவு தூரம் முன்னுக்கு வந்ததில் சந்தோஷம்; இன்னும் சிறிது காலம் பெருமாள் மலையில் இருந்து நாமே அவளுக்கு நாட்டியம் கற்றுக் கொடுத்திருந்தால், இப்பொழுது பகிரங்கமாய் அவளை நம் சிஷ்யை என்று சொல்லிக் கொள்ளலாமே, அந்தப் பெயர் கிடைக்காமல் போய் விட்டதே என்ற குறையினால் துக்கம்.



......கண் கொட்டாமல் கவனிப்பாள்......

என்ன பண்ணுவது? எவ்வளவு கொடுத்து வைத்திருக்கிறோமோ அவ்வளவுதானே கிடைக்கும் ?

* * *

மேலே சொன்ன கதை, நாட்டியம் சுந்தர சாஸ்திரி எனக்குக் கூறியது.

நாட்டியம் சுந்தர சாஸ்திரியைப் பற்றி நான் ஒன்றும் சொல்லப் போவதில்லை. அதற்கு அவசியம் இல்லாதவாறு ஏற்கெனவே அவர் பெயரும் பிரபலமாகியிருக்கிறது என்று நினைக்கிறேன்.

பல முறை அவரைப் பற்றி நான் கேள்விப் பட்டிருந்தும், அன்று தான் முதன் முதலாக நேரில் காணும் சந்தர்ப்பம் எனக்கு வாய்த்தது. அதுவும் தற்செயலாகத்தான் நேர்ந்தது.

ஒரு நாள் 'டென்னிஸ்' விளையாடுகையில், காலை எக்கச்சக்கமாய்ச் சுளுக்கிக் கொண்டு விட்டேன். ஒரு மாசம் வைத்தியர்கள் விடாமல் கட்டுக் கட்டினார்கள். அப்படியும் வலியும் தீரவில்லை, வீக்கமும் குறையவில்லை. அப்பொழுதுதான் நாட்டியம் சுந்தர சாஸ்திரியைப் பற்றி என் மனைவி கூறினாள். அவள் அவரைப் பார்த்ததுண்டாம். நாட்டியத்தில் எப்படிப் பைத்தியமோ, அவ்விதமே நாட்டு வைத்தியத்திலும் அவருக்குப் பித்து என்றும், சுளுக்குக்கு ஒரு பச்சிலையை அரைத்துக் கட்டினானால் இரண்டே நாளில் குணமாவது உண்டென்றும் தெரிவித்தாள்.

விசாரித்ததில், சுந்தர சாஸ்திரி நீளக்குப்பத்தில் இருப்பதாகத் தெரிந்தது. ஒரு ஞாயிற்றுக் கிழமை காலை நானும் என் மனைவியும் காரில் புறப்பட்டோம். மனைவியைச் செங்கற்பட்டில் ஒரு தெரிந்த வீட்டில் விட்டு விட்டு நான் மட்டும் சாஸ்திரியைத் தேடிக் கொண்டு நீளக்குப்பம் சென்றேன்.

என் கால் வீக்கத்தைப் பார்த்ததும் சாஸ்திரி பழைய நாள் ஸ்நேகிதனைக் கண்டவர் போல் மிகுந்த உத்ஸாகத்துடன் அதைப் பரிசோதித்து மருந்து வைத்துக் கட்டினார். அந்த சமயத்தில் ஓர் அற்புதம் நிகழ்ந்தது. அற்புதம் என்றுதான் நான் அதை நினைத்தேன்.

சுந்தர சாஸ்திரியின் வீட்டு வாயிலில் இன்னொரு கார் வந்து நின்றது. அதிலிருந்து பிரபல பரத நாட்டியக்காரியான நாகமணி இறங்குவதைக் கண்டதும் மிக்க வியப்படைந்தேன்.

நாகமணி வீட்டினுள் வந்து சாஸ்திரி முன் மண்டியிட்டு நமஸ்கரித்தாள். வெகு நாள் பழகியவர்கள் போல் சற்று நேரம் இருவரும் யோக க்ஷேமம் விசாரித்துக் கொண்டனர். சாஸ்திரியின் மனைவியுடன் பேசுவதற்காக நாகமணி வீட்டின் பின் கட்டுக்குச் சென்றபோது, நான் ஆச்சரியத்துடன் கிழவரை விசாரித்தேன்.

"இவள் தங்கள் சிஷ்யையோ?"

அப்பொழுதுதான் சாஸ்திரி நான் மேலே சொன்ன கதையைக் கூறினார். அதில் ஒரு பகுதி ஏற்கெனவே எனக்குத் தெரிந்ததுதான். ஆனால் அதில் சாஸ்திரியும் நாகமணியும் இவ்வாறு சம்பந்தப் பட்டிருந்த விஷயம் அன்று அவர் சொல்லித்தான் எனக்குத் தெரிந்தது.

என்ன நினைத்துக் கொண்டாரோ என்னவோ? "கதை போல் இருக்கிறதோ?" என்று சாஸ்திரி புன் சிரிப்புடன் என்னைக் கேட்டார்.

"அப்படியொன்றும் இல்லை. ஏற்கெனவே எனக்கும் பாதி தெரிந்த விஷயம்தான். ஆனால் பூரா விவரமும் இன்றுதான் அறிந்து கொண்டேன். பெருமாள் மலையில் தங்கள் சிஷ்யை சிவகாமி என்று சொன்னீர்களே, அவளைக் கல்யாணம் பண்ணிக் கொண்டிருக்கும் அதிர்ஷ்டசாலி நான்தான்!" என்றேன்.

இப்படி நான் சொன்னதும் சாஸ்திரி திடுக்கிட்டு, ஆச்சரியம் தோன்றச் சற்று நேரம் என்னை விழித்துப் பார்த்தார். மறுபடி பேச்சுக் கிளம்ப ஒரு நிமிஷம் ஆயிற்று. "திருஞானம் என்பது தாங்கள்தானோ?" என்று கேட்டார் அவர்.

ஆம் என்றேன். பின்பு, சிவகாமியை உடன் அழைத்து வந்ததையும், வழியில் அவளை விட்டு வந்ததையும் தெரிவிக்கவே, "அடடா! என்ன இப்படிச் செய்தீர்கள்! நான் போய் அழைத்து வருகிறேன்" என்று புறப்பட்டார்.

சிஷ்யையைத் தேடிக்கொண்டு போகும்படி குருவை அனுப்புவது சரியல்ல என்று அவரை அமரச் செய்து நானே சென்றேன்.



என் வரவுக்காகக் காத்துக் கொண்டு வாயிற்படியிலேயே நின்றிருந்தாள் சிவகாமி. அவள் முகத்தில் சிந்தனையின் சாயை படர்ந்திருந்தது.

"சாஸ்திரிதான் உனக்கு நாட்டியம் கற்றுக் கொடுத்தவராமே? என்னிடம் நீ ஏன் இதைச் சொல்லவில்லை?" என்று சற்றுக் கோபத்துடனேயே கேட்டுக்கொண்டு நான் காரிலிருந்து இறங்கியதும், "எல்லாம் சொல்லி விட்டாரா? உங்களை எப்படித் தெரிந்தது அவருக்கு?" என்று கேட்டாள்.

நாகமணியின் வரவையும், சாஸ்திரி சொன்னதையும் கூறியபோது அவள் முகம் சுண்டி விட்டது.

"போங்கள்! எனக்கு வெட்கமாய் இருக்கிறது! வெகு சிரமப்பட்டு எனக்கு அவர் நாட்டியம் சொல்லிக் கொடுத்தும் எனக்கு அது வரவில்லை. நாகமணி பார்த்துக் கொண்டிருந்தே கற்றுக் கொண்டு விட்டாள். ஐயர் எதிரில் போக வெட்கப் பட்டுக்கொண்டுதான் நான் இந்த விஷயத்தை உங்களிடம் கூறாமல் மறைத்தேன். இப்பொழுது எப்படி அவரை நான் பார்க்க வருவது? அதுவும் நாகமணி அங்கே இருக்கையில்? அவளை நினைத்தாலே எனக்குப் பொறாமையாய் இருக்கிறது" என்றாள்.

நான் சிரித்தேன்.

"நன்றாய் இருக்கிறது! பொறாமைப்பட்டு என்ன பிரயோஜனம்? உனக்கும் நாட்டியத்துக்கும் அவ்வளவுதான் பொருத்தம்" என்றேன்.

"அதெல்லாம் ஒன்றும் இல்லை. இன்னும் கொஞ்ச காலம் கற்றுக் கொண்டிருந்தால் எனக்கும் தான் வந்திருக்கும். அதற்குள் நீங்கள் வந்து......"

"ஏன்? இப்பொழுதுதான் என்ன? மறுபடி ஆரம்பித்துக் கற்றுக் கொள்கிறது தானே?"



"ஆமாம். இன்னும் நாலு குழந்தைகள் பிறக்கட்டும், அப்புறம் நாட்டியம் ஆடுகிறேன்!" என்றாள்.

எங்களுக்கு எற்கெனவே மூன்று குழந்தைகள்.

"அவள் எகாங்கி. ஒரு விசாரமும் இல்லை. உடம்பும் கெடவில்லை. நாளுக்கு நாள் அவள் புகழ் வளர்கிறது. பரத நாட்டியம் என்றால் நாகமணி என்றாய் விட்டது. பம்பாய், கல்கத்தா என்றெல்லாம் போய்க் கச்சேரி பண்ணுகிறாளாமே. அதிர்ஷ்டத்தைப் பாருங்கள்! நானும் இருக்கிறேனே!"

இப்படி மளமள என்று வார்த்தைகளைக் கொட்டினாள். நான் ஒன்றும் சொல்ல வில்லை. என்ன சொல்வது? பொறாமை என்பது முக்கியமான பெண்மைக் குணங்களில் ஒன்று. அதுவும் இப்பொழுது சிவகாமிக்குப் பொறாமை எற்படக் காரணம் இருந்தது என்று உணர்ந்து பேசாமல் இருந்தேன்.



"என்ன சுப்பய்யர்வாள், வாங்கிண்டு வந்த அரை பாட்டில் என்ணையை அப்படியே விளக்கிலே விடறது தானே! கால் பாட்டில் ஏன் மிச்சம் வைச்சிருக்கேள்?"

"பின்னே என்ன பண்ணச் சொல்றேள்? இன்னிக்கே எல்லாத்தையும் விட்டுட்டா, நாளைக்கு வேண்டாமா?"

ஆனால், சாஸ்திரியையும் நாகமணியையும் பார்த்து விட்டுத் திரும்பி வீடு நோக்கிச் செல்லுகையில், அரை மணிக்கு முன்பிருந்த பொறாமையையோ பேச்சின் வேகத்தையோ சிவகாமியிடம் காணவில்லை. அதற்கு மாறாக, அடிக்கடி அவள் கண்களைத் துடைத்துக் கொண்டிருந்ததைக் கவனித்தேன்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. வழியில் மகாபலிபுரத்தில் காரைநிறுத்தி, கடற்கரைக்குச் சென்று ஒரு கற்பாறையின் மேல் உட்கார்ந்தோம்.

"உன் தங்கச்சியைப் பார்த்தாயே, என்ன சொன்னாள்?" என்று கேட்டேன் அப்பொழுது.

சிவகாமி மளமள வென்று கண்ணீர் உகுத்து, "பாவம், அவளைப் பார்த்துப் பொறாமைப் பட்டேனே! அவளைப் போல் துக்கப் படுகிறவர்கள் யார் இருக்கிறார்கள்?" என்றாள்.


என் ஆச்சரியம் அதிகரித்தது. சிவகாமி மேலும் கூறினாள்:

"அவள் என்னைப் பார்த்துப் பொறாமைப் படுகிறாள்! என் கழுத்தைக் கட்டிக்கொண்டு அழுதே விட்டாள். பாவம்! தலைவலி என்று படுத்தால், ஏன் என்று கேட்பார் அவளுக்கு யார் இருக்கிறார்கள்? குடியும் குடித்தனமுமாய் இருக்க வேண்டும் என்று ஆசையாய் இருக்கிறதாம். குழந்தைகள் வேண்டும் என்று இருக்கிறதாம். என்ன ஐசுவரியம் இருந்து என்ன பிரயோஜனம்? 'நீ புத்திசாலி, அக்கா! நான் தான் ஏமாந்து போனேன்' என்கிறாள். அவள் குறைகளைக் கேட்க எனக்கும் அழுகை வந்துவிட்டது."

மகாபலிபுரம் என்கிற அந்தக் கனவு லோகத்தில் அன்றைப்பொழுதின் பெரும் பகுதியைக் கழித்த பின், திரும்பி வீடு நோக்கிச் செல்லுகையில், "வீட்டுக்கு வீடு வாசற்படிதான், பார்த்தாயா?" என்றேன் நான்.

சிவகாமி பெருமூச் செறிந்தாள்.


# கரப்பானை குணப்படுத்த எக்ஸ்மா - (X-MA)




மற்றுமொரு நற்சாக்ஷி பத்திரம்

அன்பார்ந்த ஐயா,

தயவுசெய்து வி. பி. பி. மூலம் மற்றுமொரு ஜாடி எக்ஸ்-மா மெழுகும், ஒரு டின் வேர்க்குரு பௌடரும் அனுப்பிவைக்கவும்.

நான் முன்பு வாங்கின எக்ஸ்-மா மருந்து அதி விரைவில் குணமளித்தது. ஆகையால் எப்பொழுதும் கையிருப்பில் ஒரு ஜாடி வைத்திருக்க எண்ணுகிறேன். இதில் எற்பட்ட சம்பிக்கை உங்கள் வேர்க்குரு பௌடரை உபயோகிக்கத் தூண்டுகிறது. மேலும் வேறு எதுவும் நிச்சயமாக குணமளிக்கவில்லை. இப்படிக்கு,

(ஒப்பம்)..................................

பிரசித்திபெற்ற ஸ்பென்ஸர் சரும வியாதி நிவாரணி, கரப்பான், மற்றும் அதுபோன்ற சரும வியாதிகளை நிவர்த்திப்பதில் கீழ்நாடெங்கும் பிரக்யாதி பெற்றது. ஒவ்வொரு தபாலிலும் இந்த மருந்து வேண்டுமென்று ஆர்டர்கள் குவிந்தவண்ண மிருக்கின்றன. இதன் அபார விற்பனையே இதன் குணத்திற்குச் சான்று.

முன்பு "ஸ்மித்ஸ் அங்குவென்டம் டெட்டர்ஜென்ஸ்" என வழங்கிவந்த மருந்து சருமத்தில் எற்படும் எல்லா உபாதைகளுக்கும் இதமளிப்பதில் சிறந்து விளங்கிற்று. இப்பொழுது எக்ஸ்-மா ஒன்றுதான் கரப்பான், வண்ணாரப் படை, வீக்கம் இவற்றிற்கு எரிச்சலின்றி குணமளித்து வருகிறது.

கைத்திட்டமான சைஸ் பாட்டில் ஒன்றுக்கு விலை ரூ. 1/4/-


**உபயோகிக்கும் முறை** வியாதியுற்ற பாகத்தில் காலையிலும், மாலையிலும் நன்றாகத் தேய்க்கவும். கூடுமானவரை காற்றுப் புகாவண்ணம் மிருதுவான துணியினால் மூடி வைக்கவும்.

ஸ்பென்ஸர் கம்பெனியாரால் மட்டுமே இது தயாரிக்கப்படுகிறது.

வியாபாரிகள் விவரங்களுக்கு எழுதவும்:

**ஸ்பென்ஸர் & கோ., லிட்.**

மான்யுபாக்சரிங் கெமிஸ்ட்ஸ் :: சென்னை




சுந்தரம்

## அத்தியாயம்—9

## பிந்துவை மனதால் வெல்ல

பெரும்பான்மையாக உடல் மனதைப் பாதிக்கும். இந்நிலையை சாதாரண மனிதர்களிடம் அதிகமாகக் காணலாம். உண்மையில் மனமே உடலை ஆளுகிறது. ஜீவ சிருஷ்டி யெல்லாம் மனோ கற்பிதமே. பரப்ரம்மத்தின் மனதில் தோன்றி மறைவதே இவையாவும். பரப்ரம்மத்தை அறிந்தவன் அதுவே யாகிறான். இவன் மனதில் முதலாக சங்கல்பம் உதித்தால், ஸ்தூலத்தில் கிரம காரியமாக நடப்பதைக் காண்கிறோம். மனதிற்குப் பணிந்தது இயற்கை. சுத்த மனசின் பலமும், தெய்வ பலமும் ஒன்றே. அசுத்த மனம் நசிந்த, சுத்த மனம் பரவிய நிலையே சம்பூர்ணம், சுகம், சாயுஜ்யம்.


மனோ பலத்தால் யாவையும் வெல்லலாம் என்று அறியுங்கள்! மனோ பலமே சாசுவதம், அழிவற்றது.

வேதம், வேதாந்தம், ஆத்மன், வேண்டா மென்றாலும், உங்கள் சரீர உயர்வுக்காகவாவது, மனோ பலத்தை அறிய மாட்டீர்களா? பிரயோகிக்க மாட்டீர்களா? உடல் சுகத்திற்கென ஆரம்பித்து, தீவிரமாக்கி, ஆத்ம சுகத்தில் முடிவு பெற்றால், கேடா, குறைவா?

மனமும் தற்காலத் தொழிலுக்குத் தக்கபடி, மனம், விஞ்ஞானம், அகங்காரம் என்று ஒரே சித்தம் பல நாமங்களால் அழைக்கப்படுகின்றது. இங்கு சாதகருக்கு மன விவகாரங்களை முற்றிலும் ஊட்டுவது கஷ்டம்; தேவையுமில்லை. மேல் நாட்டார் கண்டு பிடித்துப் பாராட்டும் சிறு அளவை, சுருக்கமாய் விளக்கினால் சரீர நலத்திற்கு வேண்டிய மனோ தர்மம் நன்கு விளங்கும்.

மனதை இரு வகையாகப் பிரித்திருக்கிறார்கள். ஆங்கிலத்தில் இப்பாகங்களை, ஸுபர்பிஷல் (Superficial) ஸப்கான்ஷஸ் (Sub-conscious) என அழைக்கிறார்கள். இவைகளை நாம் வெளி மனம் உள் மனமென்று பரஸ்பரம் அழைக்கலாம். உள் மனம் விவகாரம் (Reasoning) செய்வதில்லை. சொன்னதை நம்பும். சகவாசத்தின் பலம், தோஷம், இரண்டையும் வெளி மனத்தின் (புத்தியின்) தூண்டுதலின்றியே கிரகித்துக் கொள்ளும். வெளிமனம் நடக்கும்பொழுது இது இல்லாதது போல், மறைந்து பாசாங்கு செய்யும். மிகப் பொல்லாத மூர்க்க மூட பலமுடையது. ஆதலால், வெளிமனம், புத்தியின் ஆமோதித்தலுக் குட்பட்டுச் செய்வதாக விவகரிக்கும் பொழுது கூட, இந்த உள் மனத்தின் தூண்டுதல்தான் இரகசியமாய் அடிகாரணமாக இருக்கும். கெட்ட காரியங்கள், கெட்ட சகவாசங்கள் வைத்து, வாசனை இந்தப் பாழான உள் மனதில் புகுந்து விட்டால், வேருடன் பிடுங்கி எறிவது மிகக் கஷ்டம். இதனால்தான், நல் வழிக்குத் திரும்பும்பொழுது சாதகன் அடிக்கடி நழுவி விழுகிறான். இதையெல்லாம் நன்கறிந்த நம் பெரியோர், இக் கஷ்டங்கள் சம்பவிக்க வேண்டாமென்று, சத் சங்கம், நல்ல பழக்கம், படிப்பு இவற்றைத் தேடிக் கொள்ள வேண்டுமென்று மன்றாடுகிறார்கள். ஷோக்குக்காக நம் "ப்ரதர்" ஐத் திருப்திசெய்யப் பிடித்த ஸிகரெட் - பழக்கம் உள்மனதில் வேரூன்றி விடுகிறது. நுரையீரல் ஹிருதய நோய்கள் தாக்கிய பிறகு, இதை இம் மனதிலிருந்து பிடுங்குவதென்றால், பாவம், பகீரதப் பிரயத்தனம் வேண்டியிருக்கிறது!

இந்த உள்மனதிற்கு சுய புத்தி இல்லை என்று கூறினோம். மூட நம்பிக்கைதான் உண்டு. கெடுவதற்கும் காரணமான இத்தன்மைகளே காப்பாற்றுவதற்கும் காரணமாகின்றன. வெளிமனம், புத்தியுடன் கூடி தீவிரமாய் வியாபித்து நிற்கும்கால், தன் மொழிகளால் தவிர்க்கலாம் என்றால், இது நம்பாது இடங் கொடாது. காரணத்திற்கு (Reasoning) அடங்கியதாகத் தோன்றும் மருந்து பாட்டிலைத்தான் நாடும். "தன் மொழியாவது, தகல்பாஜியாவது" என்று கேலி செய்யும். சாதனை காலத்தில் இந்த வெளி மனதிற்கு மயக்க மருந்து கொடுத்து விடுகிறோம். மிகுதியாய் உலாவுவது, நம்பும் தர்க்கிக்காத உள்மனம்!




சவாசனம்

இக்கார்யங்களுக்கு சக்தியளிப்பது, சாதனமாகவுள்ளது, ஆத்மாவைத் தழுவிய இச்சா சக்தி. 'தன் மொழி ப்ரயோகத்திற்கு' இச் சக்தியே முக்கியம். இந்தப் பிரயோகத்தால் தீவிரம் பெற்றுக் கொண்டே போவதும் இச்சா சக்தியே. ஆசன ப்ராணாயாமம் இச்சா சக்திக்கு உத்தமக் களஞ்சியம்.

வெளி விஷய சிந்தனை, உடல் சேஷ்டை இரண்டையும் ஒடுக்கி நிறுத்தினால், வெளி மனமும் படிப் படியாக, சலனம் மழுங்க, லயமும் பெறுகிறது. இக் காரியம் நாம் "ஆனந்த ரகஸ்ய"த்தில் விளக்கியுள்ள சவாசனத்தால் தான் கை கூடும். அஷ்டாங்க யோகத்தில், மேல் சென்றவர்களுக்கு, லகுவான உன்னத வழியுண்டு. கேவலம் உடல் சாதனையில் நிற்பவர்களுக்குச் சவாசனம் வேண்டியதைக் கொடுக்கிறது.

"ஆனந்த ரகஸ்ய"த்தில் கூறியுள்ள, விவரமான சவாசன முறையைப் பன் முறை படித்து மனதில் நிறுத்திக் கொள்வதே முதல் சாதனை. படிக்கப் படிக்க, உண்மைகள், அனுபவங்கள் அனுகூலங்கள் புதிது புதிதாய்த் தோன்றி வரும்.

சித்திரத்தைப் பாருங்கள். அதே மாதிரியாகச் சவம்போல் விழுந்து கிடப்பதே சவாசனம். ஆனால் காலம் கழிந்து விறைத்த பிணம் போலல்ல. புதிதாய் உயிரிழந்த வுடன், நீட்டி, இளகி, சலனமற்று, உணர்ச்சியற்று விழுந்து கிடக்கும் உடலையே உதாரணமாக ஆசனத்தின் பெயர் சுட்டிக் காட்டுகிறது. சவம்போல், ஹ்ருதயமும் சுவாசமும் நின்று, ஆத்ம பிரக்ஞை மட்டும் சம்பூர்ணித்திருந்தால், அதுவே சமாதி. இதன் விதத்திற்குத் தக்கபடி, உடல் முழுவதுமோ, அல்லது உடலின் சில பாகத்திலோ, உஷ்ணம் இருக்கும். சவாசனத்தில் தான் சமாதி செய்ய வேண்டுமென்று எண்ண வேண்டாம். சாதாரணமாய் உட்கார்ந்த நிலையில்தான் செய்வது வழக்கம்.




# சர்க்கஸ் வேலை

"முந்து"

பாலன் ஓர் ஏழைப் பையன். அவனுடைய பெற்றோர்கள் சிறு வயதிலேயே இறந்து விட்டதனால் அவனைக் கவனிக்க யாரும் இல்லை. சோம்பேறியாகச் சுற்றிக் கொண்டிருந்தான்.

அவன் இருந்தது சிறிய ஊரானதால்அங்கு ஒரு வேலையும் கிடைக்கவில்லை. அதனால் பக்கத்து டவுனுக்கு வேலை தேடச் சென்றான். அந்த ஊருக்கு புதிதாக வந்திருந்த சர்க்கஸ் கம்பெனியில் அவனுக்கு ஒரு வேலை கிடைத்தது.

அந்த சர்க்கஸ் மானேஜர் பாலனைப் பல விதத்திலும் கஷ்டப் படுத்தினான். சர்க்கஸிலிருந்த யானை, குதிரை, ஆடு, நாய், முதலியவற்றைத் தினம் தேய்த்துக் குளிப்பாட்ட வேண்டிய வேலை பாலனுக்குக் கொடுக்கப் பட்டது. பாலன் வேலையைச் செய்து கொண்டிருக்கும் போதே மானேஜர் அங்கு வந்து நின்று கொண்டு மிரட்டுவான். ஒவ்வொரு சமயத்தில் பாலனுக்கு அடிகூட விழுவதுண்டு.

சில நாட்கள் சென்றன. சர்க்கஸ் வேடிக்கைகள் செய்பவர்களைப் பார்த்துப் பார்த்து பாலன் வெகு சுலபமாக எல்லா வேடிக்கைகளையும் கற்றுக் கொண்டு விட்டான்.

ஒரு நாள் அவன் மானேஜரிடம் தனக்கு வேறு வேலை கொடுக்கும்படி கேட்டான். அந்த முரட்டு மானேஜர் அவனைக் கன்னத்தில் அறைந்து, "போ வெளியில்!" என்று வேலையிலிருந்தே துரத்தி விட்டான்.

பாலன் மறுபடியும் ஒரு வேலையுமில்லாமல் ஊர் சுற்ற ஆரம்பித்தான். சர்க்கஸ் மானேஜருக்கும் துரதிர்ஷ்டம் வந்து விட்டது. சர்க்கஸில் கூட்டமே இல்லை. வரும்படியும் குறைந்து விட்டது.





ஒரு நாள் பாலன் ஓர் ஆற்றின் மதகில் நின்று கொண்டிருந்தான். அப்போது, யாரோ "பணப்பை தண்ணீரில் விழுந்து விட்டது" என்று கூச்சல் போட்டது அவன் காதில் விழுந்தது.

உடனே அந்த உயரமான மதகிலிருந்து தைரியமாகத் தண்ணீரில் குதித்தான். சாலையில் போய்க் கொண்டிருந்தவர்களெல்லாரும் அவனையே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். பாலன் இரண்டே நிமிஷத்தில் பணப்பையுடன் கரை ஏறி, சொந்தக்காரரிடம் அதைக் கொடுத்தான். அப்போது அந்த வழியே சென்ற சர்க்கஸ் மானேஜரும் சற்று நின்று பாலனின் தீரத்தைப் பார்த்தான்.

அவன் பாலனைத் தனியாக அழைத்துச் சென்று, "உன்னுடைய சாமர்த்தியம் தெரியாமல் போய் விட்டது! உனக்கு நிறைய சம்பளம் போட்டு வேலை தருகிறேன், என்னுடன் வா" என்று கூறி அவனை அழைத்துச் சென்றான்.

ஒரு வாரத்திற்குப் பிறகு ஒரு நாள் சர்க்கஸ் கொட்டகையில் அதுவரையில் இல்லாத அளவு கூட்டம் கூடியிருந்தது. பாலன் வெகு உயரத்தில் ஏறி நின்று கொண்டிருந்தான். கீழே தரையில் ஒரு குழியில் நிறையத் தண்ணீர் இருந்தது. மானேஜர் ஊதியதும் பாலன் அந்த உயரத்திலிருந்து தண்ணீரில் குதித்தான்!

அப்போது கொட்டகையிலிருந்து கிளம்பின கரகோஷம் அந்த ஊர் முழுதும் கேட்டது. ஆட்டம் முடிந்ததும் பாலனுக்குப் பல பரிசுகள் கிடைத்தன. அன்று முதல் அந்த வேடிக்கையைப் பார்க்க கொட்டகையில் கணக்கில்லாமல் ஜனங்கள் கூடினார்கள்.






குடித்தனக்காரர் :— வீட்டை ஓடு மாற்றி வருஷக் கணக்கா ஆயிருக்கும் போலிருக்கே! மழை பெஞ்சால், கூட மெல்லாம் ஜலம் நிற்கிறது, ஸார்!

வீட்டுக்காரர் :—அட பாவமே! அப்படியானால் மீந்தத்துச் சாக்கடையைப் பெரிசு பண்ணிட்டாப் போச்சு!

*         *         *

கடை வெளியில் நின்று ஒருவர், "ஓய்! கடைக்காரரே! இரண்டு விசை பருத்திக் கொட்டை அனுப்பும், சீக்கிரம்!" என்று சொல்லி விட்டு நடந்தார்.

அந்த மனிதரைச் சரியாக அடையாளம் தெரிந்து கொள்ளாத கடைக்காரர், "அது சரி! யாருக்குன்னு சொல்லுங்க!" என்று கேட்டார்.

மனிதர் கோபித்துக் கொண்டு, "என்ன ஐயா விளையாட்டு வேண்டியிருக்கு வியாபாரத்திலே! எங்க வீட்டு மாட்டுக்குத் தான் கேட்டேன்!" என்றார்.

*         *         *

"வீட்டுக்குப் போக பஸ் சார்ஜுக்கு ஓரணா இருந்தால் கொடேன்!"

"இல்லையே! அரை ரூபாயாக அல்லவா இருக்கிறது?"

"ரொம்ப நல்லதாய்ப் போச்சு! ரிக்ஷா வைச்சுக்கிறேன்; கொடு!"

*         *         *

நண்பர்கள் இருவர் பட்டணத்தைச் சுற்றிப் பார்த்து வந்தபோது வழி தவறி ஒரு தெருவின் முனைக்கு வந்தார்கள். மேலே போக வழியில்லையாகையால் இருவரும் சென்ற வழியே திரும்ப வேண்டி வந்தது. ஒரு நண்பன், "என்னப்பா இப்படி யாச்சு! இந்த ஊரில் ஒவ்வொரு மூலையும் முடுக்கும் உனக்குத் தெரியும் என்றாயே!" என்று கேட்டான்.

மற்றவன் :—அதில் என்ன சந்தேகம்! இதுதான் ஒரு மூலை!

"'ஒருவன் எருமைத் தயிரைச் சாப்பிட்டால் முட்டாளாகப் போவான்' என்று எங்கள் டாக்டர் சொல்வதுண்டு."

"ஆனால் அந்த டாக்டர் சொன்னதை நீங்கள் அனுஷ்டிக்கவில்லை போல் தெரியறதே!"

*         *         *

கல்யாணத்தில் கேட்ட சம்பாஷணை :—

"நீர் என்ன, மாப்பிள்ளைக்கு ரொம்ப வேண்டியவரோ?"

"இல்லையே! நான் பெண் வீட்டு மனுஷன்!"

*         *         *

கோபாலன் ஒரு ரூபாய் நோட்டைக் கடைத் தெருவுக்குக் கொண்டுபோய்ச் சில்லறை மாற்றுவதும், மறுபடி சில்லறையைக் கொடுத்து நோட்டாக்குவதுமாகப் பொழுது போக்கிக்கொண்டிருந்தான். கோபாலனின் சிநேகிதன் இதைக் கவனித்து, "இதென்ன வேலையற்ற வேலை! இதில் லாபம் ஒன்றுமில்லையே" என்றான்.

"உனக்கென்ன தெரியும், லாபம் இருப்பதும் இல்லாததும்! யாராவது ஒருவராவது சில்லறை கொடுக்கும் போது பிசகாமல் இருக்கப் போகிறார்களா! நாம் தவறாமல் இருந்தால் லாபம் தானே?" என்றான்.

*         *         *

கம்பெனி முதலாளியின் முன்பு ஒரு சின்னப்பையன் வந்து நின்று, ஆபீஸ் பையன் உத்தியோகம் வேண்டுமென்று கேட்டான். முதலாளி உற்றுப் பார்த்து, "எலே! நீ தானே நேற்று என் வீட்டுத் தோட்டத்திலே மாமரத்தில் ஏறின பயல்?" என்று ஞாபகமாகக் கேட்டார்.

"ஆமாம்......ஆனால் ஒரு காய் கூட நான் பறிக்கல்லிங்க!", என்று குழறினான் பையன்.

"எடுத்த காரியத்தை முடிக்காத பயல் எனக்கு வேண்டியதில்லை! போ!" என்றார் அவர்.






மற்றுமொரு வெற்றிகரமான வருஷம்

1942-ல் புது வியாபாரம்

ரூ. 9,50,00,000க்கு அதிகம்

இந்தியாவின் மிகப் பெரிதானதும், பலமானதுமான லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனியால் அளித்துவரும்

சேவையிலும் பாதுகாப்பிலும்

பொதுஜன அபிமானமும் அதிகரித்துவரும் — நம்பிக்கையுமே அடையாளம் —

ஓரியண்டல்

கவர்ன்மென்ட் செக்யூரடி லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிட்.

இந்தியாவில் ஸ்தாபிதம் : 1874 — தலைமை ஆபீஸ் : பம்பாய்

கிளை ஆபீஸ்கள் :—

ஓரியண்டல் பில்டிங்ஸ், அரமனைக்காரத் தெரு, ஜி.டி., மதராஸ். நெ. 3, மெக்டோனல்ட் ரோடு, கண்டோன்மெண்ட், திருச்சி. மேலமாசி வீதி, மதுரை, இஸ்மெயில் ராவுத்தர் தெரு, கோயமுத்தூர்.

பாத உபாதைகளை ஜாம்-பெக் உபயோகித்துப் போக்குங்கள்

பிரதி இரவும் தவறாமல் தடவித் தேயுங்கள்

சரும உபாதைகளையும், காயங்களையும் குணமாக்குவதில் ஜாம்பெக்கிற்கு ஈடு இணை கிடையாது. எப்பொழுதும் கைவசம் ஒரு பெட்டி ஜாம்பெக் வைத்திருங்கள்.



ஏஜண்ட்ஸ் :
மெஸர்ஸ் தாதா & கோ.,
பி. டி., மதராஸ்.

எப்பொழுதும் ஜாம்பெக் உபயோகியுங்கள்

ZAM-BUK

மிருகக் கொழுப்பு சேராதது

# தியாகம்

கி. ரங்கராஜன்

கும்பகோணம் காலேஜுக்கு எதிர்த்தாப் போலுள்ள அழகான வீடு. ஒரு நாள் இரவு நிலவில் வேணுகோபாலன் ஒரு சாய்மான நாற்காலியில் படுத்துக் கொண்டு நக்ஷத்திரங்களைப் பார்த்த வண்ணம், தன் மனதில் இயற்கையின் வனப்பை வியந்துகொண்டிருந்தான். அவன் மனைவி கோமளம் அருகில் வந்து நிற்பதைக் கூட அவன் அறியவில்லை.

"என்ன பலமான யோசனை! நான் வந்தது கூடத் தெரியாமல் அப்படி என்ன வானத்திலேயிருக்கிறது?" என்று சொல்லிச் சிரித்துக் கொண்டே பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள்.

"ஆம், யோசனையோடு தானிருந்தேன். வானத்தில் இருக்கும் சந்திரனைப் பற்றி நினைத்தபோது, உன் முகமும் நினைவிற்கு வந்தது; அந்த நினைப்பிலேயே மதி மயங்கிப் போய் விட்டேன்."

"போதுமே பரிகாஸம்! உங்களை ஒன்று கேட்க வேண்டும் என்றிருக்கிறேன். உத்தரவானால் சொல்லுகிறேன்."

"என் உத்தரவு எதற்கு? நீ தாராளமாகச் சொல்லலாம். செய்யக் காத்திருக்கிறேன்."

"எதிரே யுள்ள ஆற்றில் ஜலம் எவ்வளவு ரமணீயமாய்ப் போகிறது, பார்த்தீர்களா?"

"ஆம், போகிறது!"

"அந்த ஆற்றில் நீங்களும் நானும், இந்த இரவில், ஒரு படகில் ஏறிச் சற்றுத் தூரம் போய் வரலாமோ?"

இதைக் கேட்டதும் வேணுகோபாலனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவன் கண்கள் மிரள மிரள விழித்தன. அவைகளில் அவன் அறியாமலே நீர் சுரக்க ஆரம்பித்தது, நெற்றிப் பொட்டில் கையை வைத்துக் கொண்டு நிலை தடுமாறிப் போய் அப்படியே அயர்ந்து உட்கார்ந்து போனான்.

கணவனிடம் திடீரென்று இந்த மாறுதல்களைக் கண்டதும் கோமளத்துக்கு ஒன்றும் தோன்றவில்லை. பதறிப் போய், "நான் ஒன்றும் சொல்லவில்லையே! ஏன் இந்தத் துன்பம் உங்களுக்கு? ஏன் இப்படி இருக்கிறீர்கள்? எனக்குச் சற்று சொல்லக் கூடாதா?" என்று கெஞ்சினாள்.

இரண்டு நிமிஷம் கழித்துத் தன் சுயவுணர்வுப் பெற்றவனாய் அவன், "கோமளம், சற்று அப்படி உட்கார். நான் சொல்லப் போகிறதைக் கவனமாய்க் கேள்" — என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தான்.

"இந்தப் பீடிகை யெல்லாம் எதற்கு? எனக்குப் பயமாயிருக்கிறதே!" என்றாள் கோமளம்.

"பயப்பட்டுத்தான் ஆக வேண்டும். நான் ஒரு கொலைகாரன்!"

"என்ன விளையாட்டு!"

"விளையாட்டே அல்ல; நான் கொலைகாரன்தான். வேண்டுமென்று செய்யவில்லை அந்தக் கொலையை......நீ இந்த வீட்டுக்கு வந்து எவ்வளவு வருஷமாயிற்று?"

"பத்து வருஷம்!"

"அதற்கு முன் நான் எங்கிருந்தேன்?"

"திருச்சினாப்பள்ளியில் இருந்ததாகச் சொன்னீர்கள்."


"ஆம், திருச்சியில்தான் இருந்தேன். என்னுடைய மூத்த மனைவியைப் பற்றி உனக்குச் சொல்லியிருக்கிறேனோ?"

"சொன்னீர்கள்; நல்ல ரூபவதி என்று சொன்னீர்கள். மூன்று நாள் ஜுரத்தில் இறந்து போய் விட்டதாகவும் சொன்னீர்கள்."

"அவள் ஜுரத்தில் இறக்கவில்லை."

"பின்?"

"எனக்குச் சிறு வயதிலேயே தந்தை இறந்து போய் விட்டார் என்று சொல்லியிருக்கிறேன். என்னை வளர்த்துப் படிக்க




வைத்து என்னை ஓர் ஆளாக்கியது என் அம்மான் தேவராஜன். நானும் செவ்வனே படித்தேன். எப். ஏ. வகுப்பில் முதலாவதாகத் தேறினபோது மாமாவுக்குப் பரம சந்தோஷம். அவருக்கு இரண்டு பெண்கள். மூத்த பெண் ராதையை எனக்குக் கொடுத்தார். பெண் நல்ல அழகி. சிறந்த ஒழுக்கம் உடையவள். என்னிடம் கரைகடந்த பிரீதி. பி. எல். பாஸ் செய்ததும் திருச்சியிலேயே வக்கீல் தொழிலை ஆரம்பித்தேன். தொழிலில் நல்ல வருமானம். எல்லாம் அவள் அதிர்ஷ்டத்துக்கு என்று நினைத்துப் பரமானந்த பரிதனாய் இருந்தேன். நான்கு வருஷங்கள் ஓடி மறைந்தன. என்னுடைய வாழ்க்கையில் நானே அழுக்காறு கொண்டேன். கடவுளுக்கு எங்கள் இன்ப வாழ்வு பொறுக்கவில்லை போலிருக்கிறது! ராதைக்கு இருந்தாற் போலிருந்து உடம்பில் ஏதோ ஒரு கோளாறு ஏற்பட்டது. மாலை வேளையில் ஜுரம் அடித்தாற் போன்ற ஒரு கொதிப்பு. சாப்பாடில் வர வர நாட்டம் இல்லை. வைத்தியனிடம் காட்டினேன். ஏதோ மருந்து கொடுத்தான். குணம் தெரியவில்லை. படிப்படியாக நோய் அதிகரித்து வந்தது. சென்னைக்கு அழைத்துப் போய் ஒரு சிறந்த டாக்டரிடம் காட்டினேன். 'எலும்பு உருக்கி வியாதி' யென்று சொல்லி, ஒரு மருந்தை எழுதிக் கொடுத்து 'ஊருக்குப்



4—2811



## அவனுக்கு சுலபமாக பல் முளைக்கும்

குழந்தைகளுக்கு பல் முளைக்கையில் தாய்மார்கள் ஸ்டீட்மன்ஸ் பவுடர்களை முன் யோசனையுடனேயே கொடுக்கின்றனர். குழந்தைகளுக்கு இக்காலத்தில் குளிர்ச்சியை கொடுத்து ஆரோக்யத்தை யளிக்கிறது. குழந்தைகளுக்கு சாதாரணமாயுள்ள மலச்சிக்கலை நிவர்த்திக்கின்றது. பல் முளைக்கும் காலத்தில் சகஜமாக ஏற்படும் வியாதிகளை ஸ்டீட்மன்ஸ் பவுடர் நிவர்த்தி செய்து ஆரோக்யமாயிருக்க உதவுகிறது. தயாரிக்கும் பொழுது கை படவே யில்லை.

**STEEDMAN'S POWDERS**

**ஸ்டீட்மன்ஸ் பவுடர்**

மலச்சிக்கலுக்கு

எல்லா மருந்து வியாபாரிகளிடமும், கடைகளிலும், ஸ்டோர்களிலும் கிடைக்கும்

மொத்தமாக வேண்டுபவர்

**கிரஹாம்ஸ் டிரேடிங் கம்பெனி (இந்தியா) லிமிடெட்**

பம்பாய் கல்கத்தா கராச்சி ரங்கூன் மதராஸ்

உள்ளூர் டிஸ்ட்ரிப்யூடர்:

**A. C. கோபாலஸ்வாமி அய்யங்கார்**

மதராஸ்.



போய்விடுங்கள்' என்றும் சொன்னார் அவர். நாங்கள் திருச்சி திரும்பினோம். கடவுள் மீது பாரத்தைப் போட்டு எங்களால் இயன்ற வைத்தியங்களைச் செய்தோம். ஸ்ரீரங்கம், திருவானைக்காவல் முதலிய க்ஷேத்திரங்களுக்குச் சென்று, ஸ்வாமி தரிசனம் செய்து தெய்வங்களைப் பிரார்த்தித்துக் கொண்டோம். ஒன்றும் பயன் படவில்லை. ஒரு இரவு கூடத் தூங்காமல் ஐந்து வருஷங்கள் அவளுடன் கஷ்டப்பட்டேன். வர வர நம்பிக்கை குறைந்து கொண்டு வந்தது.

"ஒரு நாள் அவள் என்னை அருகில் அழைத்து, 'அத்தான், (அவள் என்னை அப்படித்தான் அழைப்பாள்.) நான் இனி உங்களுக்கு உபயோகப்படப் போவதில்லை; சீக்கிரம் இறக்கவும் போவதில்லை. உங்கள் இன்ப வாழ்வைக் குலைக்க நான்—பாவி—பிறந்தேன். நீங்கள் வேறொரு பெண்ணை மணந்து கொள்ளுங்கள். நீங்கள் சௌக்கியமாக இருப்பதைப் பார்த்து விட்டு, உயிரைவிட்டால்தான் என் நெஞ்சு வேகும்' என்று சொல்லி என் கையைப் பற்றி அன்புடன் அணைத்துக்கொண்டாள். இதைக் கேட்டதும் என் நெஞ்சு பிளந்து விடும் போலாகி விட்டது. அப்படியே அவள் கூந்தலில் என் முகத்தை வைத்துத் தேம்பித் தேம்பிச் சிறு குழந்தை போல அழுதேன்.

"'ராதா, உனக்குக் கடவுள் அருளால் இப்பாழும் நோய் நீங்கி குணமாகி விடும். வீணாக மனத்தைப் புண்படுத்திக் கொள்ளாதே!' என்று ஆறுதல் சொல்லி விட்டு அப்பால் சென்றேன்.

"நாட்கள் சென்றன. மாதங்களும் சென்றன. என் மாமாவே ஒரு நாள் தனியாக என்னை அழைத்துத் தம் மற்றொரு பெண்ணை மணந்து கொள்ளும்படி வேண்டினார். அவருக்கும் ஏதோ சொல்லி விட்டுப் போய் விட்டேன். நண்பர்களும் என்னைப் பலமாகத் தூண்டித் துன்புறுத்தினார்கள். கடைசியாக ஒரு நாள் என் ஆப்தமித்திரனும், குழந்தைப் பருவ முதல் ஒன்றாகப் படித்தவனுமான ஆத்மநாதன், சென்னையிலிருந்து எனக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதினான். அதில், தான் எனக்கு ஒரு பெண்ணை நிச்சயித்திருப்பதாகவும், அந்தப் பெண்ணை நான் மணந்து கொள்ளும்படியாகவும் குறிப்பிட்டு, மறுத்தால் என்னோடு என்றைக்குமே முகாலோபனங் கூடச் செய்யப் போவதில்லை என்றும் எழுதியிருந்தான். அவனுக்கு நான் ஒரு கடிதம் எழுதினேன். அந்தக் கடிதம் தான் ராதையின் உயிருக்கு நமனாய் வந்தது."

"அந்தக் கடிதத்தில் என்ன எழுதி யிருந்தீர்கள்?" என்று இடைமறித்துக் கேட்டாள் கோமளம்.

வேணுகோபாலனுக்குக் கண்கள் சிவந்து போயின. உணர்ச்சி வேகத்துடன் சொன்னான்:— "நான் எழுதின கடிதம் இரண்டே வரிதான்:

"'அரிய நண்ப, உன் கடிதம் பார்த்தேன். உன் அனுதாபத்துக்கு வந்தனம். பாக்கியம் தவறிப் போனபின்பு சிந்திக்க வேண்டிய ஒன்றை இப்பொழுதே நினைக்க அஞ்சுகின்றேன். உன் விருப்பத்தை நிறைவேற்ற அசக்தனாயிருக்கிறேன். பின்பு பார்த்துக் கொள்ளுவோம்.' இதுதான் அந்தக் கடிதம்.' அவள் அந்தக் கடிதத்தைப் பார்த்திருக்க வேண்டும் என்று அப்புறம் ஊகித்தேன்.

"ஒரு நாள், 'அத்தான், ஸ்ரீரங்கம் காவேரியில் நிறைய ஜலம் போகிறதாமே, ஒரு நாள் மாலை வேளையில் நாம் உல்லாசமாக ஒரு படகில் சிறிது போய் வந்தாலென்ன? உடம்புக்கும் நல்லது, சற்று மனோக்கியமாகவும் இருக்குமே' என்றாள்.

"'ஒரு நாளென்ன? இன்றே போவோம்' என்று சொல்லி, பிர




சுகந்த பாக்குத்தூள்

**எம். கே. கிருஷ்ண செட்டி.**

அசோகா பாக்டரி, கோயமுத்தூர்.

மதராஸ் விறபனையாளர்கள்:

**வி. கனகய்ய செட்டி & கம்பெனி,**

நைனியப்ப நாயக்கன் தெரு.

யாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தேன்.

“திருச்சியி லிருந்து நாங்கள் புறப்பட்டு ஸ்ரீரங்கம் வந்தோம். முன்பே சொல்லி வைத்தபடி ஒருவன் படகு ஒன்றைக் கொண்டு வந்தான். ஏனோ பரிசலோட்டி, யமபடன் போன்று எனக்குத் தோற்றமளித்தான். நாங்கள் படகில் ஏறிக் கொண்டு சிறிது தூரம் போயிருப்போம். என்னைக் கெட்டியாகப் பிடித்திருந்த அந்த மெல்லிய கை சற்றே நெகிழ்ந்தது.

“ ‘அத்தான் போய்வருகிறேன்!’ என்ற குரல்கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினேன். என் செல்வம் ஆற்றில் குதித்து விட்டாள்! பின்னாலேயே நானும் குதித்தேன். படகோட்டியும் குதித்தான். தேடு தேடென்று தேடினோம். விஷயம் அறிந்த ஊரார் பலரும் தேடினார்கள். பிரயோசனமில்லை. மூன்று நாள் கழித்து உருக்குலைந்த அந்த உடலைத்தான் கண்டெடுக்க முடிந்தது. தகனமாயிற்று. என் வயிற்றில் தீராத கொள்ளியை வைத்து விட்டு, அந்தப் புனித உடல் சாம்பலாயிற்று.

“இரண்டு வருஷம் கழிந்து போயிற்று. காலம் என் துக்கத்தை மாற்றிற்று. நீ வந்தாய், புதிய வாழ்க்கையை ஆரம்பித்தோம். இது தான் என் முதல் மனைவியின் வாழ்க்கைச் சரிதை. பத்து வருஷங்களுக்கு முன் நடந்த இந்த நிகழ்ச்சியை இன்று நீ என் நினைவுக்குக் கொண்டுவந்தாய்” என்று சொல்லி, ஒரு பெருமூச்சு விட்டு, அடிபட்ட புறாவைப் போல, மெய் தளர்ந்து சாய்ந்து விட்டான் வேணுகோபாலன்.


கோமளம் அப்படியே அவனைத் தன் மார்பின் மீது சார்த்திக் கொண்டு “ஐயோ, உங்கள் மனதைப் புண்படுத்தி விட்டேனே! இந்த விஷயம் எனக்குத் தெரிந்திருந்தால் அந்தப் படகைப்பற்றி பேசியிருப்பேனா? மன்னித்துக் கொள்ளுங்கள்” என்று வருந்தினாள்.

வெகு நேரம் கழித்து அவனுக்கு உணர்வு வந்தது.

“கோமளம், கம்பர் எங்கேயோ ஓரிடத்தில் ‘தன்னையும் துறக்கும் தன்மை காமத்தே தங்கிற்றன்றே’ என்றார். அவள் தன் கணவனிடம் தனக்குற்ற மெய்யன்புக்காகத் தன்னையே தியாகம் செய்து விட்டாள். அந்தத் தியாக மூர்த்தியின் ஞாபகமாக, நமக்குப் பெண் பிறந்தால் — அதற்கு ‘ராதை’ என்று பெயர்...” என்று சொல்லி நிறுத்தினான்.

“அதற்கென்ன! அப்படியே வைப்போம்” என்றாள் கோமளம்.


உங்கள் பற்களுக்கு சிறந்ததே தரும்
டாக்டர் ப்ளெஷர்ஸ்
டென்டல் க்ரீம்




ஸோல் ஏஜண்டுகள்:
எம் கோல்மன் & கோ
ஹமாம் ஹவுஸ்
ஹமாம் தெரு
போர்ட், பம்பாய்

சென்னைக்குப் பிரதிநிதிகள்:
கெ. பார்த்தசாரதி & கோ.
117, அரமனைக்காரத் தெரு, மதராஸ்
மைசூர் சமஸ்தானத்திற்கு விநியோகஸ்தர்கள்:
ஓம்கார் & கோ.
308-309, அவன்யூ ரோடு,
பெங்களூர் ஸிட்டி.





# திருப்தி, அமைதி

ஒரு கப் டீ அருந்தியவுடன்.
கேட்பானேன், நரஸூஸ் டீ
தான்! நல்ல காபி, டீயை
அனுபவிக்க அறிந்தவர்கள்
நரஸூஸ் காபி, டீயையே
விரும்புகிறார்கள்.




நரஸூஸ் மானுபாக்சரிங் கம்பெனி,
சேலம் தென்னிந்தியா

MNK-22-TM

# மர்மம் என்ன ?

"சரி"

"இந்த மெட்ருஸ் முழுக்க சுத்திப் பாருங்கோ, உங்களுக்கு இது மாதிரி இடம் அகப்படவே அகப்படாது."

"ரொம்ப சௌகரியமான இடம் போலே யிருக்கு ?"

"சௌகரியமா சாதாரண சௌகரியம்னு சொல்லிடப் படாது! மொத்தம் நாலு குழா இருக்கு!"

"ஓஹோ! சரிதான்! ஆனா, எல்லாத்திலேயும் ஜலம் வருமோ ?"

"நன்னாக் கேட்டேள் ஒரு கேள்வி! ஹூம்!...நாள் பூராவும் கொட்டு கொட்டுன்னு கொட்டிண்டே இருக்கும்!"

"அப்படீன்னா தேவலையே!...உம்...'காத்து' விஷயம் எப்படியோ ?"

"காத்தா!......தலையைப் பிய்ச்சிண்டே போயிடும்."

"கொசுக் கடி ?"

"பேசப் படாது!"

"வாடகை ?"

"பின் கட்டுக்குப் பதினைஞ்சு ரூபாய்! மாடியிலே இருக்கிற 'போர்ஷ' னுக்கு இருபது ரூபாய்!"

"அதுக்குக் குறையாதாக்கம் ?"

"நானே ரொம்பக் குறைவாத்தானே வாடகையை நிர்ணயம் பண்ணி யிருக்கேன் ? இன்னம் எப்படிக் குறைக்கிறது ? நான் இந்த வீட்டை மொத்த குடிக் கூலிக்கு வாங்கிண்டத்திலே யிருந்து எனக்கு நஷ்டந்தான். இருந்தாலும் அதை நான் பொருட்படுத்தற தில்லே! மனுஷா நல்லவாளா இருந்தாப் போறும் என்கிறது தான் என்னுடைய கொள்கை! நீங்க வீணா ஒண்ணும் யோசிக்காதேயுங்கோ. நல்ல திவ்யமான இடம். அதோடு கூட ராசியுள்ள இடம்."

"ஓஹோ!"

"ஆமாம். நம்ப ஜட்ஜ் கோதண்ட ராமய்யர் இருக்கார் பாருங்கோ ?"

"ஆமாம்."

"அவருக்கு அந்த உத்தியோகம் கிடைக்கிறதுக்கு முந்தி......



இந்த வீட்டு மாடியிலேதான் குடித்தனம் இருந்திருக்கார்."

"அடே! உம் ?"

"வக்கீல் சுந்தரமய்யரைத் தெரியுமோல்லியோ ?"

"யாரு ? இப்போ மாம்பலத்திலே தனியா ஒரு பங்களா வாங்கிண்டு இருக்காரே, அவரா ?"

"ஆமாம், அவரே தான்! இந்த வீட்டிலே கொஞ்ச நாளைக்குஅவர் குடி யிருந்தார். அதுக்கு முன்னே அவருக்குக் குழந்தை குட்டிகள் ஒண்ணும் கிடையாது. இந்த வீட்டுக்கு வந்தப்பறந்தான்...புத்திரப் பிராப்தி யெல்லாம் ஏற்பட்டது."

"ஓஹோ! சரிதான்!"

"அது தான் சொல்றேன், வாடகையைப் பார்க்காதேயுங்கோ! இடம் ரொம்ப ராசியுள்ள இடம்..."

எங்கள் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் தான் மேலே கூறப்பட்ட சம்பாஷணை நடந்து கொண்டிருந்தது. அதை நானும் என் மனைவி மங்களமும் ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்தோம்.

சாதாரணமாக எனக்குப் பக்கத்து வீட்டுப் பேச்சுக்களை ஒட்டுக் கேட்கும் வழக்கமே இல்லை. அதுவும், அந்த வீட்டுக்கு நான் குடித்தனம் வந்து இரண்டே நாட்கள் தான் ஆகியிருந்தன. எனவே பக்கத்து வீட்டு விவகாரங்களில் எனக்கு என்ன சிரத்தை இருக்கக் கூடும் ? அப்படி யிருக்கும் போது நான் ஏன் ஒட்டுக் கேட்டேன் என்றால், மங்களம் என்னிடம் அவசரமாக ஓடி வந்து, "நான் சொன்னேனே, நீங்க நம்ப மாட்டேன்னு சொன்னேளே! இப்படி வந்து கேளுங்கோ!......பக்கத்தாத்திலே ஒரு இடம் காலியாகப் போகிறதாம். அவாத்து நடேசய்யர் அதைப் பத்திப் பேசிண்டிருக்கார்!" என்று என்னை வற்புறுத்தி, பக்கத்து வீட்டுக்கும் எங்கள் வீட்டுக்கும் நடுவில் இருந்த ஜன்னல் பக்கமாக அழைத்துக் கொண்டு போனாள். அங்கிருந்தபடியே பக்கத்து வீட்டுப் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தோம்.

மங்களத்துக்கு இவ்வாறு பக்கத்து வீட்டில் காலியாகப் போகும் இடத்தைப் பற்றி சிரத்தை ஏற்பட்டதற்கு என்ன காரணம் என்றால், நாங்கள் புதிதாகக் குடித்தனம் வந்த அந்த வீடு அவளுக்குக் கொஞ்சங் கூடத் திருப்திகரமா யில்லை. குடித்தனம் வந்த மறு நாளே வேறு எங்கேயாவது போய்விட வேண்டுமென்று தோன்றி விட்டது. அந்த நிலைமையில், பக்கத்து வீட்டில் ஒரு இடம் காலியாகப் போகிறது என்று தெரிந்ததும், அவளுக்கு உற்சாகம் தாங்க முடியவில்லை. அதனால்தான் என்னை அவ்வளவு அவசரமாக அழைத்துக்கொண்டு போய், பக்கத்து வீட்டு நடேசய்யர் பேசிக் கொண்டிருந்த விஷயங்களைக் கவனிக்கச் செய்தாள்.

சம்பாஷணை யெல்லாம் முடிந்ததும் மங்களம், "ரொம்ப நல்ல இடமா இருக்கும்னு தோண்றது! வீணா ஒண்ணும் யோசனை பண்ணாமே சட்டுப்புட்டுனு......அட்வான்ஸைக் கொண்டு போய்க் கொடுத்துட்டு வந்திடுங்கோ. அடுத்த முதல் தேதியே நாம்ப அங்கே போயிடலாம்!......இந்த வீட்டிலே என்னாலே ஒரு க்ஷணம் கூடக் குடித்தனம் பண்ணவே முடியாது!" என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டாள்.

வீட்டில் குடித்தனம் செய்யப் போகிறவள் அவ்விதம் தீர்மானித்து விட்ட பிறகு நமக்குப் பதில் சொல்லுவதற்கு என்ன இருக்கிறது ?

"சரி, அப்படியே செய்துடலாம். இப்பவே போய் 'அட்வான்'ஸைக் கொடுத்துட்டு வந்துடறேன்!" என்று அவளுடைய யோசனையை ஏற்றுக் கொண்டு, கையில் பணத்துடன் பக்கத்து வீட்டுக்குச் சென்றேன்.

நான் உள்ளே நுழையும் சமயம், அந்த வீட்டு நடேசய்யர் மீண்டும் பேசிக் கொண்டிருந்தது என் காதில் விழுந்தது. அந்த வார்த்தைகளைக் கேட்டதும் நான் அப்படியே ஒரு கணம் ஸ்தம்பித்து நின்று விட்டேன்!

"மெட்ராஸ் முழுக்கச் சுத்திப் பார்த்தாலும், இவ்வளவு மோசமான வீடு அகப்படவே அகப்படாது! ஒரு சௌகரியம் உண்டா?......நாலு குழா இருக்குன்னுதான் பேரு...ஒண்ணிலேயாவது ஜலம் வரதா?... கொசுக் கடியோ ஆளைக் கொன்னுடும் போலே இருக்கு!...... 'காத்து'ங்கிற பேச்சே கிடையாது!.........அதோடே கூட இந்த வீட்டுக்குக் குடித்தனம் வர பேர்கள் சேர்ந்தாப்போல இரண்டு மாசம் கூட இருக்கிறது கிடையாது. ராசி இல்லாத இடம்னு காலி செய்துண்டு போயிடறா."

இவ்விதமாகத்தான் அவர் பேசிக் கொண்டிருந்தார். சில நிமிஷங்களுக்கு முன் அந்த வீட்டைப்பற்றி ஒரேயடியாகப் புகழ்ந்து பேசிய அதே மனுஷ்யன், இப்போது அதற்கு முற்றிலும் மாறாகப் பேசுவதென்றால் வியப்பாக இராதா?

எனக்கு ஒன்றுமே புரியவில்லை. உள்ளே நுழையத் தோன்றாமல் வாசற்படியிலேயே தயங்கி நின்றேன். அப்போது உள்ளேயிருந்து நடேசய்யர் வெளியே வந்து தம்முடன் பேசிக்கொண்டிருந்த மனிதருக்கு விடை கொடுத்து அனுப்பி விட்டு, "வாருங்கோ சார், உள்ளே!...... நீங்க தானே பக்கத்து வீட்டுக்குப் புதுசாக் குடித்தனம் வந்திருக்கிறது?" என்று விசாரித்தவாறு என்னை வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றார்.

நான் சிறிது நேரம் எதைப் பற்றியெல்லாமோ பேசிக்கொண்டிருந்து விட்டு; "கொஞ்ச நாழிக்கு முன்னாலே, இந்த வீட்டிலே நல்லதா ஒரு இடம் காலியா இருக்குன்னு நீங்கள் சொல்லிண்டிருந்தது என் காதிலே விழுந்தது. ஆனா, இப்போ வெளியிலே போனாரே ஒருத்தர், அவரிடத்திலே நீங்க பேசிண்டிருந்த விஷயமும் காதிலே விழுந்தது. 'சுத்த மோசமான வீடு'ன்னு சொன்னேள். எனக்கு ஒண்ணுமே புரியலை. இதுலே ஏதாவது மர்மம் 'கிர்மம்' இருக்குமோன்னு சந்தேகம் உண்டாகிறது" என்றேன்.

அதற்கு அவர் சிரித்துக் கொண்டே, "இதிலே மர்மம் ஒண்ணுமே இல்லே! முதல்லே பேசிண்டிருந்த ஆசாமி இந்த வீட்டிலே குடிக்கூலிக்கு இடம் பார்க்க வந்தவர். இப்போ பேசிண்டிருந்தவர் இந்த வீட்டுக்குச் சொந்தக்காரர். வீட்டு வாடகையை கொஞ்சம் உயர்த்தணும்னு வந்திருந்தார். அதுக்குத் தகுந்தபடி தானே பேச வேண்டியிருக்கு?" என்றார்.




ஆரோக்கியமாக இருந்து ஜலதோஷத்தைத் தடுங்கள்

● தினமும் வாட்டர்பரீஸ் சாப்பிட்டு தேகத்திற்கு வலுவூட்டி திட ஆரோக்கியத்துடன் விளங்குங்கள். ஜலதோஷமும் இதர சில்லரைக் கோளாறுகளும் உங்களை அணுகாமல் வாட்டர்பரீஸ் அரண் போல் பாதுகாப்பளிக்கும். இதன் விவர், மால்ட் சத்துக்கள் புதிய ரத்த விருத்தி அளித்து உங்களை யௌவனமாயும் சுறுசுறுப்புடனும் இருக்கச் செய்யும். தேக நிலை க்ஷீணித்துப் போகும் வரை காத்திருக்காதீர்கள்....... உங்கள் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க இன்றே வாட்டர்பரீஸ் சாப்பிட ஆரம்பியுங்கள்.

வாட்டர்பரீஸ் காம்பௌண்ட்

உங்களை ஆரோக்கிய நிலையில் இருக்கச் செய்யும்.




எந்த மணி பிரகாரமும்...

ஸாரிடோன்

எல்லா வித வலிகளையும் பத்தே நிமிஷத்தில் நிறுத்தக்கூடியது



AFTER MALARIAL FEVER



மலேரியாவிற்குப் பிறகு

Angier's Emulsion ஆன்ஜியர்ஸ் எமல்ஷனில் பிராணிகளின் எண்ணெய் எதுவும் கலப்பில்லை. கைப்படாமல் தயாரித்தது. ஆகவே சகல ஜாதியினரும், மதத்தினரும் யாதொரு ஆக்ஷேபணையின்றி உபயோகிக்கலாம்.

ANGIER'S EMULSION

யுத்த கால நிர்ப்பந்தங்களினால் சப்ளைகள் அதிகம் கிடையாது.

வேலை அதிகமாகத் தோன்றினால் டானிக் அருந்துங்கள்

டானிக் உபயோகிக்கின் டோனேபில் சாப்பிடுங்கள்

டாக்டர்கள் இதையே சிபார்சு செய்கிறார்கள்

#503

எல்லா மருந்து கடைகளிலும் கிடைக்கும்

இந்தியன் பாங்க் லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ், நார்த் பீச் ரோட், மதராஸ்
தென்னிந்தியாவில் முக்கிய இடங்களிலும் பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள்

| | |
|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் | ரூ. 1,00,00,000 |
| வழங்கி, வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூ. 60,00,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் (1-11-43 தேதியில்) | ரூ. 28,80,000 |
| ரிஸர்வ் நிதி | ரூ. 29,00,000 |

மொத்த ஆஸ்திகள் ரூ. 8 கோடிக்கு அதிகம்

N. கோபால அய்யர் (செக்ரடரி).


# சகுந்தலையின் காதலன்

"தேவன்"

முந்தா நாள் சாயங்காலம் கோபாலையரைப் போய் ஆஸ்பத்திரியில் பார்த்துவிட்டு வந்தேன். மண்டையில் காயம் ஆழமாகத்தான் இருக்கிறது; இரண்டு பல்லைப் பிடுங்கி எடுத்திருக்கிறார்கள்; கன்னத்தில் வீக்கம் கொஞ்சம் குறைந்திருப்பதாகக் காண்கிறது. ஆனால், அந்தப் படுபாவிப் பயல் நடேசன் முதுகில் ரொம்ப ஓங்கிக் குத்தி யிருக்கிறான். அந்தக் குத்தில் முதுகெலும்பு எப்படி முறியாமல் இருந்ததென்று டாக்டரே ஆச்சரியப் படுகிறாராம்.

சில்லறை விஷமங்கள் செய்கிற இந்த கோபாலையர் தடிகாரப் பயலான நடேசனிடம்கூடப் போய்த் தன் வாலை ஆட்டியிருக்க வேண்டியதில்லை; கடைசியில் இப்படி அடிபட்டு ஆஸ்பத்திரிக்குப் போயிருக்க வேண்டியதுமில்லை!

பதினைந்து நாளைக்கு முன்பு இது நடந்தது. நான் எங்கேயோ அப்போது தான் வெளியில் கிளம்பிக் கொண்டிருந்தேன். தொந்தி குலுங்க, மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க, பரபரப்புடன் ஓடி வந்து, என் வீட்டு ரேழியில் ஒளிந்து கொண்டார் கோபாலையர். நான் ஒன்றும் புரியாமல் திகைத்த போது, "அடே! உனக்குப் புண்யமுண்டு! சட்டுனு கதவைச் சாத்துடா! அந்தத் தடிகார நடேசன் என்னைத் துரத்திக்கொண்டு ஓடி வருகிறானடா!" என்று காலில் விழாத தோஷம் கெஞ்சினார்.

"சும்மா இரும், ஓய்! பயப்படாதேயும்! நான் பார்த்துக் கொள்கிறேன்! அந்தப் பயல் உம்மை எதற்குத் துரத்தவேண்டும்?" என்று கேட்டேன்.

"ஐயோ! அவன் அந்த சகுந்தலையிடம் காதல் கொண்டு விட்டானாம்... சீக்கிரம் கதவைச் சாத்தேன், உனக்குக் கோடிப் புண்யம் உண்டுடா!" என்றார் கையை உதறிக்கொண்டு.

"நீர் சொல்வது ஒன்றுமே புரியவில்லையே! அவன் சகுந்தலையிடம் காதல் கொண்டால், சகுந்தலையைத் துரத்தட்டுமே!" என்றேன் சாவதானமாக.

ஆனால் அவர் கெஞ்சின கெஞ்சலில் கதவைத் தாழ்ப்பாள் போட்டுவிட்டு வந்தப்புறம்தான் விஷயத்தை விசாரித்தேன். அவர் சொன்ன வரலாறு இது தான்.


இந்தத் திருவடமருதூர் வரவர ரிடயர் ஆனவர்களுக்கே வாசஸ்தலமாகிக் கொண்டு வருகிறதல்லவா? இரண்டு மாசத்துக்கு முந்தி மகாதானத் தெருவிலே ரிடயர்ட் போலீஸ் ஸூப்ரிண்டெண்ட் ஸுப்பராம ஐயர் என்பவர் வந்திருக்கிறார் தெரியுமோ இல்லையோ? அவர் வந்தப்புறம்



......மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க......

தான் நடேசனின் நாடகம் ஆரம்பமாயிற்று. நடேசன் ஸுப்பராம ஐயர் பெண்ணை ஒரு நாள் வாய்க்காங் கரையில் கண்டு விட்டானும்; அதற்கு மறு நாள் கோவிலிலும் பார்த்துவிட்டான். எல்லாருக்கும் தான் தெரியுமே நடேசன் எப்படி இருப்பான் என்று! தூக்கி விட்ட காலர், வாராத கிராப்பு, கிருதா, மூக்குக் கண்ணாடி, ரிஸ்ட் வாட்ச், தூங்கி பாஷனிலே தொங்கத் தொங்க வேஷ்டி — இப்படி யெல்லாம் அலங்காரம் செய்துகொண்டு அஸல் கில்லாடி மாதிரி இருப்பான். அவன் பார்த்த இரண்டு தடவைகளிலும் சகுந்தலை—அதாவது ஸுப்பராம ஐயருடைய புதல்வி — அவன் பக்கம் தன் கரிய பெரிய விழிகளைத் திருப்பிக் கடாக்ஷித்தாளாம். அவைகளின் ஆழத்தில் நடேசன் காதலைக் கண்டு கொண்டானும். அவனுக்கு அதில் சந்தேகமே இல்லை என்றான். அவன் எங்கே கிளம்பினாலும் நாலு சகாக்களோடே தானே போவான்? அந்த நாலு பேரும் கூட இவன் நினைத்தபடியே தான் நினைத்தார்களாம்!

அபபுறம் அவளைப் போய்த் தனியே சந்திக்க அவன் பல முயற்சிகள் செய்தானும். ஒரு நாள் ராத்திரி அவனை அவர்கள் வீட்டு நாய் கண்டு கொண்டு துரத்தவே, தெருக் கோடி வரை வந்த பிறகு தான் திரும்பிப் பார்த்தானும். மற்றும் ஒரு நாள் சகுந்தலையின்



...ஒரு நாள் வாய்க்காங் கரையில் கண்டு...

அன்று இருட்டில் இவன் யாரோ திருடன் என்று நினைத்து, கொடுத்த 'கொடு'வில், முதுகு இருக்கிறதா இல்லையா என்ற சந்தேகமே வந்து விட்டதாம். ஆகவே, சகுந்தலையைச் சந்திப்பதென்னமோ இயலாததாகவே இருந்தது.

அப்போதுதான் நடேசன் மூஞ்சியைத் தொங்கப் போட்டுக் கொண்டு கோபாலையரிடம் முதல் முதலாக வந்தான்.

"கோபாலையர்! என்னைப் பார்த்தால் உமக்கு எப்படித் தோன்றுகிறது! உண்மையைச் சொல்லும்!" என்று கேட்டானும்.

கோபாலையர் உண்மையைச் சொல்லி விட்டு, தமது மண்டை உடை படாமல் இருக்க, கட்டிலுக்கு அடியில் புகுந்து கொண்டு வெளியே வர மறுத்து விட்டாராம். நடேசன் தன் கையிலிருந்த குண்டாந்தடியை ஓரமாகவைத்து விட்டு, அவரை ஒன்றும் செய்வதில்லை என்று ஸத்யம் செய்த பிறகுதான் அவர் வெளியே தலையை நீட்டினாராம்.

"விளையாட்டெல்லாம் இருக்கட்டும், ஓய்! அந்த சகுந்தலையின் காதல் என்னைத் தகிக்கிறதே! என்ன செய்யலாம், சட்டென்று ஒரு யோசனை சொல்லும்!" என்று கேட்டான் நடேசன்.

"இதற்கு யோசனை என்ன இருக்கிறது! நீ சீர்திருந்த வேண்டும்! இந்தத் திருவிடை மருதூருக்கே நீ ஒரு மணியாக விளங்க வேண்டும்! உன்னைக் கண்டு அந்த ஸுப்ரிண்டெண்ட் மார்போடு உன்னை அணைத்துக் கொள்ள வேண்டும்."

"ஐயையோ! அவர் அணைத்துக் கொண்டால், அவர் மார்பிலுள்ள உத்திராட்சமெல்லாம் குத்துமே!"





......எங்கே கிளம்பினாலும் நாலு சகாக்களோடே தானே......


"அதெல்லாம் பார்த்து முடியுமா? 'இவன் நமக்கு நல்ல மாப்பிள்ளை' என்று அவர் நினைக்கும்படி நீ நடந்துகொண்டு விட்டாயானால், சகுந்தலையை உன்னிடமே ஒப்புவித்து விடுவார்......" என்று கோபாலையர் யோசனை சொன்னார்.

அப்புறம் நடேசனிடம் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டதைத் திருவிடமருதூர் வாசிகள் கண்டு பிரமித்துப் போனார்கள். நடேசன் கிராப்பைக் குடுமியாக மாற்றிக் கொள்ளத் தொடங்கி விட்டான்; கிருதாவையும் எடுத்து விட்டான். பழைய சிநேகிதர்கள், "அடே! கோவில் பக்கம் வாடா! இன்னிக்கு நல்ல 'ஸெட்' சேருகிறது. ஓரு மேஜை போடலாம்" என்றதற்கு, "போங்கடா காவாலிகளா! உங்களோடு சேர்ந்து நான் கழுதையாகப் போய் விட்டேன். இனிமேல் இந்தக் கையால் சீட்டுக் கட்டைத் தொடுவேனா!" என்று சொல்லி, மேஜையிலிருந்து சீட்டுக் கட்டு ஒன்றைச் சுக்குச் சுக்காகக் கிழித்துப் போட்டான். புகையிலையையும் வெற்றிலைப் பெட்டியையும் குப்பைத் தொட்டியில் வீசி யெறிந்தான். ஸிகரெட்டைத் தொடுவதில்லை என்று ஸத்யம் செய்தான். இந்தக் காரியம் நடேசனின் சகாக்களில் சிலரை மூர்ச்சை போடச் செய்தது; பாக்கிப் பேர், அவனுக்குப் புத்தி சுவாதீனமில்லையோ என்று சந்தேகப் பட்டார்கள்.


அதற்கு அப்புறம் நடேசன் ஸுப்பராமய்யர் கவனத்தைக் கவர்ந்தான். உத்தியோக காலத்தில் 'உத்தியோக பக்தர்'களாயிருந்து ரிடயர் ஆனவுடன் 'ஈசுவர பக்தர்'களாக மாறும் பெரியோர்களின் கோஷ்டியைச் சேர்ந்தவர் ஸுப்பராம ஐயர். அப்போது குற்றவாளிகள், கொலையாளிகளுடன் பழகிய அய்யர், இப்போது ஸநாதன சிரேஷ்டர்களின் மத்தியில் வேதாந்த விசாரம் செய்து வந்தார். பிராத ஸ்னானம் செய்து, ஜபதபங்களை முடித்துக் கொண்டு வந்து ஒன்பது மணிக்கு மேல் தான் காப்பி சாப்பிட்டார். மாலை நாலு மணிக்கெல்லாம் மகாலிங்க தரிசனம். வீடு திரும்பும்போது இரவு எட்டு, எட்டரை மணி. மத்தியான வேளைகளில் ஒரு சாஸ்திரிகளை ஏற்பாடு செய்து ருத்ரம்-சமகம்-புருஷ ஸூக்தம் கற்றுக் கொண்டார்.

நடேசன் இவ்வளவையும் கவனித்து, இவைகளைத் தானும் அனுஷ்டிக்கத் தொடங்கினான்.

காலையில் கார்த்திகை மாதக் குளிரில் அவனும் காவேரி ஸ்நானம் செய்து, அவர் எதிரில் ஸந்தியா வந்தனம் செய்தான். அவன்



......அவர் எதிரில் ஸந்தியா வந்தனம்......



அழகுத் தெய்வமான

மன்மதன், இளவேனில் ஓய்ந்ததும் பெண்மணிகள் கூந்தலைத் தன் இருப்பிடமாகக் கொண்டான் என்பர் கவி காளிதாஸர். எந்த அழகிய கூந்தல் தேவதைகள் கண்ணையும் கருத்தையும் பிணிக்குமோ, அக்கூந்தலை வருஷம் முழுவதும் எல்லா பருவங்களிலும் கேசவர்த்தினியின் உதவியால் பெறுங்கள். மயிர் உதிர்வதை நிறுத்துங்கள். கூந்தலைப் பெருக்கிக் கொள்ளுங்கள்.

இளமையும் அழகும் கூந்தலுக்குத் தந்து கூந்தலை மனோஹரமாக்குவது கேசவர்த்தினி ஒன்றே.

முக அழகைக் கூந்தலினால் அழகு படுத்துங்கள். உங்கள் கூந்தலைக் கேசவர்த்தினி கொண்டு அழகு படுத்திக் கொள்ளுங்கள்.

போலிகளை வாங்கி மோசம் போகாதீர்கள். "கேசவர்த்தினி" "தென் இந்திய ரஸாயன சாலை" என்ற பெயர்களைக் கவனித்து வாங்குங்கள்.

## கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது விலை அணா 12. (மேற் செலவு வேறு)

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:

தென் இந்திய ரஸாயன சாலை

கோயமுத்தூர்

## அஜீர்ணத்தை அகற்றுக!



'பைகரேடெட்' மக்னீஷியா பில்லைகள் சில அல்லது 'பைகரேடெட்' மக்னீஷியா பௌடர் கொஞ்சம் சாப்பிட்டீர்களானால் அது எவ்வளவு கொடிய அஜீர்ணத்தையும் போக்கி உங்களுக்கு இயற்கையான, ஆரோக்கியமான ஜீர்ண சக்தியை அளிக்கும்.

'பைகரேடெட்' மக்னீஷியா உலகெங்கிலும் டாக்டர்களால் உபயோகிக்கப்பட்டு சிபாரிசு செய்யப்படுகிறது.

'பைகரேடெட்' மக்னீஷியா பில்லைகளும், பௌடரும் எல்லா கெமிஸ்ட்டுகளிடமும், ஸ்டோர்களிலும் கிடைக்கும்.

## பைகரேடெட் மக்னீஷியா

S.I. 3.

குடுமி வளர வளர, அவனுடைய பக்தி சிரத்தையும் வளர்ந்து வந்தது. சாயந்திரம் கோவில் குளம் தவறுவதில்லை. மகாலிங்கத்துக்கு அர்ச்சனை நடத்தினான்.

அவனும் விசாரித்து, ஸுப்பராமய்யர் 'வேதாத்யயனம்' செய்யும் அதே சாஸ்திரிகளிடம் 'ட்யூஷன்' வைத்துக் கொண்டான். சாஸ்திரிகளிடம் சமயங்களில் சில்லறை அதிகம் தளர்த்தி, தன்னைப் பற்றி ஸுப்பராமய்யரிடம் பிரஸ்தாபிக்கவும் ஏற்பாடு செய்தான். ஊரெல்லாம் நடேசனைப்பற்றிப் பேசிக் கொண்டார்கள். அவன் சிநேகிதர்கள் எல்லாரும் இப்போது அவனை நெருங்கக் கூடப் பயந்தார்கள்.

நடேசனுக்கு 'ருத்ரம்' 'சமக'ங்களில் சந்தேகம் வந்தால், நேரே ஸுப்பராம ஐயரைப் போய்த்தான் கேட்பான்; அவரும் பரிவுடன் சொல்லுவார். அப்புறம் அதே சாக்காக அடிக்கடி அவர் வீட்டுக்குப் போகலானான். "அடே அப்பா! இந்தச் சின்ன வயசில் இவ்வளவு சிரத்தையாக இருக்கிறாயே!" என்று அவர் மெச்சிக்கொண்டு, சமையல் கட்டைப் பார்த்துச் சிரித்தாராம்.

இப்படியாகப் பல நாட்கள் ஓடிவிட்டன. ஸுப்பராமய்யருக்கு நடேசன் ஆப்தனாகிவிட்டான். அவர் வீட்டுக்குப் பூஜைக்குப் புஷ்பம் பறித்துக்கொண்டு போக, ஒரு தரம் நாகலிங்க மரத்தில் ஏறி, அதிலிருந்து கூட அவன் விழுந்தான். "அட பாவி!" என்றதற்கு, "இது தானா பிரமாதம்! என் சகுந்தலைக்காக எவரெஸ்ட் சிகரத்திலிருந்து குதிக்கவும் நான் தயார்!" என்றான் அவன்.

கோவிலுக்கு ஸுப்பராமய்யர் பூஜைத் தட்டை அவன் தூக்கிக் கொண்டு போனான். அவர் வஸ்திரங்களைத் தோய்த்துக் காய வைத்துக் கூடக் கொடுத்திருக்கிறானாம். ஏன், அவர்கள் வீட்டு எருமை மாட்டுக்குப் புண்ணாக்கு அரைத்துக் கொடுத்ததாகவும் வதந்தி.

இதெல்லாம் நடேசனுக்கு மிக மிக சிரமமான காரியங்கள், அவன் பொறுமைக்குப் பெரும் சோதனைகள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், பலனை உத்தேசித்து எந்த சிரமத்தையும் ஏற்றுக் கொள்ள அவன் உறுதியாக இருந்தான். ஒரு மனிதன் எவ்வளவு நாள்தான் ஒரு பலனை உத்தேசித்து இந்தப் பாடுபடுவான்? ஒரு நாள் ஸுப்பராமய்யரையே கேட்டுவிட்டான். "ஸார்! உங்களை ஒரு விஷயம் கேட்க வேண்டுமென்றிருக்கிறேன்!" என்று ஆரம்பித்தான்.

"கேளேன், அப்பா! 'புருஷஸூக்த'த்தில் ஏதாவது சந்தேகமா? அல்லது..." என்று கேட்டார் ஐயர்.

"அதெல்லாம் இல்லை: சொந்தத்தில் ஒரு விஷயம். சகுந்தலையின் மேல் ரொம்ப ஆசையாக இருக்கிறது; அவளைக் கல்யாணம் செய்துகொள்ள உங்கள் அனுமதியும் ஆசியும் வேண்டும்..." என்று தைரியமாகவும் மரியாதையாகவும் கேட்டு விட்டான்!

அப்புறம் ஸுப்பராமய்யர் சிரித்த சிரிப்பில் அவர் கண்களில் ஜலம் ஓடியதாகவும், வீடே ஆடியதாகவும், பக்கத்து வீட்டுப் பயித்திய ஆஸ்பத்திரி டாக்டர் தமக்கு இன்னொரு கேஸ் வரப் போகிறதாக எண்ணியதாகவும் நடேசன் சொன்னான். நடேசன் கொஞ்ச நேரம் ஸ்தம்பித்து விட்டானாம். ஐயர் கண்ணைத் துடைத்துக் கொண்டு, "நடேசா! என் சுபாவம் உனக்குத் தெரியாது! நான் பெண்களுக்குப் பூரண சுதந்திரம் கொடுப்பவன். கல்யாண விஷயத்தில் சகுந்தலை எப்போது யாரைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்று சொல்கிறாளோ, அவனுக்கு நான் கொடுக்கத் தயார்! ஆனால் ஒன்று: உன் மாதிரி 'ஸத்'தான பிள்ளைக்குக் கொடுக்க நான் பாக்யம் செய்



......இப்படிச் சொல்லி...அந்த முறத்தாலேயே ......

திருக்க வேண்டுமே!" என்று சொன்னாராம். அப்புறம் அவர் ஏன் சிரித்தார் என்று மட்டும் நடேசனுக்குத் தெரிய வில்லை.

மறுநாள் மாலையில் சகுந்தலையை ஒரு வார்த்தை கேட்கப் போவதாக நடேசன் கோபாலய்யரிடம் சொல்லி விட்டு போனான். கோபாலையரும் அவன் வரவுக்கு ஆவலுடன் காத்துக் கொண்டிருந்தார். நடேசன் போனவன் பதினைந்து நிமிஷத்தில் கடும் வேகமாக வந்தான். அவன் தலையும் சொக்காயும் நனைந்திருந்தன. முகத்திலும் கோபம் கொதித்துக் கொண்டிருந்தது.

"ஏண்டா! அவளைக் கேட்டாயா? என்ன பதில் கொடுத்தாள்?" என்று விசாரித்தார் கோபாலையர்.

"என்னைப் பார்! அவள் கொடுத்த பதில் இதுதான்!" என்றான் பல்லைக் கடித்துக் கொண்டு.

"விவரமாகச் சொல்லுடா!"

"நான் போனேன்! அவள் மாட்டுத் தொழுவத்தில் ஒரு முறத்தை வைத்துக் கொண்டு அள்ளிக் கொண்டிருந்தாள். அவளைக் கேட்டேன், என்னைக் கல்யாணம் செய்து கொள்ளென்று. அதற்கு அவள், 'உன் மாதிரி ஒரு பித்துக்குள்ளியைக் கல்யாணம் பண்ணிக் கொள்றதுக்கு முந்தி காவேரியிலே சந்தோஷமாகக் குதிப்பேன்' என்றாள். அப்புறம், 'மூக்கைப் பிடிச்சுக் கொண்டு காக்காய் மாதிரி காவேரி ஸ்நானம் பண்ற கட்டுப் பெட்டியையா நான் கல்யாணம் செய்து கொள்வேன்? விபூதி பட்டையும் உச்சிக் குடுமியுமா நிற்கிற உன்னைப் பார்த்து ஊரெல்லாம் சிரிக்கிறதே, உனக்குத் தெரியாதா? மிடுக்காக, வாசலைகமாக, ஊருக்குப் போக்கிரியாக, நாலு பேருக்குத் தலைவனாக இருக்கிறவராகத்தான் நான் கல்யாணம் பண்ணிக் கொள்வேன்' என்று சொல்லி விட்டாள். இப்படிச் சொல்லி விட்டு, அந்த முறத்தாலேயே என் உச்சந்தலையிலும் அடித்து விட்டு ஒரு சொம்பு ஜலத்தையும் என் மூஞ்சியில் வீசி விட்டு உள்ளே ஓடி விட்டாள்" என்றான்.

"அட பாவமே! நீ முந்தியே தான் அவள் வர்ணிக்கிறபடியெல்லாம் இருந்தாயே?" என்றார் கோபாலையர் அங்கலாய்ப்புடன்.


"கடங்காரப் பயலே! உன் வார்த்தையைக் கேட்டு, நான் சீர்திருந்தப் போய் இப்படிக் கெட்டுப் போனேன்!......இதோ பார், உன் மூஞ்சியைச் சீர்திருத்தாமல் நான் விடுகிறதில்லை!" என்று புலி போல் நடேசன் பாய்ந்து வரவே, கோபாலையர் வேறு வழியின்றி ஓடி வந்து முதலில் கூறியபடி என் வீட்டில் அடைக்கலம் புகுந்து கொண்டார்.

ஆனால் நடேசனிடமிருந்து எத்தனை நாள்தான் ஒளிந்திருக்க முடியும்? ஒரு நாள் காவேரிக் கரை மண்டபத்தின் அருகில் கோபாலையரை வளைத்துக்கொண்டு, அவர் தலை, மூஞ்சி, முகம் எல்லாவற்றையும் 'சீர்திருத்தி' விடவே, இப்போது அவர் ஆஸ்பத்திரியில் இருக்கிறார்.

அது தான் நான் முதலிலேயே சொன்னேன், அந்தத் தடிகார நடேசனிடம் வாய் கொடுத்திருக்காவிட்டால், இப்படி ஆஸ்பத்திரிக்கு வந்திருக்க வேண்டாமென்று!

---

# "பகுத்தறிவு"ப் போட்டி - 366




பிரவேசக் கட்டணம் கூபன் ஒவ்வொன்றிற்கு அணா 8


## முடிவு தேதி 31-12-43 வெள்ளிக்கிழமை

முதற் குறிப்பு (இடமிருந்து வலமுள்ளது) சில பேர், தாகசாந்திக்காக இதைச் சாப்பிட்டு விட்டு, 'தஸ் புஸ்' என்று தும்ம ஆரம்பித்து விடுவார்கள் என்றிருக்கிறது. நெ. 1. கட்டத்திலிருந்து இடமிருந்து வலமாக நான்கு வெள்ளைக் கட்டங்களிருக்கின்றன. ஆகவே நெ. 1. குறிப்பிற்குச் சரியான வார்த்தை நான்கு எழுத்துக்கள் கொண்டது என்பது தெரிகிறது. இளநீர் சரியான விடை. வெள்ளைக் கட்டத்திற்கொரு எழுத்து வீதம் எழுதப்பட்டிருக்கிறது. இது மாதிரி எல்லா விடைகளையும் கண்டு பிடிக்க வேண்டியது.

(மற்ற விதிகள் முன்பு இருந்தது போல்தான்)

இங்கே கத்தரிக்க

"பகுத்தறிவு"ப் போட்டி - 366




பெயர்.

விலாசம்.

ம. ஆ. ரசீது நெ. கூபன் நெ......

# “ பகுத்தறிவு ”ப் போட்டி - 366 - குறிப்புகள்

**இடமிருந்து வலம்**

1. சில பேர், தாக சாந்திக்காக இதைச் சாப்பிட்டு விட்டு, ‘ தஸ் புஸ்’ என்று தும்ம ஆரம்பித்து விடுவார்கள்.

4. இந்த ஆலைக்காரர்களுக்கெல்லாம் இப்பொழுது நல்ல லாபம் என்கிறார்கள்.

7. மனைவி தன் கணவனுடன் உல்லாசமாகப் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்து, சில மாமியார்க்காரிகள் இது செய்வதும் உண்டு.

9. பெரிய செலவிற்கு விவரம் தெரியவேண்டுமென்றால் இதைப் பார்க்க வேண்டும்.

10. இது இல்லாமல் கண்ட ஜலத்தைச் சாப்பிடுவது கூடாது.

13. ஒரு பெரிய வீட்டிலே இதாக இருப்பது என்றால் சிரமமாகத்தானிருக்கும்.

14. ...... நாட்டிலிருந்து வரும் செய்திகளை தணிக்கையாளர் உத்தரவின்றிப் பிரசுரிக்கக் கூடாது.

16. இது இல்லா விட்டால், சிலர் வெற்றிலை போட மாட்டார்கள்.

18. இதில் உள்ள சிசு, ஆரோக்கியமாக வளர வேண்டுமென்றால், தாயார் புஷ்டிதரும் ஆகாரங்களைச் சாப்பிட வேண்டும்.

20. குளம்.

22. சிலரை என்னதான் திட்டினாலும், இது போலவே இருப்பார்கள்.

23. முழுப் பொய் இல்லை.

24. சுப்பிரமண்யக் கடவுளை, ......சாமி என்று சொல்லுவதுண்டு.

25. இது என்றால், உடம்பை வளைத்து, அநுதினமும் தேகப் பயிற்சி செய்ய வேண்டி வரும்.

26. இவன் சாதாரணமாக மடத்தனமாகப் பேசுவான்.

**மேலிருந்து கீழ்**

2. சரிப்படுத்திப் பார்த்தால், இளசாக இருக்கும்.

3. நீளுதல்.

4. பெரிய வித்வான்கள் என்றால், மனிக்கணக்கில் வேண்டுமானாலும் இது பாடிக்கொண்டிருப்பார்கள்.

5. சாப்பாடு ...... ருசியாக இருந்தால், கூட இரண்டு கவளம் உள்ளே செல்லும்.

6. வெள்ளைக்காரர்கள் ஹோட்டலில் நடன விருந்தென்றால், நினைத்தபடி போய் விட முடியாது; அதற்கும் ஒரு இது..... உண்டு.

8. பத்து.

11. ஒழுங்கான வியாதி இல்லை.

12. பெரியவர்களை நமஸ்கரித்தால், இது செய்வார்கள்.

15. மனைவியைப் பார்க்க ஆவலோடு ஊருக்குப் போகிறவனுக்கு, ‘ உடனே .........!’ என்று ஆபீஸிலிருந்து கடிதம் போனால் எப்படி யிருக்கும் ?


17. புருஷன்.


19. யுத்தம் எப்பொழுது முடியும் என்று இதாகச் சொல்ல முடியாது.

21. நல்ல சமர்த்தர்கள் இது செய்தால், உம்மணாமூஞ்சியும் சிரித்துவிடுவான்.

25. சீதையைத் தேடி வானர வீரர்கள் ...... திசைகளுக்கும் சென்றார்கள்.










## "பகுத்தறிவு" - 359 - (முதற் பரிசு தொடர்ச்சி)

திருச்சி:—(1) எம். கே. சக்கரபாணி, திருச்சி. (2) எஸ். ராஜாராவ், திருச்சி. (3) ஜி. ஜி. எஸ். மணி, திருச்சி. (4) கே. ஆர். சுப்பய்யர். திருச்சி. (5) ஆர். சுப்பலக்ஷ்மி அம்மாள், திருச்சி. (6) மிஸஸ் கமலா. திருச்சி. (7) டி. எஸ். ரத்னசலம், திருச்சி. (8) மு. குமாரசாமி பத்தர். திருச்சி. (9) ஜி. எஸ். செல்வம் நாயுடு. திருச்சி. (10) பி. ஆர். ராஜமன்னார். திருச்சி. (11) கே நாக ராஜன், திருச்சி. (12) எம். நமசிவாயம். திருச்சி. (13) கு. ராதாகிருஷ்ணன் செட்டியார். திருச்சி. (14) டி. எம். சடகோபாச்சாரி, தெப்பக்குளம். (15) கே. பி. எஸ். மணி, தெப்பக்குளம். (16) டி. எஸ். ராஜகோபாலன், தெப்பக்குளம். (17) டி. ஞானபரணம் பிள்ளை, தெப்பக்குளம். (18) பி. எஸ். மீனுக்ஷிசுந்தரம். தெப்பக்குளம். (19) பி. கிருஷ்ணமூர்த்தி. தெப்பக்குளம். (20) டி. எஸ். எஸ். லக்ஷ்மி, தெப்பக்குளம். (21) ஆர். அன்னசாமி, வரகனேரி. (22) எல். சாமி ஆச்சாரி, மேலகாசிப்பாளையம். (23) கெ. முத்துசாமி பத்தர், மேலகாசிபாளையம். (24) கே. ரகுநாதன். ஸ்ரீரங்கம். (25) எஸ். ராமசாமி பிள்ளை. ஸ்ரீரங்கம். (26) கனகாம்புஜம், ஸ்ரீரங்கம். (27) சி. ராமசாமி, திருவானைக்காவல். (28) நாகநாதன், பொனமலை. (29) ஆர். மதனகோபாலன், பொன்மலை. (30) லக்ஷ்மண செட்டி, உறையூர். (31) டி. எல். சிதம்விநாயகம் பிள்ளை, துரையூர். (32) என். எஸ். அருணசல குருக்கள், நங்கவரம். (33) எஸ். ராமஸாமி அய்யர், நங்கவரம். (34) எம். ஆர். குஞ்சுப் பிள்ளை, லால்குடி. (35) சி. ராமசாமி ஆசாரி, லால்குடி. (36) ஆர், பார்த்தசாரதி. லால்குடி. (37) எல். எஸ். பாலசுப்பிரமணியன், லால்குடி. (38) கே. கனகம்மாள், மணப்பாறை. (39) ஆர். சுப்பாச்சார், மாயனூர். (40) ஈ. ஆர். குப்பண்ண ராவ், கரூர். (41) பி. ஆர். சுப்பராவ், கரூர். (42) சந்திரன், கரூர். (43) கே. எம். வெங்கட்ராமய்யர், கிருஷ்ணராயபுரம். (44) எ. ஆர். ரங்கநாத அய்யங்கார், அனலை. (45) வெ. துரைசாமி ரெட்டியார். சிருகனூர். (46) மு. ராம. கருப்பய்யா பட்டர், ஊலையூர். (47) ஏ. அய்யங்கார் ஆச்சாரி, தும்பிவாடி. (48) ஆர். எஸ். பெரியசாமி ஆசாரி, அடைக்கம்பட்டி. (49) ஏ. எஸ். வெங்கட்ராமன், ஸ்ரீராமசமுத்ரம். (50) கே. எஸ். முத்துசாமி செட்டியார். காட்டுப்புத்தூர்.

மதுரை:—(1) வி. எஸ். ஆர். சாரி, மதுரை. (2) என். வெங்கலக்ஷ்மி அம்மாள், மதுரை. (3) தொ. மு. கிருஷ்ணய்யர். மதுரை. (4) நீலமேகம் ஜா. சேஷய்யர், மதுரை. (5) வி. எஸ். முத்துநாராயணய்யர், மதுரை. (6) நா. மு. சுப்பய்யர், மதுரை. (7) மா. சா. சுந்தரராஜய்யர், மதுரை. (8) கே. பி. வெங்கட்ராமய்யர், மதுரை. (9) எ. ஜே. சாமி அய்யர், மதுரை. (10) கே. டி. வேதாந்தம் அய்யங்கார், மதுரை. (11) எச். எஸ். பரமேஸ்வரய்யர், மதுரை. (12) ஆர். சங்கரய்யர். மதுரை. (13) ஆர். எஸ். மாதவாச்சாரி. மதுரை. (14) வெ. சித்தக் கவுண்டர், மதுரை. (15) என். எஸ். ராமலிங்கய்யர், மதுரை. (16) என். எ. சாமி, மதுரை. (17) என். எஸ். விசாலாக்ஷி அம்மாள், மதுரை. (18) எஸ். கணபதியா பிள்ளை, மதுரை. (19) எஸ். வி. சுப்பிரமணிய அய்யர், மதுரை. (20) எ. கே. நடேசன், மதுரை. (21) உ. செ. மு. மீரு சாகிபு மரைக்காயர். மதுரை. (22) பி. பி. கோவிந்தய்யர். மதுரை. (23) எம். பி. சிவநாண்டி தேவர், மதுரை. (24) வி. கு. சுவாமிநாதன், மதுரை. (25) எஸ். வி. எஸ். மணி அய்யர், மதுரை. (26) டி. எஸ். ராஜகோபாலாச்சாரி, மதுரை. (27) மெ. ம. அ. சுல்தான் ராவுத்தர், கோரிப்பாளையம். (28) கே. ஆறுமுகம், யானைக்கல். (29) டி. நாராயணன். தல்லாகுளம். (30) எஸ். ருக்மணி அம்மாள், சொக்கிகுளம். (31) மு. ரெங்கசாமி ஆச்சாரி, பெரியகுளம். (32) ரா. குமரவேலு, பெரியகுளம். (33) பி. முகமது இபுருகிம், கம்பம. (34) மா. குலாம்தஸ்தகீர், வத்திபட்டி (35) வீ. கே. இருமலை அய்யங்கார், திண்டுக்கல். (36) வி. வேதவல்லி அம்மாள், திண்டுக்கல். (37) எஸ். ராமய்யா அய்யர், திண்டுக்கல். (38) கு. கா. அப்துல் கரீம், நாகல்நகர். (39) இ. எஸ். அபதுல் அஜீஸ், நாகல்நகர். (40) கே. பி. கே. துரைசாமி நாடார், அம்மயநாயக்கனூர். (41) எம். மாரியப் பிள்ளை, அம்மயநாயக்கனூர். (42) எ. எஸ். தனுஷ்கோடி, போடி. (43) மீனுக்ஷி, வத்திலக்குண்டு. (44) டி. இ. என். ஆர். வெங்கடாசலபதி அய்யர், வத்திலக்குண்டு. (45) எஸ். எம். கே. சிக்கந்தர். நாவினிபட்டி. (46) கே. வெங்கட்டராம ராஜு, கோவில்பட்டி. (47) எஸ் கல்யாண சுந்தரய்யர், எழுமலை. (48) வி. கோவிந்தசாமி நாயுடு. சானார்பட்டி. (49) ஒய். ராதை, உத்தமபாளையம்.

ராமநாதபுரம்:—(1) ஆர். ரங்கய்யர், பரமக்குடி. (2) வே. ராமநாதன், மானமதுரை. (3) ப. குருவய்யா, அருப்புக்கோட்டை. (4) கே. ஆர். வைரமணி தேவி, விருதுநகர். (5) கே. நாராயணன், காரைக்குடி. (6) கே. வாசுதேவன். காரைக்குடி. (7) கே. ஆர். சுப்பய்யா நாடார், காரைக்குடி. (8) எஸ். கரும்பு அய்யங்கார், கல்லுக்கட்டி. (9) பி. கே. சுப்பிரமணிய அய்யர். செஞ்சை. (10-12) அழ. சேதுராமன், தேவகோட்டை. (13) ஏ. நாகசாமி அய்யர். தேவகோட்டை. (14) ராம. சுப்பிரமணியன், தேவகோட்டை. (15) எஸ். வள்ளியம்மை, தேவகோட்டை. (16) வீர. கரு. ச. அழகப்பன், தேவகோட்டை. (17) கோமதி அம்மாள். தேவகோட்டை. (18) டாக்டர் எம். வி. நாயகம். ராமேஸ்வரம். (19) தேவமாதாம்மாள், சிவகாசி. (20) ஆர். ராமன், சாத்தூர். (21) மீ. மு. பொன்னு ராவுத்தர். ஸ்ரீ வில்லிபுத்தூர். (22) என். காசி விஸ்வநாதன். அழகாபுரி. (23) டி. எஸ். ராகவய்யங்கார். சிந்தாமணி. (24) பு. சோ. பெருமான்நாயகம். குமாரலிங்கபுரம். (25) எஸ். அழகிரிசாமி. மேழசெவல்பட்டி. (26) ஏ. எம். ஏ. முருகப்பா, பள்ளத்தூர்.








(27) எஸ். கோனேரி அய்யங்கார், மண்டல மாணிக்கம். (28) எஸ். செல்லையா பிள்ளை, பாலையம்பட்டி. (29) மு. முத்துவெங்கடாசலம் அய்யங்கார், மீசலூர். (30-31) ஆர். வெங்கிடு. ம. ரெட்டியபட்டி. (32) டி. எஸ். உலகநாத பிள்ளை, காத்தமங்கலம். (33) ஸ்ரீ ராமநாதசாஸ்திரி, திருவாடானை. (34) கெ. ரா. காளியப்ப நாயக்கர், சிறுகுளம், (35) நாட்டான்மை சொக்கப்ப ரெட்டியார், கோபாலபுரம்,

திருநெல்வேலி:—(1) டி. எ. நடேசய்யர், திருநெல்வேலி. (2) திருமலை பண்டிதர், திருநெல்வேலி. (3) பி. ஆர். எஸ். அய்யர், வீரராகவபுரம். (4) எஸ். மரியதாஸன், நடுவக்குறிசசி. (5) ஆர். கே. விஸ்வநாதன் கொக்கரகுளம் (6) ராம. இசக்கியா பிள்ளை, தூததுக்குடி. (7) ஜெ. மோத்திலால், தூத்துக்குடி. (8) டி. கே. லக்ஷ்மி, தூத்துக்குடி. (9) எ. வி. கிருஷ்ணசாமி அய்யர், தூத்துக்குடி. (10) செ. திருவடி அய்யங்கார், கரந்தையார்பாளையம். (11) ஆர். வள்ளியம்மாள், கல்லிடைக்குறிச்சி. (12) பகவதி, கல்லிடைக்குறிச்சி. (13) எஸ். சுந்தரம் செட்டியார், அம்பாசமுத்திரம். (14) ஓ. எம். சுப்பய்யர், திருச்செந்தூர். (15) எஸ். எஸ். கனபாடிகள் திருச்செந்தூர், (16) எஸ். ஷண்முகம், சங்கரன்கோவில். (17) எ. சீனிவாஸ அய்யங்கார், சங்கரன்கோயில், (18) எஸ். ஆர். கணபதிராமன், பாளையங்கோட்டை. (19) வி. சங்கர அய்யர், ஏரல். (20) வாத்தியார் வானமாமலை அய்யங்கார், நாங்குநேரி. (21) டீ. கமலம், நாங்குநேரி. (22) எஸ். ராமையா, பாதை. (23) வெ. கோ. கோ. வெங்கடசாமி நாயக்கர், கடம்பூர். (24) கார்த்திகேய சுப்பிரமணியன், திருச்செந்தூர். (25) ஜி. எ. சங்கர அய்யர், கங்கைகொண்டான். (26) சங்கர அம்மாள், கீழாம்பூர். (27) கே. எஸ். எ. பாண்டியன், காவல்கிணறு. (28) பெ. பாலசுப்பிரமணியன் செட்டியார், புத்தூர். (29) பி. எஸ். விஸ்வநாத அய்யர், கயத்தார். (30) எஸ். வி. பெர்னாண்டோ, மணப்பாடு. (31) வி. எல். வெங்கட்டராமய்யர், சிந்தாமணி.

கோவை - சேலம்:—(1) ஆர். கமலா, கோவை. (2) வி. லக்ஷ்மிநாராயணன், கோவை, (3) ஆர். ராமசுப்பு. கோவை. (4) வி. வி. கோபாலகிருஷ்ண ராவ், கோவை. (5) எம். துரைசாமி முதலியார், கோவை. (6) கே. வி. வி. ராம், கோவை. (7) பி. வி. நாராயணய்யர், கோவை. (8) எம். ஆறுமுகம். கோவை. (9) பட்டம்மாள், ஈரோடு. (10) எ. எல். வஸந்தகோகிலம், ஈரோடு. (11) கே. எஸ். சதாசிவம், ஈரோடு. (12) எல். வரதராஜலு நாயுடு. ஈரோடு. (13) கே. வி. ராமச்சந்திர ராவ். ஈரோடு. (14) பி. என். கோவிந்தசாமி, பவானி. (15) கே. எஸ். வெங்கட்ரமணய்யர். பவானி. (16) எல. ரேவதி. பவானி. (17) வி. ஆர். ராமசாமி நாயுடு. எம். எஸ். புரம். (18) லட்சுமி. எம். எஸ். புரம். (19) எம். எஸ். மச்சாவதார செட்டியார். மேட்டுப்பாளையம். (20) வி. திருவேங்கடாச்சாரி, கொள்ளேகாலம். (21) வி. வரதராஜலு நாயுடு, கோத்தகிரி. (22-23) கே. கோவிந்த கண்டர், அட்டக்கட்டி. (24) என. நாராயணசாமி, கிளென்மார்கென். (25) ர. ராஜப்ப முதலி, கறட்டுப்பாளையம். (26) வி. மாணிக்கம், துடுப்பதி. (27) எஸ். எஸ். ஆறுமுகம் செட்டியார். பெருந்துறை. (28) எஸ். வீரசாமி நாயுடு. வெள்ளக்கோவில். (29) எம். லக்ஷ்மணக கவுண்டர், காங்கயம் (30) ஆ. பெ. கு. வெங்கட்டராம செட்டி, பள்ளிப்பாளையம். (31) கே. எ. கிருஷ்ணன், கிணத்துக்கடவு. (32) ஜி. எஸ். ராஜாராவ். சத்தியமங்கலம். (33) எ. சென்னியப்பன. ஓடத்துறை. (34) கே, சாகம்மாள், சேலம். (35) பி. வி ஆர். ராவ். சேலம். (36) ஆர். அழகுவேல். சூரமங்கலம். (37) எ. எல். வரதராஜு செட்டி, அரிசிபாளையம். (38) ஆர். எ. துரைசாமி. செவ்வாய்பேட்டை. (39) ஜி வெங்கட் ரூவ். தர்மபுரி. (40) ருக்மணி, தர்மபுரி. (41) ராஜலக்ஷ்மி. தர்மபுரி. (42) கல்யாணி. தர்மபுரி (43) நாமகிரி, நாமக்கல். (44) எம். வீரப்பா. ஹோசூர். (45) என். ஏ. ஓ. பிள்ளை ஏற்காடு. (46) கே. பழனியடியா பிள்ளை, போத்தனூர். (47) எம். எஸ் வெங்கடரமண அய்யர், அதமன்கோட்டை. (48) ஜி. கந்தசாமி, எடப்பாடி. (49) எ. கிருஷ்ணன், ஏனூர். (50) எ. ராமசுவாமி பிள்ளை, கோவிந்தம்பாளையம்.

இதர இடங்கள்:— (1) கே. அன்னபூரணி அம்மாள். புதுக்கோட்டை. (2) பா. வெ. சு. நல்லையா பாகவதர், புதுக்கோட்டை. (3) எஸ். முத்துகிருஷ்ணன், திருவரங்குளம். (4) அ ரெங்கய்யர், நச்சாந்துபட்டி. (5) சைகோன் ராஜமாணிக்கம், புதுவை. (6) ஜி. ஆர். எஸ். வாஸன். முத்தியால்பேட்டை. (7) கே. சங்கர அய்யர், திருவனந்தபுரம். (8) ஆர். பி. அய்யங்கார். திருவனந்தபுரம். (9) பூதலிங்கம், வடசேரி. (10) கோ. சு. வேலய்யா நாயுடு, வடசேரி. (11) எ. ஆர். கரையாளர், செங்கோட்டை. (12) கே. ஆர். நாயுடு, செங்கோட்டை, (13) எம். தேவசகாயம். எரணுகுளம். (14) பி. வி. ராமசுவாமி அய்யர். எரணுகுளம். (15) ஜான் ஜேசுதாஸன். மார்த்தாண்டம். (16) சி. இருவேங்கடம் பிள்ளை. பெரிந்தல்மன்னை. (17) கே. டி. ரங்கசாமி அய்யங்கார், சித்தூர். (18) டி. கோவிந்தசாமி ஆச்சாரி, பெல்லாரி. (19) என். விக்டர் ஜான், சிக்மகளூர். (20-21) எம். கன்னியப்பன், பெங்களூர். (22) புஷ்பராணி, ராபர்ட்சன்பேட்டை. (23) டி. தேவராஜ முதலியார், ராபர்ட்சன்பேட்டை. (24) பி. பொன்னுசாமி முதலியார். ராபர்ட்சன்பேட்டை. (25) பி. பட்டாபிராமன், ராபர்ட்சன்பேட்டை. (26) எ. எம். அந்தோனி, வார்காம். (27) பி. டி. லெட்சுமண முதலியார், ஆண்டர்சன்பேட்டை. (28) எஸ். சிவசுப்பிரமணியன், ரஸ்தாஸ்பேட். பூனா. (29) வி. எஸ். சுந்தரம். மாதுங்கா. (30) ஆர். பி. தெஸ்மா, பரன்புரி-பகால். (31) என். காசுசுந்தரம். கல்கத்தா. (32) அப்துல் ரவூப், 18எ. பி. பி. ஓ. (33) என். எ. அம்பாள், டிகோயா. (34) எஸ். குருசாமி பிள்ளை, எல்கடுவா.





## "பகுத்தறிவு" - 360—முடிவு

முதற் பரிசு

# ரூ. 1000

## 38 பேர்களுக்கு


## தலைக்கு ரூ. 26-5-0

சரியான விடை அனுப்பிய மேற்கண்ட 38 நபர்களுக்கும் முதற் பரிசுத் தொகையான ரூ. 1000மும் சமமாகப் பங்கிடப்பட்டு தலைக்கு ரூ. 26-5-0 வீதம் பரிசளிக்கப்பட்டிருக்கிறது.

முதற் பரிசுத் தொகை 27—11—43 அன்று அனுப்பப் பெற்றது.

இரண்டாவது பரிசு பெற்றவர்கள் ஜாபிதா அடுத்த வார 'நாரத'ரில் வெளியிடப்படும்.

(1) வி. எம். சுந்தரம், 1/9, பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு, ஜி. டி. சென்னை. (2) டி. பி. ராகவ ராவ், 22, அம்மன் கோயில் தெரு, பி. டி. சென்னை. (3) எ. கிருஷ்ணசாமி, கிளார்க், ஸி. ஓ. பி. எஸ். எஸ். ஆபீஸ், எம். அண்டு எஸ். எம். ரயில்வே. பி. டி. சென்னை. (4) இ. அ. அப்துல் காதர், 17, லெப்பை தெரு, புதுப்பேட்டை, சென்னை. (5) இ. நவநீதன், 39, வன்னியர் தெரு, காலடிபேட்டை, திருவொற்றியூர். (6) எஸ். வி. பாய், 38, சின்ன காஜி தெரு, சிதம்பரம். (7) எஸ். வெங்கட்டராம அய்யர், 35, அனந்தீஸ்வரன் கோயில் அக்ரஹாரம், சிதம்பரம். (8) எ. எ. கே. ராமநாதன், வளவனூர். (9) தர்மாம்பாள், 1, தேர்முட்டி வீதி, திருவண்ணாமலை. (10) பி. டி. கே. அய்யங்கார், 22, பிராமணாள் வீதி, ஆம்பூர். (11) டி. எம். வி. நாதன், 353, அப்ஜி அண்ணா வட்டாரம், தஞ்சை. (12) எம். ஆர். சுந்திரேசன் c/o என். நாராயணஸாமி, ஸ்ரீ கிருஷ்ணா ரைஸ் மில், தட்டாரத் தெரு, திருவாரூர். (13) ராஜம் c/o ராமஸ்வாமி அய்யர், 8, நடவகானத் தெரு, திருவாரூர். (14) சு. தியாகராஜ சாஸ்திரிகள், தப்பளாம்புலியூர் (15) என். சேதுராமன், c/o பி. வி. ராமய்யர், ஹோட்டல், திருவையாறு. (16) என். வி. ஜி. எஸ். சாரி, 135, வ. சி. வீதி, ஸ்ரீரங்கம். (17) கே. விஜயராகவன், 13, வ சி. வீதி, ஸ்ரீரங்கம். (18) ஆர். வாசு பிள்ளை, டீ ஸ்டால், 4, கீழாவணி மூல வீதி, மதுரை. (19) பி. எஸ். கோபாலய்யர், கூட்ஸ் ஷெட் தெரு, மதுரை. (20) ஆர். சப்தரிஷி, காளிமுத்துப் பிள்ளை சந்து, திண்டுக்கல். (21) ஆர். ராமச்சந்திரன், டெயிலர், மேலத் தெரு, போடிநாயக்கனூர். (22) பி. என். காளியப்ப பிள்ளை, வியாபாரம், போடிநாயக்கனூர். (23) பி. எஸ். தாயுமானவன், பழக்கடை, வத்திலக்குண்டு. (24) சுரேந்திரன், c/o டி. ஆர். கருளியாண்டி கவுடர், மீனாக்ஷிபுரம். (25) கே. ஆர். சுப்பய்ய நாடார், மு. அ. மெ. கம்பவுண்டு, காரைக்குடி. (26-27) வீர. கரு. ச. அளகப்பன், சிவன் கோவில் மேல்புரம், தேவகோட்டை. (28) எம். வன்னிய நாடார், c/o மெடிகல் ஸ்டோர்ஸ், சிவகாசி. (29) வ. ச. விசுவநாத மூப்பனார், c/o மெடிகல் ஸ்டோர்ஸ், சிவகாசி. (30) பார்வதி அம்மாள், c/o டபிள்யூ. எஸ். சுப்பிரமணிய அய்யர், வடக்கு வீதி, வத்திராயிருப்பு. (31) ஆர். மகாதேவய்யர், மேல மாடத் தெரு, திருநெல்வேலி டவுன். (32) எ. ஜான் சுந்தரராஜ், 214, கிரேட் காட்டன் ரோடு, தூத்துக்குடி. (33) பி. கே. ராமநாதன், பில்டிங் டிராப்ட்ஸ்மேன், முனிசிபல் ஆபீஸ், தூத்துக்குடி. (34) கே. முத்துசாமி, c/o எம். ஆர். ஆர். கிருஷ்ணசாமி கவுண்டர், மண்டி, விடடல்தாஸ் சேட் வீதி, திருப்பூர். (35) பி. அம்மாக்குட்டி அம்மாள், புதுபட்டி, கோவில்லை. (36) ஆர். மகாதேவய்யர், தளவாத் தெரு, வடிவீஸ்வரம். (37) என். பெரிய நாடார், மணிகட்டிப் பொட்டல், கோட்டாறு. (38) பி. பட்டாபிராமன், ஜெண்ட்ஸ் டெய்லர், மார்க்கெட், ராபர்ட்சன்பேட்டை.



We hereby certify that the above is the solution in original deposited with us by Ananda Vikatan on 18th Oct. 43 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank.

For THE INDIAN BANK, LTD.

[signature]

24.11.43. Secretary.

---


9-0850

-600 009


Editor, Printed & Published by S. S. Vasan at the Ananda Vikatan Press, 140, Pophams Broadway, Madras.


# ஈறுகளில் ரத்தம் கசியக்கூடாது

—முன் ஜாக்கிரதையாக இருங்கள்!



உடனே கவனிக்கவேண்டும்—ரத்தம்கசியும் ஈறுகள் பற் சொத்தைக்கு ஆரம்பம். கிப்ஸ் "எஸ். ஆர்." டூத் பேஸ்ட் ஈறு வியாதிகளையும் பயோரியா ஜின்ஜிவிடிஸ் முதலிய பல் வியாதிகளையும் தடுத்து கட்டுப்படுத்துகிறது. இவ்வியாதிகள் பற்களை நாசமாக்குவதுடன் அவைகளை கிறுத்தாவிடில் தேக ஆரோக்யத்தையே பாழாக்கும். அதில் உள்ள ஸோடியம் ரிஸினோலியேட் ஈறு உபாதைகளுக்கு பல் வைத்தியர்களின் சிகிச்சை. பற்களையும் ஈறுகளையும் ஆரோக்கியமாக வைத்திருக்க கிப்ஸ் "எஸ்.ஆர்." வழக்கமாக உபயோகியுங்கள்.




17-33 TM


D & W GIBBS LTD., LONDON, ENGLAND

Registered No. M. 2135

1.2.83


பொது ஜனங்களுக்கு லிவர்
பிரதர்ஸ் கம்பெனியாரின்
அறிவிப்பு நெ. 3

# சோப் அதிகநாள் நீடிக்கும்



# கவனத்துடனிருங்கள்


ஆரோக்கியமாயிருக்க, வீடு, ஆடைகள், சரீரம் இவைகள் சுத்தமாயிருத்தல் வேண்டும், இதற்காக ஒவ்வொருவருக்கும் சோப் வேண்டியது அவசியம். ஆனால், சோப் தயாரிப்பதற்கு வேண்டிய மூலப் பொருள்கள் இந்த யுத்தகாலத்தில் ஏராளமாக கிடைக்காததால், தேவைக்குப்போதிய அளவுக்கு சோப் கிடைப்பது அரிதாகிறது. ஆகவே, சிறிது கவனம் செலுத்தி, உங்கள் சோப்பை அதிக நாள் நீடித்து வரும்படி செய்யுங்கள். இதற்கு கீழேயுள்ள சில குறிப்புகள் உதவியாயிருக்கும்.



## சோப்பைத்தண்ணீரில் ஊறவைக்காதீர்கள்

உபயோகிக்கும் பொழுது சோப் சிறிது நேரங்கூட தண்ணீரிலிருக்கலாகாது. சோப வெகு சீக்கிரத்தில் கரையுமாதலால், சில நிமிஷங்கள் அநாவசியமாக ஊறினாலும் ஒரு குழந்தை குளிப்பதற்கு வேண்டிய சோப வீணாகிவிடும். ஆகையால் சோப்பை தண்ணீர் வடியும்படியாக கம்பிக் கூடையிலோ, அல்லது ஒரு கிண்ணத்திலோ வைக்கவேண்டியது. இவ்வாறு அதை உலரவைத்தால், நாள் நீடித்துவரும். கடைசிச் சிறு துண்டு வரை உபயோகிக்கலாம்.

## பழைய துண்டை புதிய சோப்புடன் ஒட்டுங்கள்



சோப்பின் கடைசி துண்டை எறிந்து விடாதீர்கள். அதையும் புதிய சோப்பையும், தண்ணீரில் நனைத்து இரண்டையுட சேர்த்து ஒட்டி, பிறகு உலர வையுங்கள் சிறிய துண்டு புதிய கட்டியுடன் ஒட்டிக்கொளவதனல் கடைசி வரை உபயோகிககலாம். இந்த முறையை ஸன்லைட, லைப்பாய், லக்ஸ் டாய்லெட் எல்லா சோப்புகளுக்கும் அனுஷ்டிககலாம்.

## ஆனால் அதிகசிக்கனமாகஇருக்கா தீர்கள்!

நீங்கள் உபயோகிக்கும் சோப் விஷயத்தில் கவனமாக இருகக வேண்டும் என்று நாங்கள் சொல்வதின் நோக்கம் சோப்பை நீங்கள் குறைத்து உபயோகிக்க வேண்டுமென்பதல்ல. சுத்தமாயிருக்க சோப் அவசியம். சரீரமும், ஆடைகளும் சுத்தமாயிருத்தல் ஆரோக்கியத்திற் கவசியம். ஆகையால் தினந்தோறும் உங்கள் ஆடைகளையும், சரீரத்தையும் சுத்தமாக வைத்துக்கொள்ளுங்கள் ஆனால் சோபபை வீணாககாதீர்கள்.

**லிவர் பிரதர்ஸ் — நல்ல சோப் உற்பத்தியாளர்கள்**

ஸன்லைட் • லைப்பாய் • லக்ஸ் டாய்லெட் • லக்ஸ்
லைப்பாய் டாய்லெட் • விம் • மங்கி பிராண்